
கல்கி



ALKI செப்டம்பர் 19, 1954 4 அணா





வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரகரப்பான பொருள்கள் பற்களில் கீறல் விழச் செய்கின்றன. இந்த கீறல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் வஸ்து உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத் தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்ததுதான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும் அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். புரஷையோ அல்லது விரலையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அன்றியும் அதன் மிருதுவான ஊடுருவிப்பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச்செய்யும்!



உங்களுக்குப் பிரியமான கிப்ஸில் க்ளோரோபில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் க்ளோரோபில் டென்டிபிரிஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவில் பெயரை கவனித்து வாங்குங்கள்.



நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்

கிப்ஸ் டென்டிபிரிஸ்

GD. 37-50 TM டி. அண்டு டபிள்யு. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி பொருளடக்கம்

மலர் 14 இதழ் 8

1954 செப்டம்பர் 19

ஜய ௵ புரட்டாசி 3


உங்களுக்கு
மிகப்பிடித்த
வனஸ்பதி
இப்போது
புதிய டின்களில்
துஷார்
வனஸ்பதி
Tushar
இன்றுமுதல் புதிய துஷார் டப்பாக்களை வாங்குங்கள்! உங்கள் மனதுக்குகந்த இந்த வனஸ்பதி வைட்டமின்கள் பெற்று, சுகாதார முறையில் பாக் செய்யப்பட்டு 10, 5, 2 பவுண்ட் டின்களில் கிடைக்கிறது.
10 lbs
Tushar
இன்றுமுதல் துஷார் கொண்ட உணவு பரிமாறுக
இலவசம்
எங்கள் இன்பண்டங்கள் செய்முறைப் புத்தகம் கேட்டுப் பெறுங்கள்.
துங்கபத்ர இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,

கல்கி

மலர் 14

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 8

பாரதியாரின் இலட்சியங்கள்

சென்ற வாரக் கடைசியில் தமிழ்நாடு எங்கும் தமிழ்ப் பெரு மக்களின் அகமும் முகமும் மலர்ந்தன; கண்களும் காதுகளும் குளிர்ந்தன.

தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் கவிச்சக்கரவர்த்தி பாரதியாரின் நாமம் ஒலித்தது; எட்டுத் திசைகளிலும் அவரது அமுத கீதங்கள் மிதந்து வந்தன; பல்வேறு சங்கங்களின் ஆதரவில் பாரதி விழாக்கள் விமரிசையாக நடைபெற்றன.

கவிச் சக்கரவர்த்தி பிறந்த எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்களின் தலைமையில் ஏராளமான மக்கள் கூடித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புத்துயிர் அளித்த மகானுக்கு அஞ்சலி செய்தார்கள்.

நாடெங்கும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போன்ற காட்சியைக் கண்டு ஆயிரக்கணக்கான பொது மக்கள் மனம் பூரித்தார்கள்.

சென்னை பாரதி சங்கத்தின் சார்பில் நடந்த பாரதி தின விழாவில் தவயோகி சுத்தானந்த பாரதியார் கவியோகி பாரதியாருக்குப் பாமாலையும் புகழ் மாலையும் சூட்டிப் பரவசம் அடைந்தார்.

அமர வாழ்வு பெற்றுப் புகழுடம்புடன் விளங்கும், தமிழர்களின் நாவிலும் உள்ளங்களிலும் வீற்றிருக்கும் பாரதியார் அன்று எல்லா இடங்களிலும் பிரசன்னமாகி யிருந்தார்.

'நான் அமரன்' என்று பாரதியார் அடிக்கடி கூறுவது உண்டு என்று யோகி சுத்தானந்தர் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

பாரதியாரின் தீர்க்கதரிசனங்கள் பலவும் பலித்து வருவதைப்போல், தமது அமர வாழ்வு பற்றி அவர் கூறியதும் பலித்ததைச் சென்ற வாரம் மக்கள் கண்டு களித்தனர்.

சென்னையில் சிறப்பாகப் பாரதி விழாக் கொண்டாடுவதன் தனிப் பொருத்தத்தைத் தவயோகி சுத்தானந்த பாரதியார் எடுத்துக் கூறினார்.

"பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்; புதுவையில் கவி சுரந்தார்; சென்னையில் புகழ் சிறந்தார்" என்று விளக்கினார்.

* * * *

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற பழமொழியைப் பொய்த்துப் போகும்படி செய்த மகிமை பாரதியார் ஒருவருக்கே உரியது.

இந்த உலகத்திலே எத்தகைய இன்னல்களையும் எதிர்த்து நிற்கும் இரகசியத்தைப் பாரதியார் மக்களுக்கு உபதேசித்ததுடன் செயலிலும் காட்டினார்.

அச்சத்தைத் தவிர்ப்பதே அந்த இரகசியம் ஆகும்.

அச்சத்தைக் காட்டிலும் பாரதியார் வெறுத்த விஷயம் வேறு எதுவுமே இல்லை.

'யாமெதற்கும் அஞ்சகிலேம் மானிடரே' என்று முழங்கினார்.

அண்டஞ் சிதறினாலும் அஞ்சாதீர்; அஞ்சி அஞ்சி வறுமைக்கும் வஞ்சகக் கவலைக்கும் இடம் கொடாதீர் என்று உபதேசித்தார்.

அச்சம் என்ற நோயால் அவஸ்தைப் படுவோரை, 'அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று நிந்தையாகப் பாடினார்.

உச்சிமீது வானமே இடிந்து விழுந்தாலும் அச்சமில்லை, அச்சமில்லை என்று வீர சங்கநாதம் செய்து, ஆண்மை ஊட்டிய பாரதியாரின் மகத்துவத்துக்கு ஈடு இணை ஏது?

பயமில்லாதவர்களுக்கு நிச்சயம் ஜயம் உண்டு என்ற தத்துவத்தை என்றும் அழியாத பசும்பொன் எழுத்துக்களால் பொறித்த கவிச்சுடரின் தெய்விக ஒளி தமிழ் மொழி உள்ளவரையில் குன்றாது விளங்கும் அல்லவா?

பாரதியாரின் இலட்சியங்களில் மிகவும் முக்கியமான இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறி விட்டது. பாரத தேசம் அன்னியர் அடிமைத்தனத்திலிருந்து நீங்கிப் பூரண சுதந்திரம் பெற்று விட்டது.

" பூரணமான சுதந்திரம் பெற்றோம்
புதுயுக மனிதராய்ப் பொலிந்தோம்
தாரணி முற்றும் சரிநிகர் ஆனோம்
தலைநிமிர்ந்து ஆண்பெண்ணும் நடந்தோம்
ஆழு தனிய கலைவளஞ் செழித்தோம்
அச்சமாம் பேயினை ஒழித்தோம்
பாரதி வீரக் கனிரச விருந்தாம்
பாமணம் பரவிய நாளே !"

என்று யோகி சுத்தானந்த பாரதியாரும் பாடி மகிழ்ந்து விட்டார்.

ஆனால் பாரதியாரின் இலட்சியங்களில் இன்னும் பூரணமாக நிறைவேறாத இலட்சியங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

" இல்லையென்ற கொடுமை உலகில்
இல்லையாக வைப்போம் !"

என்ற பாரதியாரின் வாக்கு இன்னும் நமது நாட்டிற்குள்ளேயே நிறைவேறவில்லை; விரைவில் நிறைவேறும் என்பதற்குரிய அறிகுறிகளும் காணப் படவில்லை.

ஒரு பக்கத்தில் "கல்வி இல்லை" என்ற கூக்குரல் எழுகிறது. நூற்றில் எண்பத்தைந்து பேர் வீதம் இன்னும் எழுத்தறிவில்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். நூறு குழந்தைகளில் ஐம்பத்தைந்து குழந்தைகள் இன்னும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படாமலே இருக்கிறார்கள்.

போதிய அளவு பள்ளிக்கூடங்கள் இல்லை; இருக்கிற பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் போதவில்லை; ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதவில்லை.

கல்வி யறிவு படைத்தவர்களுக்குப் போதுமான வேலை யில்லை; வேலை யுள்ளவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை.

நோய்ப்பட்டவர்கள் சிகிச்சை செய்துகொள்ளப் போதிய வைத்தியசாலைகள் இல்லை; பயிற்சி பெற்ற வைத்தியர்களும் இல்லை.

வறுமையின் கொடுமையைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை.

" வருத்தமழிய வறுமை யொழிய
வைய முழுதும் வண்மை பொழிய
வேண்டுமடி எப்போதும் விடுதலை !"

என்று பாரதியார் பாடினார். அத்தகைய விடுதலை 'வருத்தமும் வறுமையும் ஒழிந்த' விடுதலை, இன்னும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்குக் கிட்டவில்லை.

பாரதியாரின் தேச சுதந்திர இலட்சியத்துக்கு அடுத்தபடியாக அவர் கொண்டிருந்த முக்கியமான இலட்சியம் வறுமைப் பிணியை ஒழிக்கும் இலட்சியமே யாகும். அந்த இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

அறிக்கைகளின் கதி!



கோவாப் பிரச்னையை நேர்மையாகத் தீர்க்கும் உத்தேசம் போர்ச்சுகல் சர்க்காருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

"சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!"

என்று பாரதியார் பாடினார். இந்த இலட்சியம் கொள்கையளவில் இப்போது அனைவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. இன்னும் வாழ்க்கையிலும் செயலிலும் பூரணமாக நிறைவேறவில்லை. சாதிப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிகளும் பிரசாரங்களும் வளர்ந்து வருகின்றன. பாரதியின் வாக்கு இந்தத் துறையிலும் நிறைவேற வேண்டும்.

பாரதியார் தமிழன்னையை எவ்வித மெல்லாம் போற்றிப் பாமாலை புனைந்து அளித்திருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!"

என்று பாரதியார் பாடினார். ஆயினும் நம்மவர்களை விட்டு அன்னிய மொழி மோகம் இன்னும் நீங்கி விட்டதாகச் சொல்ல முடியாது.

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு!"

என்று பாரதியார் தமிழ்நாட்டின் எல்லையைத் திட்டமாக வகுத்துப் பாடி வைத்துவிட்டுச் சென்றார்.

இன்றைக்கு அவர் குறிப்பிட்ட இரண்டு எல்லைகளும் தமிழ் நாட்டைச் சேர்ந்தனவாக இல்லை. திருப்பதி ஆந்திர ராஜ்யத்திலும் குமரி முனை திருவாங்கூர் ராஜ்யத்திலும் இருந்து வருகின்றன.

தமிழகத்தின் எல்லை சம்பந்தமான பாரதியாரின் இலட்சியமும் நிறைவேற வேண்டும். அதற்கான பிரயத்தனங்களைச் செய்வதை ஒவ்வொரு தமிழரும் தமது முதன்மையான கடமையாகக் கருத வேண்டும்.

இவ்விதம், பாரதியாரின் பாடல்களில் பொதிந்து கிடக்கும் இலட்சியங்கள் அனைத்தும் நமது காலத்தில் நிறைவேறவேண்டும் என்று பிரார்த்திப்போமாக. அதற்கான முயற்சிகளைச் செய்வோமாக. அம் முயற்சிகளுக்குப் பாரதியாரின் பாடல்களே நமக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய தெய்வீக சக்தி வாய்ந்த பாரதி பாடல்களை நினைவூட்டிக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் பாரதி விழாக் கொண்டாடுதல் தக்க வாய்ப்புத் தரும் சந்தர்ப்பம் அன்றோ!

பொறுமையைச் சோதிக்க வேண்டாம்

ஒரு நபர் தம்மிடம் வேலைக்கு வந்தவனின் பொறுமையைச் சோதிக்க விரும்பினார்; அதற்கிணங்க அவர் அவனிடம் ஓட்டைப் பாத்திரத்தைக் கொடுத்து, அதை நிறையத் தண்ணீர் மொண்டு வரும்படி கூறினார் என்று ஒரு கதை உண்டு. அது போன்ற சோதனைக்கு இப்போது இந்தியப் பொது மக்கள் உள்ளாகி யிருக்கிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சர்க்கார் கடன் கேட்டால், குறிப்பிட்ட தேதிக்குள் அவர்கள் கேட்டதைக் காட்டிலும் அதிகமாகப் பொது மக்கள் கொடுத்து விடுகிறார்கள். சமீபத்தில் தேசியத் திட்டக் கடனுக்குப் பொது மக்கள் நாற்றைம்பது கோடி ரூபாய் வரை கொடுத்து, தங்களுடைய நம்பிக்கையை, ஆதரவை, தேச நலனில் தங்களுக்குள்ள ஆர்வத்தைத் தெரிவித்தார்கள். எத்தனை வரிகள் போட்டாலும் முணுமுணுக்காமல் கொடுத்தும் வருகிறார்கள். அப்படியிருந்தும், அவர்கள் கொடுக்கும் தொகை சரிவர உபயோகிக்கப்படுவதில்லை என்றால், அது வருந்தத்தக்க விஷயம் அல்லவா!

பொது மக்கள் கொடுக்கும் தொகையில் ஒரு பகுதி சர்க்காரின் திறமையின்மை யாகிற துவாரத்தின் வழியாக வீணாகி விடுகிறது என்பதற்கு உதாரணமான பல நிகழ்ச்சிகள் அடிக்கடி வெளியாகி வருகின்றன. ஜீப் ஊழல், யந்திர எரு ஊழல் போன்ற பல ஊழல்கள் பொது ஜனங்களின் பல லட்சக்கணக்கான தொகையை விழுங்கிஏப்பமிட்டு விட்டன. ஆனால் மேற்படி ஊழல்களின் கதை அத்துடன் முடிந்து விட்டதாகத் தெரியவில்லை.

'சென்ற வாரம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப் பட்ட 1952-ம் வருஷக் கணக்குப் பரிசீலனை அறிக்கையிலிருந்து (ஆடிட் ரிப்போர்ட்) மற்றும் பல ஊழல்கள் வெளியாகியுள்ளன.

1. அயல் நாடு ஒன்றில் இந்தியத் தூதர் காரியாலயச் சிப்பந்திகளுக்காக ஹோட்டல் நடத்திய வகையில் ரூ. 1,40,519 நஷ்டம் ஏற்பட்டது.

2. நேபாள அரிசி வாங்கிய இனத்தில் ரூ. 36,62,717 நஷ்டம் உண்டாயிற்று.

3. 106 மான்யங்களில் 92 மான்யங்களின் பணம் மீந்து விட்டது.

4. பார்லிமெண்டு அனுமதித்த 94 உப மான்யங்களில் 23 அனாவசியமானவை.

5. இங்கிலாந்தில் இந்திய சர்க்கார் கொடுத்த பென்ஷன் தொகையான சுமார் நாற்பதாயிரம் பவுனுக்கு வருமான வரி வசூலிக்கப்படவில்லை.

சர்க்கார் கணக்கு பரிசீலனை அறிக்கையிலிருந்து மேலே குறிப்பிட்ட நிதி நிர்வாக ஊழல்கள் வெளியாகி யிருக்கின்றன.

எனவே, இத்தகைய ஊழல்களை சர்க்கார் நன்கு விசாரித்து அவற்றிற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டும். இனி அவ்வித ஊழல்கள் நடைபெறாமல் இருப்பதற்குற்ற கண்டிப்பான நடவடிக்கைகளைக் கைக் கொள்ள வேண்டியது மிகவும் அவசரம் ஆகும்.

ஆலையும் குடிசைத் தொழிலும்

'கிராமங்களுக்குப் போங்கள்' என்ற பல்லவியை அடிக்கடி கேட்கிறோம். பாரத நாட்டின் கபிட்சத்துக்குக் கிராமங்களே உயிர் நாடி என்றும் இடை விடாமல் கூறப்படுகிறது. இந்தியாவின் எதிர்கால வாழ்வு அதன் கிராம ஜனங்களின் நல் வாழ்வையே பொறுத்திருக்கிறது என்று கூறாத அதிகாரிகளும் இல்லை. ஆனால், கிராம மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத குடிசைத் தொழில்களின் உத்தாரணத்துக்காக உருவான, கணிசமான முறைகள் எதுவும் இது வரை கைக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

உதாரணமாகப் பாருங்கள்:

இந்தியாவில் உள்ள பஞ்சு ஆலை, சணல் ஆலைத் தொழில்களில் சிக்கன சீரமைப்புத் திட்டத்துக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்; ஆனால் தொழிலாளர்கள் வேலையை இழக்கும்படி நேராமல் சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பார்லிமெண்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. இது கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற கதையாகவே இருக்கிறது.

தொழில் சீரமைப்புத் திட்டத்தின் பலனாக புதிய யந்திர வகைகள் இறக்குமதியாகும். ஏராளமான தொழிலாளர்களின் வேலையை அந்த ராட்சத யந்திரங்கள் செய்துவிடுமாதலால், அவர்கள் எல்லோரும் வேலையின்றித் தவிக்க நேரும்.

மேற்படி ஏற்பாட்டினால் மற்றொரு விபரீதமும் உண்டாவதற்கு இடமிருக்கிறது. புதிய யந்திர வகைகள் வருவதன் மூலம் குறிப்பாகப் பஞ்சு ஆலைகளில் உற்பத்தி பன்மடங்கு பெருகும். அதனால் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு மறுபடியும் ஆபத்து ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

** ** **

சணல் ஆலைத் தொழில் சம்பந்தப்பட்டவரையில் சீரமைப்புத் திட்டத்தை, அதாவது புதிய யந்திர வகைகளை இறக்குமதி செய்து அபிவிருத்தி செய்வதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். சணல் தொழிலில் முன்னேற்றம் அடைந்துள்ள வெளி நாடுகளுடன் இந்தியா போட்டியிட வேண்டியிருக்கிறது. தவிர, சணல் தொழில் குடிசையில் தனிப்பட்டவர்கள் நடத்தக் கூடிய தொழில் அல்ல.

ஆனால், பஞ்சு ஆலைகளின் விஷயம் முற்றிலும் வேறாகும். ஏற்கனவே பஞ்சு ஆலைகளுக்கு அதிக ஆதரவும் சலுகைகளும் காட்டியதாலேயே இந்தியாவில் கைத்தறி நெசவுத் தொழில் நசிக்கலாயிற்று. அதன் விளைவாக இந்தியா முழுவதும் கோடி பேர்கள் வரையில் வேலையிழந்து, பட்டினி கிடந்து தவித்தனர். பிறகு எழுந்த கிளர்ச்சியின் பலனாகக் கைத்தறி நெசவுத் தொழில் மறுபடியும் உயிர் பெறத் தொடங்கியிருக்கிறது. இந் நிலைமையில், பஞ்சு ஆலை சீரமைப்புத் திட்டத்தின் விளைவாக மறுபடியும் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதகம் ஏற்படுமோ என்ற கலக்கம் உண்டாவது இயல்பே.

பஞ்சு ஆலைச் சீரமைப்புத் திட்டத்தைப் பற்றி பார்லிமெண்டில் பேசிய பிரஜா-சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ அசோக் மேத்தா, அதற்குப் பதிலாகக் கைத்தறி நெசவாளர்களுக்கு மின்சார விசைத் தறிகள் கிடைப்பதற்கு வசதிகள் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அப்படிச் செய்தால்தான் கைத்தறி ஜவுளிகளின் உற்பத்தி அதிகமாவதற்கு வழி ஏற்படும். அவ்வாறு குடிசைத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது இன்றுள்ள நிலைமையில் சர்க்காரின் முதற் கடமையாகும்.

அதை விட்டு விட்டுப் பஞ்சு ஆலைகளைப் பெருக்குவதால் ஏற்படும் வேலையற்றோர் பிரச்னையைத் தீர்க்கச் சர்க்கார் சகல முறைகளையும் எடுத்துக் கொள்வார்கள் என்று இந்திய சர்க்கார் சார்பில் அளிக்கப்படும் ஆறுதல் திருப்தியைக் கொடுப்பதற்கில்லை. சீரமைப்புத் திட்டம் அமுலுக்கு வரும் மில்களுக்குத் தீர்வை விதித்து, அத்தொகையைக் கொண்டு வேலையற்றோருக்கு உதவி அளிக்க முற்படுவதால் கணிசமான பலன் ஏற்படாது. அவ்வாறு செய்வது, இராத ஒரு புதிய பிரச்னையைச் சிருஷ்டித்துக் கொண்டு, அதற்குப் பரிகாரம் தேடுவதாகவே முடியும்.

கவலை தரும் காரியம்

கொழும்பு, செப். மீ 12—உ.

இலங்கையின் சமீப காலத்திய போக்கு எவ்வளவு விபரீதமாக மாறிக் கொண்டு வருகிறதென்பதற்கு இவ்வாரம் இங்கு நிகழ்ந்துள்ள சில சம்பவங்கள் இந்தியாவுக்கு மட்டுமல்ல, சுதந்திரமடைந்த ஆசியா நாடுகள் எல்லாவற்றுக்குமே ஆழ்ந்த கவலையைக் கொடுத்திருக்க வேண்டும். சென்ற ஏப்ரல் மாதம் இங்கு நடைபெற்ற தென் கிழக்கு ஆசியப் பிரதம மந்திரிகளின் மகாநாட்டின்பொழுது, இலங்கை, பாகிஸ்தான் பிரதமர்கள் இருவருமாகச் சேர்ந்து உலக அரசியலில் இந்தியாவுக்கும் அதன் அபிப்பிராயங்களுக்கும் இருந்து வரும் செல்வாக்கை ஆங்கிலோ அமெரிக்க வல்லரசுகளின் தூண்டுதல் பேரில் முறியடிக்க முயற்சித்தது பகிரங்க ரகசியம். பர்மாவும் இந்தோனேஷியாவும் இந்தியாவுக்கு உறுதியான பக்கபலமாயிருந்தபடியினால் இலங்கை, பாகிஸ்தான் பிரதமர்களுடைய எண்ணம் சாயவில்லை. இந்தத் தோல்வியை அடுத்து ஆசியாப் பிரதேசங்களில் அமெரிக்க ஆதிக்கத்தைப் பெருக்கும் வகையில் இலங்கை காரியங்கள் செய்து வருவதைக் கண்டு வர்த்தக மந்திரியாயிருந்த ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகா தமது பதவியை ராஜிநாமாச் செய்தார்.

இவ்வாரம் ஸ்ரீ சேனநாயகா நிகழ்த்திய பிரசங்கமொன்றில் பிரதமரின் அமெரிக்க விஜயம் அபாயகரமானதென்றும் அங்கு என்ன ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திடுவாரென்பது ஆண்டவனுக்குத்தான் தெரியுமென்றும் கூறி விட்டு, "ஸியாட்டோவில் சேர வேண்டுமென்பதுதான் நமது பிரதமரின் அந்தரங்க ஆசை. இதற்கு வேண்டியதை யெல்லாம் மறைமுகமாகச் செய்து வருகிறார். நான் சொல்லுவது பொய் யென்றால் பொய்யென்று பகிரங்கமாக அவர் சொல்லட்டும், பார்க்கலாம்!" என்று சவால் விடுத்தார்.

இதற்குப் பிரதமர் பதில் சொல்ல வேண்டிய அவசியம் பார்லிமெண்டில் ஏற்பட்டது. பிரதம மந்திரியின் அமெரிக்க அனுதாபத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் பார்லிமெண்டில் பின்னிப் பின்னி இழுத்தபோது பிரதமர் சொன்னார்: "ஸியாட்டோவைப் பற்றி நாம் ஏன் பயப்பட வேண்டும்! அதில் நன்மையிருக்கும் போலத் தோன்றினால் அதில் சேருவதைப் பற்றி ஆராய்வோம். இல்லாவிட்டால் சும்மா இருப்போம். பிறர் தாக்கினால் தற்பாதுகாப்புக்கு ஸியாட்டோ மிகவும் உதவியாயிருக்குமென்று பாகிஸ்தான் நினைக்க ஆரம்பித்திருக்கிறது. பிரிட்டன் ஸியாட்டோவில் சேர்ந்திருப்பதினாலும் நமது திருகோணமலை கட்டுநாயகா தளங்களைப் பிரிட்டனுக்கு நாம் கொடுத்திருப்பதினாலும் யுத்தத்தில் பிரிட்டன் ஈடுபட நேரிட்டால் நாமும் அதில் ஈடுபட வேண்டுமென்ற கட்டாயமா!"

இலங்கையில் அமெரிக்க ஆதிக்கம் நன்றாக வேரூன்றி வருவது பொதுவாக அமெரிக்காவை ஆதரிப்பதாகக் கருதப்படும் "டெயிலி நியூஸ்" பத்திரிகைக்குக் கூட கவலையை உண்டுபண்ணி




நான் கிளாக்ஸோவை சிபார்சு செய்கிறேன்

உஷ்ண தேசங்களில் உள்ள குழந்தைகளுக்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள கிளாக்ஸோ மிகவும் சுத்தமான பால் உணவு. மேலும் ஒழுங்காக சமநிலையாக்கப்பட்டது. புதிய பசும்பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட கிளாக்ஸோவில் அயமும், விடமின் 'டி' யும் சேர்ந்திருப்பதால், இரத்தசோகை (அனீமியா), ரிக்கெட்ஸ் போன்ற வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது. கிளாக்ஸோ தாய்ப்பாலைப்போல் இருப்பதால் அது கொடுக்கப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், திடகாத்திரத்தோடும், குதூகலமாகவும் வளருகின்றனர்.

Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான சிறந்த உணவு



பாரெக்ஸ் — தாய்மார்களுக்கு ஓர் முக்கிய செய்தி! குழந்தைகளுக்கு முதலாவதாக கொடுக்க வேண்டிய கெட்டியான உணவு இந்தியாவில் மறுபடியும் விற்கப் படுகிறது.

கிளாக்ஸோ லெபாரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட் பம்பாய், கல்கத்தா, மதருஸ்

"அற்புதமான ஐந்து வருடங்கள்! உற்பத்தியைப் பெருக்கி உருவாக்க வேண்டிய காலம்! என் குழந்தைக்கு ஆரோக்கிய விருத்தியும் இலவசப் படிப்பு வசதியும் இனி கிடைக்கும். மேலும் கஷ்டப்பட்டு உழைத்தால் எங்களுக்கென ஒரு வீடும் கட்டிக்கொண்டு கவலையற்று வாழலாம்."

ஐந்து வருடத் திட்டத்தின் தொகையில் சுமார் கால்பாகம் பொது ஜன சேவையை மேலும் விஸ்தரித்து மேம்பாடடையச் செய்வதற்காகச் செலவிடப்படும். 13,000 புதிய டாக்டர்களுக்கும், 20,000 நர்ஸ்களுக்கும் பயிற்சி அளித்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 425 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1956-ம் வருடத்திற்குள் ஆறு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களில் 60 சதவீதத்துக்கு மேல் நமது 2,02,142 ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பார்கள். இந் நெடுநோக்கிய திட்டம் நம் வருங்கால வாழ்க்கையில் நம்பிக்கையை திடப்படுத்துகிறது. உண்மையில் இதுவே....

வருங்காலத்திற்கு ஓர் வாக்குறுதி

இவ்வைந்து வருடத்திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் பல்லாயிரக் கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையை செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்ற விதங்களில் ஈடுபடும்.

தி டாடா அயரன் அண்ட் ஸ்டீல்
கம்பெனி லிமிடெட்



யிருக்கிறது. இப் பத்திரிகை இவ்வாரம் எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில் அமெரிக்க சுதந்திரக் கமிட்டி கல்வி கலாசாரத் துறைகளில் சேவை செய்யும் போர்வையில் லட்சக்கணக்கான ரூபாய்களை இலங்கையில் செலவழித்து அமெரிக்கக் கொள்கைகளுக்குப் பொதுஜனங்களின் ஆதரவைப் பெற்று வருவதையும் இந்த ஆபத்தான விஷயத்தில் அரசாங்கம் அலட்சியமாயிருப்பதையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அடுத்த மாதம் பிரதமர் கொத்தலாவலை அமெரிக்காவுக்கு விஜயம் செய்கிறார். திரும்பி வருகையில் கப்பல் கப்பலாக டாலர்களைக் கொண்டு வந்து குவித்துப் பொதுஜனங்களின் ஆதரவைப் பெற்று விடலாமென்று அவர் கனவு காணலாம். ஆனால் அந்த டாலர் கப்பல்களோடு இலங்கைக்கு அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு அபாயமும் வருமென்பதை முன்னாள் வர்த்தக மந்திரி ஆர். ஜி. சேனநாயகா சரியான சமயத்தில் கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் அடியோடு ஒழித்துக் கட்டி சர்வ சிங்கள ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயர்சி நடக்கும் தறுவாயில் தமிழ் மக்களுக்குச் சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் அளிக்கக் கூடிய ஒரு சம்பவமும் இவ்வாரம் நடந்திருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் கைத்தொழில் மந்திரியுமான ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவருடைய தேர்தலை ஆட்சேபித்துத் தொடரப்பட்டிருந்த வழக்கில் இவ்வாரம் வெற்றி பெற்றுவிட்டார். இனி அரசியலில் அவர் அதிதீவிரமாக ஈடுபடுவாரென்று தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். இக்தலைவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு விரோதமாகவும், தமிழ் மக்களை நசுக்க முயற்சிக்கும் குமாரத்துடன் ஒத்துழைத்தும் அவர் இடையில் கொஞ்ச காலம் செயலாற்றி வந்தது உண்மைதான். இதைக் கொண்டு அவருடைய பேச்சுத் திறமையும் தலைமை தாங்கும் திறமையும் அவருடைய ஜன்மப் பகைவர்கள் கூட சிறுமைப்படுத்தி விட முடியாது. தமிழர்களுக்கு மிக மிகக் கடுமையான அபாயகரமான சோதனை யேற்பட்டிருக்கும் இத் தருணத்தில் ஆண்டவனைப் பார்த்துத்தான் ஸ்ரீ பொன்னம்பலம் மீண்டும் தமிழ்ச் சமூகத்துக்கு முன் போலத் தலைமை வகித்து நடத்தத் தேர்தல் வழக்கில் அவருக்கு வெற்றியை அளித்திருக்கிறார். ஸ்ரீ பொன்னம்பலமும் வெற்றி பெற்று கோர்ட்டிலிருந்து வெளியில் வந்தவுடன் அந்த முருகப் பெருமானைத் தரிசித்து அவருடைய ஆசியைப்பெறவே முதலில் சென்றார்.

இன்றையச் சோதனையில் தமிழ் மக்களுக்குத் தலைமை வகித்து நடத்த ஸ்ரீ பொன்னம்பலத்தைப் போன்ற உத்வேகமும் ஆவேசமும் அபாரத் திறமையும் உடைய ஒரு தலைவரே தேவை. சர்க்காருடன் ஒத்துழைத்த கசப்பான காலத்தின் அனுபவங்கள் அவருடைய சமுதாயப் பற்றை மேலும் பன்மடங்கு அதிகரித்து உரிமைப் போராட்டத்தின் சேனாபதி ஸ்தானத்தை உறுதியுடன் வகிக்கும் ஆற்றலையும் உற்சாகத்தையும் அவருக்கு அளித்திருக்க வேண்டும்.

தமிழ்க்கடவுளான ஸ்ரீ முருகப்பெருமான் அவருக்குப் போதிய திடசித்தத்தை அளித்துத் தமிழ்ச் சமூகத்தைச் சரியான பாதையில் வழி நடத்திச் செல்லும் ஆர்வத்தையும் அளிக்க வேண்டுமென்பதுதான் எல்லோருடைய பிரார்த்தனை. —ரஜனி



ஐந்தாம் அத்தியாயம்

வண்டி நின்றது

என் தந்தை மந்திரமூர்த்தி வாழ்க்கையில் பல வெற்றி தோல்விகளைக் கண்டவர். குங்குமத்துறை ஜமீன்தாரின் விரோதங் காரணமாக அவர் நீதிமன்றத்தில் பல வழக்குகள் நடத்தும்படி நேர்ந்தது. முதலில், சிறிய சில எல்லைத் தகராறுகளில் விரோதம் உண்டாயிற்று. விரோதம் பல வடிவங்கள் எடுத்தது. மந்திர மூர்த்தியின் சுவீகாரத் தகப்பனாருடைய உறவினர் பலரை ஜமீன்தார் தூண்டிவிட்டு, அவருடைய சுவீகாரம் சட்டப்படி செல்லத் தக்கதன்று என்று வழக்காடச் செய்திருந்தார்.

இம்மாதிரி நடந்த சில வழக்குகளில் மந்திர மூர்த்தி நிச்சயமாகத் தமக்கு வெற்றி கிட்டும் என்று நம்பியிருந்த போது, "வழக்கு தோல்வி அடைந்தது" என்பதாகத் தந்திச் செய்தி கிடைக்கும். அச்செய்திகள் என் தந்தைக்குக் கலக்கம் அளிப்பது இயல்பேயல்லவா?

"ஆனால், இந்துமதி! எவ்வளவோ பெரு முயற்சி செய்து வைத்தியரை அழைத்துக் கொண்டு நான் பரக்கப் பரக்கத் திரும்பி வந்து பார்த்தபோது, உன்னுடைய பெற்றோர்கள் போய் விட்டார்கள் என்றதும் நான் அடைந்த மனக் கலக்கத்தைப் போல் அதற்குமுன் எந்த நாளிலும் அடைந்ததில்லை. காசிலிங்கம் என்னைப் பார்த்து 'மரம்போல் நிற்கிறீரே?' என்று இரண்டு மூன்று தடவை சொன்னார் அல்லவா? உண்மையில் இப்போது மரம் போலவே நின்று விட்டேன். வைத்தியர் என்னைப் பார்த்து 'இது என்ன மூடத்தனம்?' என்று இங்கிலீஷிலும் தமிழிலும் மாற்றி மாற்றிக் கேட்டுக் கொண்டிருந்த போதெல்லாம், என்னால் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே முடியவில்லை. கடைசியில், அவர் கையில் பத்து ரூபாயைக் கொடுத்து, குதிரை வண்டிக் காரனுக்கும் சத்தத்தைக் கொடுத்து அனுப்பினேன்!" என்று என் தந்தை அடிக்கடி அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லுவார்.

பிறகு அவர் சத்திரத்து அம்மாளிடம் "ஏன் அவர்கள் போய் விட்டார்கள்? எப்படிப் போனார்கள்? என்ன சொல்லி விட்டுப் போனார்கள்?" என்றெல்லாம் பன்னிப் பன்னி விசாரித்தார். அந்த அம்மாளுக்கும் விவரமாக ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. அவளுடைய காதில் விழுந்த சிற்சில வார்த்தைகளை மட்டும் சொன்னாள்.

"நீங்கள் போன பிறகு அவர்கள் ஏதோ சில சமயம் இரகசியமாகவும் சில சமயம் உரத்த குரலிலும் பேசிக் கொண்டிருந்தார்கள். இராத்திரியெல்லாம் அவர்கள் இப்படியே பேசிக் கொண்டிருந்தபடியால், நான் காது கொடுத்துக் கவனித்துக் கேட்கவில்லை. எப்படியும் நீங்கள் எல்லாரும் இன்னும் ஒரு வேளை இங்கே சாப்பிட்டு விட்டுத்தான் போவீர்கள் என்று எண்ணிச் சமையலுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். 'போலீஸ்' என்ற வார்த்தை காதில் விழுந்ததும் கொஞ்சம் கவனித்துக் கேட்டேன். 'டாக்டரை அழைத்து வருகிறாரா அல்லது போலீஸைத் தான் அழைத்து வருகிறாரா?' என்றான் அந்தப் பிள்ளை. 'அப்படி மனத்தில் சந்தேகத்தை வைத்துக் கொண்டு இங்கே காத்திருப்பானேன்? உடனே புறப்பட்டு விடுவோம்!' என்றாள் அந்தப் பெண். போலீஸ் என்றதும் எனக்கும் சற்றுப் பயமாய்ப் போய் விட்டது. முன்னமேயே

அவர்களுடைய நடவடிக்கைகள் அவ்வளவாக எனக்குப் பிடிக்கவில்லை. ஏதோ உங்களுடைய முகத்துக்காக அவர்களுக்கு அத்தனை உபசாரம் செய்தேன். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பது போல் அவர்களே போலீஸுக்குப் பயப்பட்டபடியால், எனக்கும் சந்தேகம் அதிகமாகி விட்டது. அவர்களை 'ஏன் புறப்படுகிறீர்கள்?' என்று கூட நான் கேட்கவில்லை. 'அவர் வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தால், என்ன சொல்லட்டும்?' என்று மட்டும் கேட்டேன். 'அவசர காரியம் இருந்தபடியால் போய் விட்டார்கள் என்று சொல்லுங்கள். இல்லாவிடில், நீங்கள் ஒன்றுமே சொல்ல வேண்டாம். உங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி விடுங்கள்' என்றான். அந்தப் பெண் அவனிடம் 'இந்த அம்மாளுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா?' என்று இரகசியமாகக் கேட்டாள். அவனும் சட்டைப் பையைத் துளாவினான். ஏதாவது இருந்தால்தானே கையில் அகப்படும்? 'அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்! அந்தப் பெரிய மனிதர் உங்களுக்கும் சேர்த்து ஐந்து ரூபாய் கொடுத்து விட்டார்!' என்றேன். 'பார்த்தாயா, இந்து? அவர் ஏன் பணம் கொடுக்க வேண்டும்?' என்றான் அந்தப் பையன். இதற்குள், பஸ் வந்துவிட்டது. காலை நேரமாதலால் பஸ்ஸில் கூட்டம் அதிகம் இல்லை. இருவரும் ஏறிக் கொண்டு போய் விட்டார்கள்! இந்தக் காலத்தில் யாருக்கும் உபகாரம் செய்வது கூட யோசித்துச் செய்ய வேண்டியிருக்கிறது. பாருங்கள், ஐயா! தங்களைப் போன்ற பரோபகாரியை அவர்கள் சந்தேகித்தார்கள் என்றால், என்னத்தைச் சொல்கிறது? காலம் அவ்வளவு கெட்டுப் போய் விட்டது! பொய், சூது, வஞ்சனைக் காரர்களுக்குத்தான் காலமாயிருக்கிறது. நல்ல மனம் படைத்த உத்தமர்களுக்குக் காலமில்லை!"

இவ்வாறு சந்திரத்து அம்மாள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மந்திரமூர்த்தி பெருமூச்சு விட்டார். அந்த அம்மாள் சொன்னது உண்மை என்றே அவருக்கும் தோன்றியது.

மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுப்பதற்கு யத்தனித்தார். "வேண்டாம், ஐயா, வேண்டாம்! ஐந்து ரூபாய்க்கு மேல் நான் தங்களிடம் வாங்கிக்கொள்ளலாமா? என் மகன் கொஞ்ச நாட்களாக வேலையில்லாமலிருக்கிறான். அவன் சம்பாதித்துக் கொண்டிருந்தால் இது கூட நான் உங்களிடம் வாங்கிக் கொண்டிருக்க மாட்டேன். என் மகனுக்குச் சிபாரிசு செய்து ஒரு வேலை வாங்கிக் கொடுத்தால் உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. அவனை வரச் சொல்லட்டுமா?" என்றாள் சந்திரத்து அம்மாள்.

"ஆகா! வரச் சொல்லுங்கள்! என்னால் முடிந்ததைச் செய்கிறேன்!" என்று சொல்லி விட்டு மந்திரமூர்த்தி உடனே சாலைப் பக்கம் போய் விட்டார். அங்கே மரத்தில் மோதி முன் பக்கமெல்லாம் நசுங்கிக் கவிழ்ந்து கிடந்த மோட்டார் பஸ்ஸைப் பார்த்துக் கொண்டே வெகு நேரம் நின்றார். முதல் நாள் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய அநுபவமும், அதிலிருந்து அவர் கட்டிய ஆகாசக் கோட்டையும், அந்தக் கவிழ்ந்த பஸ்ஸைப் போலவே சிதைந்து உருத் தெரியாமற் போய் விட்டதாக எண்ணினார்.

அடுத்த பஸ் வந்ததும், அதில் ஏறிக் குங்குமத்துறை சென்றார்.

* * *

குங்குமத் துறை என்னும் எங்கள் ஊரை நினைத்தாலே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது. இந்தச் சிறைச் சாலையில் தனி அறையில் அடைபட்டுக் கிடக்கும் போதுதான் எங்கள் ஊர் எவ்வளவு அழகான ஊர் என்பதை நன்றாக உணர முடிகிறது. நான் பிறந்தது முதல், பதினெட்டு ஆண்டு காலம், குங்குமத் துறையில் நான் ஆனந்தமாக வாழ்ந்திருந்தேன். வானத்தில் பறக்கும் பறவையைப் போல் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்தேன். வனத்தில் அலையும் மானைப் போல் துள்ளி விளையாடிக் காலங் கழித்தேன். பட்சிகளுக்கும் மான்களுக்கும் அபாயங்கள் உண்டு; பயங்கள் உண்டு. நானோ பதினெட்டுப் பிராயம் வரையில் எவ்விதக் கவலையும் பயமும் அறியாதவளாக வாழ்ந்தேன். என்னை வளர்த்த தந்தையின் அன்பும் ஆதரவும் உலகத்திலேயே எனக்கு நிகரில்லை என்பதாக எண்ணிக் குதூகலமாக வாழ்வதற்குக் காரணமாயிருந்தன.

குங்குமத்துறையிலும் அதன் அக்கம் பக்கத்திலும் உள்ள ஒவ்வொரு இடத்-





துக்கும் ஒரு தனித்தனி அழகு உண்டு; அந்த அழகிய காட்சிகள் ஒவ்வொன்றும் என் உள்ளத் திரையில் பதிந்திருக்கின்றன. நினைத்துப் பார்த்தால் அப்படியே என் மனக்கண்முன் வருகின்றன.

எங்கள் ஊர் மலை அடிவாரத்தில் இருக்கின்றது. மலை அடிவாரங்கள் வெறும் கட்டாந் தரையாகவும் மொட்டைப் பாறைகளாகவும் இருப்பதை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். சில முட் புதர்களைத் தவிர வேறு பசுமையான செடிகளோ மரங்களோ இல்லாத மலை அடிவாரங்கள் எத்தனையோ உண்டு. குங்குமத்துறையைச் சூழ்ந்த பிரதேசம் அத்தகையது அன்று. ஆண்டுதோறும் இரண்டு பருவங்களில் அங்கே மழை பெய்யும். ஊரைச் சுற்றி மூன்று பக்கங்களில் நெடிய குன்றுகள் நிரைநிரையாய்க் காட்சி அளிக்கும். அக் குன்றுகளில் எல்லாம் மொட்டைப் பாறைகளையே பார்க்க முடியாமல் செடி கொடிகள் முளைத்திருக்கும். குன்றுகளின் அடி வாரங்களில் நெடிய மரங்கள் வளர்ந்



திருக்கும். குன்றுகளிலிருந்து மூன்று இடங்களில் பால் நிறத்து அருவிகள் 'சோ' வென்று விழுந்து கொண்டிருப்பதையும் பார்க்கலாம்.

ஊருக்குள் சாலைகள் எல்லாம் சமதரையில் அமைந்தவையாக இரா. செங்குத்தாக மேலே ஏறும் சாலைகளும், கிடுகிடு பள்ளமாகக் கீழே இறங்கும் சாலைகளும் உண்டு. அது போலவே மேட்டுப்பாங்கான இடங்களில் கட்டிய வீடுகளும், பள்ளங்களில் கட்டிய வீடுகளும் உண்டு. சாலை ஓரங்களிலும் வீடுகளின் முகப்புக்களிலும் பக்கத்துத் தோட்டங்களிலும் பலவகை மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கும். அவற்றில் புன்னை மரங்களும் தென்னை மரங்களும் அதிகம். பலா மரம், மாமரம், கொன்னை மரம் முதலியவையும் உண்டு. அருவி விழுந்து கால்வாய்களாக ஓடும் இடங்களில் கடம்ப மரங்களும் அதிகம் உண்டு.

சாலைகளின் திருப்பங்கள் உள்ள இடங்களில் மேடை அமைத்து ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும். எந்த மூலை திரும்பினாலும் மரத்தடியில் ஒரு விநாயகர் இருப்பார்; அல்லது ஒரு சிறிய மண்டபத்துக்குள் முருகப் பெருமான் வீற்றிருப்பார்; இல்லையென்றால், அநுமார் கைகூப்பித் தரிசனம் தருவார்.

இம்மாதிரி ஒவ்வொரு மூலை முடுக்கும், அங்கங்கேயுள்ள தெய்வச் சிலைகளும், அவற்றை யொட்டியுள்ள மரங்களும், அந்தந்தப் பருவத்தில் அம்மரங்களில் பூங்கொத்துகள் வெடித்து மலர்ந்திருக்கும் காட்சியும் என் மனக் கண் முன் தனித்தனியாக நிற்கின்றன.

இத்தகைய சாலையோரத்து விநாயகர் சந்நிதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்போது சொல்லப் போகிறேன். அது என் தந்தை எனக்குச் சொன்னதுதான். அந்த இடத்தையும் அங்குள்ள மேடையையும் விநாயகர் சிலையையும் அந்தச் சிலையின் மீது தொங்கி நிழல் தரும் கொன்னை மரத்தையும் அதன் பூங்கொத்துக்களையும் அடிக்கடி என் தந்தை சுட்டிக் காட்டி, அங்கே நடந்த சம்பவத்தைப் பல முறை சொல்லியிருக்கிறார்.

* * *

குங்குமத்துறைக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்பது பற்றி வெவ்வேறு காரணங்களைச் சொல்லுவார்கள். "குரங்கு பாயுந் துறை" என்பதுதான் 'குங்குமத்துறை' என மாறியது என்று சொல்லுவோர் உண்டு.

எங்கள் ஊரில் அருவிக்கரையோரமாகக் கடம்ப மரங்கள் நிறைய இருக்கின்றன. சிற்சில மாதங்களில் கடம்ப மரங்களிலிருந்து சிவப்புப் பட்டு நூல் குஞ்சலங்களைப் போன்ற சின்னஞ் சிறிய மலர்கள் ஆயிரமாயிரமாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும். இரவு நேரங்களில் மரத்திலிருந்து அவை உதிரும். உதிர்ந்த மலர்கள் அருவி நீர் ஓடைகளில் மிதந்து ஓடும் காட்சி காலை நேரங்களில் கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும். கடம்ப மலர்கள் ஏறக்குறையக் குங்குமத்தின் நிறமுடையன வாதலால், எங்கள் ஊருக்கு ஆதியில் 'குங்குமப் பூந்துறை' என்று பெயர் இருந்ததாகவும், பின்னர் அது சுருங்கிக் 'குங்குமத்துறை' என்று மாறிவிட்டதாகவும் என்னுடைய தந்தை கூறுவார்.

குங்குமத் துறையின் வனப்பையும் இயற்கை எழில்களையும் என்னைவிடப் பன்மடங்கு என் தந்தை அநுபவிப்பார். என்னிடம் பல தடவை சொல்லி மகிழ்ந்திருக்கிறார். காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் என்பவர் எங்கள் ஊருக்குச் சமீபத்தில் ஒரு கிராமத்தில் வந்து சிறிது காலம் தங்கியிருந்தார் என்றும், அதனாலேதான் அவர் அத்தகைய அழகான பாடல்களைப் பாட

முடிந்தது என்றும் சொல்லுவார். "மூசு வண்டு தேனை உண்டு" என்பது போன்ற காவடிச் சிந்துப் பாடல்களை என் தந்தை அடிக்கடி பாடுவதுண்டு. காவடிச் சிந்து மெட்டிலேயே குங்குமத் துறையைப் பற்றி என் தந்தை மந்திர மூர்த்தி சில பாடல்களை இயற்றி யிருக்கிறார்.

சாலை யோரத்துச் சத்திரத்தில் என் உண்மைப் பெற்றோர்களைப் பார்த்துச் சிநேகம் கொண்டு, திடீரென்று அவர்கள் மறைந்து போன சம்பவத்துக்குப் பிறகு, என் வளர்ப்புத் தந்தைக்குக் குங்குமத் துறையின் இயற்கை எழில்கள் கூட இன்பம் அளிக்காமற் போய் விட்டன. வாழ்க்கையில் ஏற்கெனவே இருந்த சலிப்பு இன்னும் அதிகமாகி விட்டது. காவடிச் சிந்து போன்ற பாடல்களைப் பாடுவதற்குப் பதிலாக,

"தந்தை தாய் தமர்தாரம்
மகவெனும் இவையெலாம்
சந்தையிற் கூட்டம் அதிலோ
சந்தேகமில்லை!"

என்பவை போன்ற வைராக்கியத்தைப் போதிக்கும் பாடல்களில் அவருக்கு விருப்பம் அதிகரித்தது. நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருந்த வழக்குகளிலே கூட அவருடைய ஊக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பம் பார்த்து அவருடைய சகோதரிகள் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் தமக்கை தம்முடைய கலியாணமாகாத புதல்வியையும் அழைத்து வந்திருந்தார். தங்களுடைய சகோதரரின் ஏராளமான சொத்துக்கள் அவருக்குப் பிறகு முன்பின் அறியாத தூரத்துத் தாயாதிகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுவதில் அவர்களுக்கு விருப்பமில்லாதிருந்தது இயற்கைதானே? ஆகையால், தமக்கையின் மகளை அவர் மணந்து கொள்வது எவ்வளவு உசிதமானது என்பதைக் குறித்து எத்தனையோ சொன்னார்கள். மந்திரமூர்த்தியின் காதில் அவர்கள் போதனை ஒன்றும் ஏறவில்லை. காசிலிங்கத்தையும் சந்திரமணியையும் அவர்கள் ஒருவருக்கொருவர் நடந்து கொண்ட விதத்தையும் பார்த்தவருக்கு, தம் முன்னால் வந்து நிற்கவும் வெட்கப்படும் ஒரு சிறு பெண்ணை மணந்து கொள்வதென்பது சிரிப்புக்கிடமான வேடிக்கை என்று தோன்றியது. கண்டிப்பாக "முடியாது" என்று சொன்னால் அவர்கள் கேட்க மாட்டார்கள் என்று கருதி, "எல்லாவற்றையும் யோசித்துக் கடிதம் எழுதுகிறேன், போய் வாருங்கள்!" என்று கூறி அனுப்பி விட்டார்.

இவ்விதமாக ஏழெட்டு மாத காலம் மந்திரமூர்த்தியின் வாழ்க்கை ரஸமில்லாமல் கழிந்தது. ஒரு நாள் அவர் நன்செய் வயல் அறுவடையைப் போய்ப் பார்த்து விட்டு, அவருடைய பண்ணைக்கு அருகிலுள்ள இனிய 'புனல் அருவி'யில் குளித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடைய வீட்டுக்கு அருகாமையில், கொன்னை மரத்தடிப் பிள்ளையார் மேடைக்குப் பக்கத்தில், இரட்டை மாட்டு வண்டி ஒன்று நிற்பதைக் கண்டார். சாதாரணமாகத் தமக்குச் சம்பந்த மில்லாத காரியங்களில் மந்திரமூர்த்தி கவனம் செலுத்துவதில்லை. ஆகையால், வண்டிக்குள் இருப்பது யார் என்று இயற்கையாக எவரும் பார்ப்பது போலக்கூட அவர் பார்க்கவில்லை. வண்டியைத் தாண்டி அவருடைய வீட்டின் முகப்பை நெருங்கினார்.

ஆறாம் அத்தியாயம்

குரங்கு பாய்ந்தது!

அந்தச் சமயம் அவருக்குப் பின்னால் கேட்ட குரல் மந்திரமூர்த்தியைத் திரும்பிப் பார்க்கும்படி செய்தது.

"என்னப்பா, வண்டிக்காரா! அதோ போகிறாரே, அந்தப் பெரிய மனிதரைத் தான் கேளேன், வாடகைக்கு வீடு கிடைக்குமா என்று!"

இவ்விதம் பேசிய குரல் சிறிது பழக்கப்பட்ட குரலாகத் தொனிக்கவே திரும்பிப் பார்த்தார். மாட்டு வண்டிக்கு அருகில் காசிலிங்கம் நிற்பதைக் கண்டதும் அவருக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. வியப்புடன் ஒரு பக்கத்தில் கோபமும் இன்னொரு பக்கத்தில் காரணந் தெரியாத மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

"யார் அது, காசிலிங்கமா?" என்று கேட்டுக்கொண்டே நாலு அடி முன்னால் நடந்து வந்தார்.

"அடடா! நீங்களா? பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று! பார்த்தாயா, சந்திரமணி! பகவான் நம் பக்கத்திலே இருக்கிறாரா, இல்லையா? அன்றைக்

குச் சத்திரத்திலே நமக்கு உபகாரம் செய்த பெரிய மனிதருக்கு இந்த ஊர் தான் என்பது ஞாபகம் இல்லாமல் போய் விட்டதே!" என்றார் காசிலிங்கம்.

இப்படி அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மந்திரமூர்த்தி வண்டிக்குள் பார்த்தார். அங்கே சந்திரமணியைக் கண்டார். வாடி யிருந்த சந்திரமணியின் முகம் மந்திரமூர்த்தியைப் பார்த்ததும் சிறிது மலர்ச்சி அடைந்தது. அவரைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே, "எனக்கு நன்றாக ஞாபகம் இருந்தது! நமஸ்காரம், ஐயா!" என்றாள்.

"அப்படியானால் எனக்கு ஏன் ஞாபகப் படுத்தவில்லை? போனால் போகட்டும்! எப்படியோ இவரைப் பார்த்த வரையில் நம்முடைய அதிர்ஷ்டந்தான்! இந்த ஊரில் சில மாத காலம் தங்கி யிருக்கலாம் என்று வந்திருக்கிறோம், ஐயா! இவளுடைய தேக சௌக்கியத்துக்காக வைத்தியர் சொன்ன தின் பேரில்தான் வந்திருக்கிறோம். சிறிய வீடு ஒன்று சொற்ப காலத்துக்கு வாடகைக்கு வேண்டும். கிடைக்குமா? இந்த வண்டிக்காரன் பேச்சை நம்பி வந்தோம். இவன் இங்கே வந்து சேர்ந்த பிறகு யாரைப் போய்க் கேட்பது என்று தெரியாமல் விழிக்கிறான்!" என்றார் காசிலிங்கம்.

காசிலிங்கத்தைப் பார்த்ததும் மந்திரமூர்த்திக்கு முதலில் உண்டான கோபம் இதற்குள் பறந்து போய்விட்டது. அவர்களை இனிப் பார்க்கப் போவதே யில்லை என்று நிராசை அடைந்திருந்தவருக்கு, அவர்கள் இந்த ஊரிலேயே தங்குவதற்கு வந்திருக்கிறார்கள் என்னும் செய்தி அளவிறந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய வாய்ப்பு மறுபடியும் கிடைத்ததை எண்ணி உள்ளம் பூரித்தது. தம்மிடம் சொல்லிக் கொள்ளாமல் ஏன் போனார்கள் என்பதைப் பற்றிப் பிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்று தம் மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

வண்டிக்குள்ளிருந்த சந்திரமணியையும் வெளியில் நின்ற காசிலிங்கத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே, "இந்த ஊரில் வீட்டுக்கு என்ன பஞ்சம்? வேனிற் காலம் மூன்று மாதங்களுக்குத் தான் இங்கே வீட்டுக்குக் கிராக்கி. மற்ற நாளெல்லாம் பாதி வீடுகள் காலியாகக் கிடக்கும். என்னுடைய வீடுகள் இரண்டு பூட்டிக் கிடக்கின்றன. உங்களுக்குப் பிடித்திருந்தால் பார்க்கலாம்!" என்றார் மந்திரமூர்த்தி.

ஒரு விஷயம், "எங்களால் வீட்டு வாடகை அதிகம் கொடுக்க முடியாது" என்றார் காசிலிங்கம்.

"வாடகை யார் கேட்டார்கள்? இந்த மாதங்களில் வீட்டில் குடி யிருந்து துப்புரவாக வைத்துக் கொண்டிருந்தால், அதுவே வீட்டுச் சொந்தக்காரர்களுக்குப் பெரிய உதவி. எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். சாயங்காலம் போய் வீடுகளைப் பார்க்கலாம். இதோ இந்த வீடுதான் நான் இருக்கும் வீடு. இறங்கி உள்ளே வாருங்கள். சாப்பிட்டுச் சிரம பரிகாரம் செய்து கொண்டு......"

"இல்லை, இல்லை! நாங்கள் வழியில் ஓட்டலில் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தோம். குடி யிருக்கிற வீட்டுக்கு நேரே போய் இறங்கி விடுவது நல்லது!" என்றார் காசிலிங்கம்.



சிறந்த விருந்து..
ஆம், விருந்து! சிறப்பாக அமைய அதன் தயாரிப்பில் உபயோகிக்கப்படும் சமையல் சாதனமே காரணம் - அதுதான் காமதேனு வனஸ்பதி.
காமதேனு வனஸ்பதி பதார்த்தங்களின் சுவையைப் பெருக்குகிறது. போஷாக்கையும் அதிகரிக்கச்செய்கிறது.
காமதேனு வனஸ்பதி சுத்தமானது. கைபடாதது. இப்பொழுது புதிய, சீலிடப்பட்ட, காற்றுப் புகாத டின்களில் கிடைக்கிறது.
வைடமின் 'A' சேர்ந்தது
KAMADHENU
காமதேனு
வனஸ்பதி
தயாரிப்பவர்: மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்டுகள்: சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்


வெற்றிகரமாய் தமிழ்நாடெங்கும்
நடைபெறுகிறது.
மாடர்ன்
தியேட்டர்ஸ்
சுகம் எங்கே!
டைரக்ஷன்: கே.ராம்நாத்
கதை. வசனம்:
தஞ்சை A.K. வேலன்
கண்ணதாசன்.....

உண்மையில் அவர்கள் சாப்பிட்டு விட்டு வந்தவர்களாகத் தோன்றவில்லை. அதிலும் சந்திரமணியைப் பார்த்தால், பல நாள் பட்டினி கிடந்தவள் போலத் தென்பட்டது. இன்னும் அவளுடைய தோற்றத்தில் பெரிய மாறுதல் ஏதோ இருப்பதாகவும் மந்திர மூர்த்திக்குத் தோன்றியது. அது என்ன மாறுதல் என்பது அவருக்கு நன்றாக விளங்கவில்லை. நான் அச்சமயம் என் அன்னையின் வயிற்றில் எட்டு மாதம் வளர்ந்து அவளுக்குப் பாரமாக இருந்தேன் என்பதை அவர் பிற்பாடுதான் தெரிந்து கொண்டார்.

காசிலிங்கத்தின் சுபாவத்தை முன்னமே கொஞ்சம் அறிந்திருந்தபடியால், சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று அவர் வற்புறுத்த விரும்பவில்லை.

"சாப்பிட்டு ஆகியிருந்தால் சரிதான். இதோ போய் விட்டுச் சாவிகளை எடுத்து வருகிறேன்! கொஞ்சம் இருங்கள்!" என்று சொல்லி விட்டுத் தமது இல்லத்திற்குள் சென்றார்.

தாம் வழக்கமாகச் சாப்பிடும் நேரத்துக்கு மேல் ஒரு மணி நேரம் அதிகமாகி விட்டதைக்கூட மந்திரமூர்த்தி பொருட்படுத்தவில்லை. வந்தவர்களை அழைத்துப் போய்த் தம் வீடுகளைக் காட்டி, ஏதேனும் ஒரு வீட்டில் அவர்களை இறக்கி விட்டுப் பிறகு வந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று தீர்மானித்தார்.

அவ்விதமே சமையற்காரனிடம் சொல்லி விட்டு, சாவிகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

இந்தச் சில நிமிஷ நேரத்துக்குள் வெளியில் சில முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன.

"பட்ட காலிலே படும்!" என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? அது என் அன்னையின் விஷயத்தில் எழுத்துக்கு எழுத்து உண்மை யாவதற்குரிய பல நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பாக நேர்ந்து விட்டன.

சாலையின் திருப்பத்தில் திடீரென்று ஒரு மோட்டார் சைக்கிள் 'பட்பட் படபட்' என்று சத்தமிட்டுக் கொண்டு அதி வேகமாக வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு நாய் குரைத்துக் கொண்டு ஓடி வந்தது. சாலையோரத்தில் ஆகாரம் தேடிக் கொண்டிருந்த கோழி ஒன்று சடசட வென்று இறகுகளை அடித்துக் கொண்டு பறந்தது. பிள்ளையாருக்கு மேலே படர்ந்திருந்த கொன்றை மரத்துக் கிளையில் சோம்பி உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு குரங்கு தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து மாட்டு வண்டியின் நுகத்தடியின் பேரில் பாய்ந்தது. மாடுகள் மிரண்டு பக்க வாட்டில் நகர்ந்தன. அங்கே சாலையின் திருப்பம் மேட்டை நோக்கிச் சென்றபடியால், பக்கத்தில் இருந்த பள்ளத்தில் வண்டியின் ஒரு சக்கரம் இறங்கி விட்டது. வண்டி குடை சாய்ந்தது. வண்டிக்காரன் குதித்து மாடுகளைப் பிடித்து நிறுத்த முயன்றான். குடை சாய்ந்த வண்டியிலிருந்து சந்திரமணி கீழே பள்ளத்தில் உருண்டு விழுந்தாள். வண்டி அவள் மேல் விழுந்து விடும் நிலையில் மிகவும் அபாயகரமாக அந்தரத்தில் பாதியும் சாலையில் பாதியுமாக நின்றது.

காசிலிங்கம் வண்டி குடைசாயாமல் தடுக்கப் பார்த்தார்; அது முடியவில்லை. கீழே விழுந்து விட்ட சந்திரமணியை எடுக்க எண்ணிப் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தார். அதற்குள் வண்டி அந்தரத்தில் நிற்பதையும், அது விழுந்தால் சந்திரமணியின் பேரில் விழும் என்பதையும் கண்டு கொண்டார். உடனே சாய்ந்த சக்கரத்தின் அருகில் பாய்ந்து சென்று அதைத் தம் இருகரங்களாலும் பிடித்துத் தாங்கிக் கொண்டார்.

வீட்டுக்குள்ளேயிருந்து வீதியிலே வந்த மந்திரமூர்த்தி பார்த்துக் கொண்டிருக்கும் போதே இவ்வளவும் நிகழ்ந்து விட்டது. மோட்டார் சைக்கிள் பின்னால் புகையையும் புழுதியையும் கிளப்பி விட்டு விட்டுப் போயே போய் விட்டது. கோழி மறுபடியும் குப்பையில் உணவு தேடத் தொடங்கி விட்டது. நாய் திரும்பிப் போய்ப் படுத்துக் கொண்டது. குரங்கு மரக் கிளையின் பேரில் ஏறிப் பழையபடி தூங்கத் தொடங்கியது.

காசிலிங்கம் மட்டும் வண்டிச் சக்கரத்தைத் தாங்கிக் கொண்டு நின்றார். சந்திரமணி கீழே விழுந்தவள் அப்படியே கிடந்தாள். மந்திர மூர்த்தி அவளை நோக்கி ஓடினார். அவளருகில் போய்ச் சேருவதற்குள்ளே எண்ணாததெல்லாம் எண்ணித் தவித்துப் போய் விட்டார்.

அருகில் போய்ச் சேர்ந்த பிறகும் என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. சந்திரமணியின் தோற்றம் வேறு அவருடைய மனத்தைக் கலக்கி விட்டது. முன்னே பார்த்த போது, சந்திரமணி மூக்கிலும் காதிலும் கழுத்திலும் கரங்

களிலும் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தாள். அவற்றை யெல்லாம் இப்போது காணேம். அது மட்டுமல்ல; சந்திரமணியின் முகம் வாடி உடம் பின் மற்றப் பகுதிகள் மெலிந்திருந்தன. ஆனல் வயிறு மட்டும் பெரிதாக இருப்பதைக் கண்டார். ஒரு கணம் திகைத்த பிறகு, அவள் பூரண கர்ப்பிணி என்பதை உணர்ந்தார். "ஐயோ! இப்படிப்பட்ட நிலையிலேயா இந்த விபத்து நேர்ந்து விட்டது?" என்று கலங்கினர்.

"ஏனையா, மரம் போல நிற்கிறீர்? அவளைக் கொஞ்சம் தூக்கி நகர்த்துங்கள்!" என்ற காசிலிங்கத்தின் குரல் அவருடைய திகைப்பைப் போக்கி அதே சமயத்தில் ஆத்திரத்தையும் ஊட்டியது.

"இந்த முரடன் இந்தப் பேதைப் பெண்ணை இல்லாத தொல்லைகளுக்கெல்லாம் ஆளாக்கி விட்டு என்மீது எரிந்து விழுகிருன், பார்!" என்று எண்ணினர்.

ஆனலும் அச்சமயம் அவர் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, சந்திரமணியின் கையை மிருதுவாகப் பிடித்து, "எழுந்திரு, அம்மா!" என்ருர்.

சந்திரமணி எழுந்திருக்க முயன்ருள். முடியாமல் மறுபடி கீழே உட்கார்ந்தாள். அவளுடைய முகத்தில் வேதனை காணப்பட்டது. அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பியது.

இன்னது செய்வதென்று அறியாமல் மந்திரமூர்த்தியும் அவளருகில் உட்கார்ந்தார். "ஐயோ, பாவம்! என்ன, அம்மா, உனக்கு?" என்று மிகுந்த பரபரப்புடன் சந்திர மணியைப் பார்த்துக் கேட்டார்.



இதற்குள் வண்டிக்காரன் மிரண்ட மாடுகளைச் சரிப்படுத்தி நுகத்தடியிலிருந்து அவிழ்த்து விட்டு விட்டு, சாய்ந்து தொங்கிக் கொண்டிருந்த வண்டியைப் பிடித்து இழுப்பதற்கு வந்தான். அவன் முன்னல் நுகத்தடியைப் பிடித்து இழுக்க, காசிலிங்கம் சக்கரத்தைப் பிடித்துக் கொண்டு மேலே நகர்த்த, மெதுவாக வண்டி சாலை மீது ஏறியது.

உடனே காசிலிங்கம் சந்திரமணி இருந்த இடத்துக்குப் பாய்ந்து ஓடி வந்தார். "கொஞ்சம் ஒதுங்குங்கள், ஐயா! நீங்கள் 'என்ன' வென்று விசாரிப்பதற்குள், இவள் யமலோகம் போய் விடுவாள்!" என்று சொல்லிக் கொண்டே மந்திர மூர்த்தியை ஒதுக்கித் தள்ளி விட்டுச் சந்திரமணியை முன்போலவே லாகவமாகத் தூக்கி எடுத்துக் கொண்டார்.

"உங்கள் வீட்டுக்குத்தான் போய்த் தீரவேண்டும் போலிருக்கிறது. அந்தக் குரங்கினிடம் நீங்கள் சொல்லி வைத்தீர்களோ, என்னமோ? நல்ல வேலை செய்தது! ஏதோ இந்தமட்டோடு போயிற்றே! வாருங்கள், போகலாம்!" என்று சொல்லிக் கொண்டே காசிலிங்கம் சந்திரமணியையும் தூக்கிக் கொண்டு மந்திரமூர்த்தியின் வீட்டை நோக்கி நடந்தார்.

மந்திரமூர்த்தி அவர் பின்னேடு போனர். காசிலிங்கத்தின் முரட்டுத்தனமான பேச்சு ஒரு பக்கம் அவருக்கு வெறுப்பு உண்டாக்கியது. அதே சமயத்தில், வண்டி சந்திரமணியின் பேரில் விழாமல் தாங்கிக் கொண்டு நின்றதும், இப்போது சந்திரமணியை அநாயாஸமாகத் தூக்கிக் கொண்டு போனதும் அவருடைய பெரு வியப்புக்குக் காரணமாயின. அம்மாதிரி காரியங்களை மந்திரமூர்த்தியினல் செய்யவே முடியாது; செய்யலாம் என்று அவரால் கனவு காணக்கூட முடியாது.

"அஸகாய சூரன் என்ருல் இவன்தான்! பெரிய வீர பரம்பரையில் வந்தவனயிருக்க வேண்டும்!" என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டு நடந்தார்.

காசிலிங்கம் வீட்டு வாசலில்கூட நிற்காமல் மளமள வென்று உள்ளேயே போய் விட்டார். கூடத்தில் கிடந்த சாய்வு நாற்காலியில் சந்திர மணியைப் படுக்க வைத்தார். மந்திரமூர்த்தி ஒரு வெல்வெட் தலையணையை எடுத்து அதன் உறையை அவசரமாகக் கழற்றி எறிந்து விட்டுக் கொண்டு போய்க் கொடுத்தார். அதைக் காசிலிங்கம் சந்திரமணியின் தலைக்குப் பின்னல் மெதுவாக வைத்தார்.

இதற்குள் வண்டிக்காரன் பெட்டியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு

வந்து "சாமி!" என்றான். மந்திரமூர்த்தி அந்தப் பெட்டியை வாங்கி வைத்து விட்டு வண்டிக்காரனை வெளியே அழைத்துப் போனார். அவன் கேட்ட வண்டிச் சத்தத்தைக் கொடுத்து அவனை அனுப்பி விட்டுஉள்ளே திரும்பி வந்தார்.

"என்னால் உங்களுக்கு எத்தனை தொந்தரவு?" என்று சந்திரமணி சொல்லிக் கொண்டிருந்தாள்.

"தொந்தரவு, தொல்லை என்ற வார்த்தைகளை மட்டும் இனிமேல் சொல்லாதே! தொந்தரவு படத்தான் உன்னை அழைத்துக் கொண்டு வந்தேன். நீயும் அது தெரிந்தே என்னுடன் வந்தாய். மறுபடி தொந்தரவு, கஷ்டம் என்றெல்லாம் சொன்னாயானால், தொந்தரவே இல்லாத இடத்துக்குத் தொலைந்து போய் விடுவேன். இந்த ஊரில் மலை மேலிருந்து விழுந்து சாவதற்கு நிறைய இடங்கள் இருக்கின்றன!" என்றார் காசிலிங்கம்.

"வேண்டாம், வேண்டாம்! இரையாதீர்கள்! நான் இனிமேல் அப்படிச் சொல்ல வில்லை!" என்றாள் சந்திரமணி.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்த மந்திரமூர்த்தியின் உள்ளம் உருகி விட்டது. காசிலிங்கத்தின் மேல் அவருக்கு ஏற்பட்டிருந்த கோபமும் தணிந்து விட்டது. 'ஐயோ! பாவம்! ஏதேதோ கஷ்டங்களை அநுபவித்து மன வேதனைப் பட்டிருக்கிறார்கள். அதனாலேதான் காசிலிங்கம் அப்படிப் பேசுகிறார். இவர்களுடைய மனம் மேலும் புண்படாமல் இவர்களிடம் நாம் பேசிப் பழக வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டார்.


தாம் உள்ளே வருவது அவர்களுக்குத் தெரியும் பொருட்டுத் தமது தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர்கள் அருகிலே சென்று நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

"எப்படியும் நீங்கள் சாப்பிட்டு வெகு நேரம் ஆகியிருக்க வேண்டும். பத்து மணிக்குச் சாப்பிட்டிருப்பீர்கள். அந்த நேரத்தில் என்ன சாப்பிட்டிருக்க முடியும்? இரண்டாம் வேளை சிற்றுண்டி சாப்பிடும் நேரம் ஆகி விட்டதே! நம் வீட்டுச் சமையற்காரன் அப்படியொன்றும் தடபுடலாகச் சமையல் செய்திருக்க மாட்டான். கொஞ்சம் பெயருக்கு இருவரும் இலையில் உட்கார்ந்து எழுந்திருக்கலாமே?" என்றார்.

"சரி, நீங்கள் இவ்வளவு உபசாரம் பண்ணும் போது மறுப்பது மரியாதை அல்ல. என்ன, சந்திரமணி? நீயும் கொஞ்சம் இலையில் உட்கார்ந்து எழுந்திருக்கிறாயா?" என்றார் காசிலிங்கம்.

சந்திரமணி முகமலர்ச்சியுடன் "ஆகட்டும்!" என்றாள்.

மந்திரமூர்த்தி சமையல் உள்ளுக்குப் போய்ச் சமையற்காரனிடம் பரிமாற வேண்டிய விதம் பற்றிச் சொல்லிவிட்டு வந்தார். சத்திரத்தில் காசிலிங்கத்துக்குச் சாப்பாடு போதாமற் போனது அவருக்கு நினைவில் இருந்தது. தமக்குக் கொஞ்சமாகவும் விருந்தாளிகளுக்குச்



சற்று அதிகமாகவும் பரிமாறும்படி கட்டளையிட்டு விட்டு வந்தார்.

மந்திர மூர்த்தி ஒண்டிக்காரராகவே வாழ்ந்தபடியால், குங்குமத் துறைக்கு வருவோரில் அவருக்குத் தெரிந்தவர்களை யெல்லாம் சாப்பிட அழைப்பது வழக்கம். ஆகையால் தினந்தோறும் இரண்டு விருந்தாளிகளுக்கும் இடும்படியாக அதிகமாகவே சமையல் நடைபெறும். அன்றைக்கும் அப்படியே சமையற்காரன் செய்திருந்தான். ஆனால் அன்று அவன் பாடு திண்டாட்டமாய்ப் போய் விட்டது. மந்திரமூர்த்திக்கும் விருந்தாளிகளுக்கும் சாப்பாடு போட்ட பிறகு, சமையற்காரனுக்கும் வீடு கூட்டும் வேலைக்காரிக்கும் துளிக்கூட மிஞ்சவில்லை. எல்லாப் பாத்திரங்களும் காலியாகி விட்டன!

இத்தனைக்கும் மந்திரமூர்த்தி வழக்கத்தைக் காட்டிலும் குறைவாகச் சாப்பிட்டார். சந்திரமணியோ பெயருக்கு எல்லாப் பதார்த்தங்களையும் தொட்டுப் பார்ப்பதுடன் திருப்தி அடைந்தாள்.

காசிலிங்கம் கையலம்பக் கொல்லைப் புறம் போனபோது, சந்திரமணி மந்திரமூர்த்தியைப் பார்த்து, "உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. இவர் இன்று ஓட்டலில் சாப்பிடவும் இல்லை; ஒன்றுமில்லை. நன்றாகச் சாப்பிட்டு எத்தனையோ நாளாயிற்று!" என்றாள்.

இதற்குள் காசிலிங்கம் "என்ன இரகசியம் பேசுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

அவர்கள் பேசாமலிருந்ததைப் பார்த்து விட்டு, "நான் உன்னைப் பட்டினி போட்டுக் கொல்லுகிறேன் என்று புகார் செய்கிறாயா?" என்று கேட்டார்.

"சிவசிவா! அப்படி யெல்லாம் யாராவது சொல்லுவார்களா? நீங்கள் முன்போலெல்லாம் இப்போது சரியாகச் சாப்பிடுவதில்லை என்று சந்திரமணி குறைப்பட்டுக் கொண்டிருந்தாள்!" என்றார் மந்திரமூர்த்தி.

"ராம ராமா! இப்போது நான் சாப்பிடுகிறபடி சாப்பிடுவதற்கே உள்ளே பாத்திரங்களைச் சுரண்ட வேண்டியிருக்கிறது. சரியாகச் சாப்பிட வேறே ஆரம்பித்தால்...!" என்று சொல்லி விட்டுக் காசிலிங்கம் கலகலவென்று சிரித்தார்.

சந்திரமணியும் மந்திரமூர்த்தியும் அவருடன் சேர்ந்து சிரித்தார்கள். அந்தச் சிரிப்பினால் மூன்று பேருக்கும் ஒரு மாதிரி மன நிம்மதி உண்டாயிற்று.

"சிறிது நேரம் இருவரும் படுத்து இளைப்பாறுங்கள். உங்களுக்கு எப்போது இஷ்டமோ, அப்போது கிளம்பிச் சென்று, வாடகை பங்களாக்களைப் போய்ப் பார்த்து விட்டு வரலாம்!" என்றார் மந்திரமூர்த்தி.

"அடே அப்பா! பங்களாவா? நாங்கள் எப்படி வாடகை கொடுக்க முடியும்?" என்றார் காசிலிங்கம்.

"இந்த ஊரில் எல்லா வீடுகளையும் பங்களா என்று சொல்லுவது வழக்கம். மற்றப்படி பிரமாதமாக ஒன்றுமிராது. வாடகை விஷயந்தான் முன்னமேயே சொன்னேனே? நீங்கள் கொடுத்ததைக் கொடுக்கலாம்!" என்றார் மந்திரமூர்த்தி.

"ஒன்றுமே கொடுக்காமலும் கம்பி நீட்டி விடலாம்! இல்லையா?"

"அப்படிச் செய்கிறவர்களும் உண்டு!"

"நாங்கள் சத்திரத்திலிருந்து உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் போனோமே, அப்படி!" என்று சொல்லி விட்டுக் காசிலிங்கம் சிரித்தார்.

"ஏன் அவ்விதம் செய்தீர்கள்? வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்து ஏமாந்து போனேன். ரொம்ப வருத்தமாயிருந்தது!" என்றார் மந்திரமூர்த்தி.

"எல்லாம் இவளுடைய பேச்சைக் கேட்டுத்தான்! காரணம் இவளையே கேளுங்கள்!" என்றார் காசிலிங்கம்.

"இப்போது அவசரம் ஒன்றுமில்லை; பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்கிறேன்!" என்றார் மந்திரமூர்த்தி.


* * *

பிற்பகலில் அந்தத் தம்பதிகளைத் தனியே விட்டு மந்திரமூர்த்தி வெளியே சென்று தம்முடைய பங்களாக்கள் இரண்டையும் துப்புரவு செய்யும்படி கட்டளை யிட்டுவிட்டுத் திரும்பினார்.

தம்முடைய மாட்டு வண்டியைக் கொண்டுவந்து வீட்டு வாசலில் நிறுத்தி விட்டு உள்ளே வந்தார்.

"வீடு பார்ப்பதற்கு வருகிறீர்களா?" என்று கேட்டார்.

இங்கேயே இருக்கலாம் என்று சொல்வதற்கு அவருக்குத் தயக்கமா யிருந்தது. அது காரணமாக முன்போல் காசிலிங்கத்துக்கு வீண் சந்தேகம் ஏதாவது தோன்றி விடலாம் என்று எண்ணினார்.



பட்டாபி (புருஷன்):—ஜாபகர் சொன்னாரே, அந்த ராஜமய்யர் வந்திருக்கார்.

மங்களம் (மனைவி): நம்ம சேஷாமணிக்கு ஐம்பதினாயிரம் வரையில் கொடுக்கஎத்தனையோபேர் காத்துண்டிருக்கா! ஜாதகம் பொருத்தமில்லை என்று சொல்லி அனுப்பி விடுங்கோ!

பட்டாபி: ஜாதகம் பொருத்தமில்லை ஸார்! உங்களுக்கு வீண் சிரமம்! என்ன செய்யறது!


ராஜமய்யர்: இப்படியே வருகிற பெண்களை யெல்லாம் தட்டிக் கழித்தால் உங்கள்பிள்ளைக்கு எப்படித்தான் கல்யாணம் ஆகப் போகிறதோ!



நண்பன்: கன்கிராஜுலேஷன். உன்னை கலெக்டரா போஸ்ட் பண்ணியிருக்காளாமே! ஆனால் அந்த கௌரவத்தை வகிக்கிறதுக்கு மனைவி ஸ்தானம் பூர்த்தியாக வேண்டாமோ!

சேஷாமணி: எங்க அம்மாவும் அப்பாவும் பெண் பார்த்து முடிக்கிறதுக்குள்ளே எனக்கும் ஷஷ்டியப்த பூர்த்தி வந்திடும் போலேயிருக்கு!

சில நாட்களுக்குப் பிறகு...ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில்: நாங்கள் இருவரும் சேஷாமணி, மிட்டல் ரோஸ் மனப்பூர்வமான அன்புடன் பதிவுத் திருமணம் செய்து கொள்ளுகிறோம்.


Jagadguru Sri SANKARACHARYA SWAMIGAL MUTT,



மங்களம்: குடி முழுகிப்போச்சே! நான் என்ன செய்வேன், ஜாபகரே! உங்கள் பேச்சைக் கேட்காமல் போனேனே!

ஜாபகர்: உங்கள் பேராசையால் கல்யாணம் தாமதமாகி சேஷாமணி தர்ம மார்க்கத்திலிருந்து தவறிவிட்டான். இனி பேசி ஒரு பலனும் இல்லை. மற்ற பிள்ளைகளையாவது கவனியுங்கள். உங்களுக்கு என்பேரில் நம்பிக்கையில்லாவிட்டாலும் இந்த ஸ்ரீமுகத்திலாவது நம்பிக்கை வேண்டாமா?

கல்யாண பருவத்திலுள்ள உங்கள் பெண் அல்லது பிள்ளை ஜாதகங்களுடன் முழு விவரங்களையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள். சொற்ப செலவில் உங்களுக்குத் தகுந்ததான ஜாதகங்களை நீங்கள் பெறலாம்.

HOROSCOPE EXCHANGE, Post Box 1834, MADRAS-1

ஜாபகர்: ஜாதகப் பரிவர்த்தனை காரியதரிசி: மற்ற பெயர்கள் கற்பனையே



நற்செய்தி விரைவில் பரவுகிறது!!

மொம்பாஸாவிலிருந்து ஹாங்காங்வரை 16 தேசங்களிலுள்ள குடும்பஸ்திரீகள் டால்டாவின் விலைகள் மறுபடியும் குறைக்கப்பட்டுள்ள செய்தியை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். சென்ற ஆகஸ்டு 19உ அமுலில் வந்த விலை குறைப்பு, கடந்த 11 மாதங்களுக்குள் ஏழாவது விலைகுறைப்பாகும். இதன் விளைவாக, இந்த வருடத்தில் மொத்தம் ரூ. 3-8-0, 10 பவுண்டு டின்னின் மேலும், அதே விகிதாசாரத்தில் மற்ற சைஸ் டின்களின் மேலும் உங்களுக்கு லாபம் கிடைத்துள்ளது!

உங்களுக்கு இந்த விஷயம் தெரியுமா? இன்று டால்டா வனஸ்பதி—பாரதமக்களின் அமோக அன்பைப்பெற்றுள்ள சமையலுக்குதவும் தாவரக்கொழுப்பு—இந்து மகாசமுத்திரத்தைச் சுற்றியுள்ளதும், தென் கிழக்கு ஆசியாவிலுள்ளதுமான 16 வெவ்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நாடுகளில் வசிக்கும் ஜனங்கள் டால்டா வனஸ்பதியின் தரம் எப்பொழுதுமே சிறந்தது என்பதை உணர்ந்து வருகிறார்கள். அதனால்தான் டால்டாவின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள செய்தியை உலகத்திலுள்ள பாதி மக்கள் ஒரு நற்செய்தியென வரவேற்கிறார்கள். எங்களால் மிச்சப்படுத்தமுடிகிற தொகையை நேரடியாக உங்களுக்கு அளிப்பதும், அவசியமேற்பட்டால் மட்டுமே விலையை ஏற்றுவதும்தான் டால்டாவை நியாய விலையில் விற்கும் எங்களது குறிக்கோளின் நோக்கம். இப்பொழுது டால்டாவில் விடமின் 'ஏ' 'டி' சேர்ந்திருக்கிறது. ½, 1, 2, 5, 10 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

டால்டா வனஸ்பதி



டால்டாவின் விலைகள் 1946ல் விற்ற விலைகளுக்கு இப்பொழுது வந்துவிட்டன!!

HVM. 228-50 TM

காசிலிங்கமும், "ஆகட்டும்! பார்க்க வேண்டியதுதான்!" என்று கூறினர். சந்திரமணியைக் கையைப் பிடித்து அணைத்தவாறு அழைத்துக் கொண்டு வந்து வண்டியில் ஏறுவதற்கும் தூக்கி விட்டு உதவி செய்தார். சந்திரமணியின் முகத்தில் மட்டும் பிரகாசம் இல்லை; வேதனை குடிகொண்டிருந்தது.

ஊருக்கு நடுவில் இருந்த மந்திர மூர்த்தியின் வீட்டைப் பார்த்தார்கள். தம்பதிகளுக்கு அது பிடித்திருந்தது.

"இன்னொரு வீட்டையும் பார்த்து விடுங்கள்!" என்று சொல்லி மந்திர மூர்த்தி மறுபடியும் அவர்களை வண்டி யேற்றி அழைத்துச் சென்றார்.

ஊரின் ஓரத்தில், மந்திர மூர்த்தியின் பண்ணைக்குச் சமீபத்திலும், 'புனலருவி'யை ஒட்டியும் இருந்த பங்களாவுக்குச் சென்றார்கள்.

முதலில் பார்த்த வீட்டைக் காட்டிலும் இந்தப் பங்களா அவர்களுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

"அதைவிட இது மேலாக இருக்கிறது. இங்கேயே இருந்து விடுகிறோம்!" என்றார் காசிலிங்கம்.

"ஊருக்கு ஒதுப்புறமாயிருக்கிறது. அது ஒன்றுதான் குறை. மற்றப்படி இந்த வீடு எல்லாவிதத்திலும் சௌகரியமானதுதான். பக்கத்திலேயே புனலருவி இருக்கிறது. குளிப்பதற்கு மிக்க வசதியாயிருக்கும்!" என்றார் மந்திரமூர்த்தி.

"பின்னே, யோசனை என்ன? இங்கேயே தங்கி விடுகிறோம். ஊருக்கு





ஒதுப்புறமாயிருப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் இருக்குமிடத்தில் பேய் பிசாசு வருவதற்குக்கூட பயப்படும்! ஊருக்கு ஒதுப்புறமாக இருப்பதையே சந்திரமணியும் விரும்புவாள்!" என்றார் காசிலிங்கம்.

"எல்லாவற்றுக்கும் உள்ளே சென்று ஒருதரம் நன்றாய்ப் பார்த்து விடுங்கள்!" என்றார் மந்திரமூர்த்தி.

இருவரும் உள்ளே போனார்கள். சந்திரமணி ஒரு காலைச் சிரமத்துடன் எடுத்து வைத்து நடப்பதை மந்திரமூர்த்தி கவனித்தார். "பாவம்! பஸ் விபத்தில் ஏற்பட்ட காயம் இன்னும் அவளுக்கு நன்றாக ஆறவில்லையா, என்ன?" என்று எண்ணிக் கொண்டார்.

பங்களாவுக்கு வெளியிலேயே நின்று அதற்குச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும், பந்தோபஸ்துக்காகச் சுற்றிலும் வேலி எடுப்பது பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தார்.

உள்ளேயிருந்து திடீரென்று விம்மி அழும் வேதனைக் குரல் கேட்டது. காசிலிங்கம் உரத்த சத்தம் போட்டுப் பேசும் குரலும் கேட்டது.

மந்திரமூர்த்தி திடுக்கிட்டுப் போனார். அவர் உடம்பு பதறியது; உள்ளம் குமுறியது. "என்ன விபரீதமோ என்னவோ, தெரியவில்லையே? இந்த விசித்திரமான தம்பதிகளிடம் நாம் எதற்காகச் சிரத்தை கொண்டோம்! வழியோடு போகிற தொல்லையை எதற்காக விலை கொடுத்து வாங்கினோம்?" என்று எண்ணி உள்ளப் பதைபதைப்போடு வீட்டுக்குள்ளே சென்றார். (தொடரும்)



காட்டு ரோஜா

அந்த ஊரில் டிரைவர் ரங்கன் என்றால் குழந்தைக்குக் கூட நன்றாகத் தெரியும். அந்த 'காக்கி' சொக்காய்க்குத் தனி மதிப்பு இருக்கத்தான் செய்தது. நாயர் தேநீர்க் கடை வாசலில் பஸ்ஸை நிறுத்தி விட்டு, 'பம், பம்' என்று ஹாரனை அடித்து ரங்கன் தேநீர் குடிக்க உள்ளே இறங்கிப் போவதே ஒரு தனிப் பாணி. துரியோதனனையரை வெற்றி கொண்டவில் விஜயன் தேரினின்றும் இறங்கிப் போவது போன்ற பெருமிதம் அவன் நடையில் தோன்றும். அந்தச் சிவப்புப் பஸ்ஸில் ரங்கன் ஏறி உட்கார்ந்தால்தான் களையாக இருக்கும்.

நீலகிரிப் பாதை வளைவுகளுக்குப் பெயர் போனது. நல்ல இரையுண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டு கிடக்கும் மலைப் பாம்பின் வளைவு நெளிவுகள் எல்லாம் அந்தப் பாதையில் உண்டு.

உதகமண்டலத்திலிருந்து கோயமுத்தூர் போகும் மெயில் பஸ்ஸுக்கு ரங்கன்தான் சாரதி. பஸ்களுக்கு எல்லாம் தலைமை வகித்தது மெயில் பஸ். இதற்கு முக்கிய காரணங்கள் மூன்று. ஒன்று மெயில் பஸ்ஸின் ரத்தச் சிவப்பு நிறம். இரண்டாவது மெயில் பஸ் என்பது. மலைவாசிகளின் உள்ளக் குமுறல்களையும், எண்ண அலைகளையும் சுமந்து கொண்டு ஓடும் பஸ் அல்லவா! அதற்கு ஒரு தனி மதிப்பு இருக்கத்தானே வேண்டும்!

மூன்றாவது காரணம் அதன் டிரைவர் ரங்கன். இது மிக முக்கியமான காரணம். நன்றாக வாரி விடப்பட்ட கிராப்புத் தலை. அடர்ந்த புருவங்களுடன் கூடிய கூரிய விழிகள். மெயில் பஸ் டிரைவருக்கே உரித்தான கம்பீரப் பார்வை. கஞ்சி போடப்பட்டு நன்றாக இஸ்திரி செய்த காக்கி உடை. தங்கம் போல் பள பளக்கும் பித்தளைப் பொத்தான்கள். எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும் புன்சிரிப்புத் தவழும் முகம். இது தான் முப்பது வயதான ரங்கனின் தோற்றம்.

ரங்கனின் பஸ்ஸில் போவதென்றாலே எல்லாருக்கும் ஒரு தனி உற்சாகம் உண்டாகும். மயிர்க் கூச்செறியச் செய்யும் திருப்பங்களில் கூட அவன் வெகு அலட்சியமாகத்தான் ஓட்டுவான். அவனுக்குத் தன்னிடம் அவ்வளவு தன்னம்பிக்கை. இது வரை பத்து வருடங்களாக ஒரு விதமான கெட்ட பெயரும் கிடையாது. வழியிலே உள்ள ஹட்டிகளிலெல்லாம்—நீலகிரி கிராமங்களை ஹட்டிகள் என்பார்கள்—பஸ் நின்று போகும். தேநீர்க் கடை நாயர், மலை வாழைப் பழம் விற்கும் கோஜ கவுடர், பேரிக்காய் விற்கும் செட்டியார் இவர்களெல்லாரையும் மதித்து ஒரு ஐந்து நிமிஷமாவது பஸ்ஸை நிறுத்துவான் ரங்கன். நல்ல வியாபாரம் ஆகும். ரங்கனுக்கும் ஒரு கப் தேநீரோ ஒரு பழமோ ஏதாவது இனாமாகக் கிடைக்கும்.

இப்படியாக ரங்கனின் வாழ்க்கை சலனமின்றி ஓடிக் கொண்டிருந்த போதுதான் அவள் தோன்றினாள்.

அவள் பெயர் முதலில் ஒருவருக்கும் தெரியாது. அவளை ரங்கன் சந்தித்ததே ஒரு ரஸமிக்க சம்பவம். அன்று புறப்படும் போதே கொஞ்சம் நேரமாகி விட்டது. நீலகிரி எக்ஸ்பிரஸ் கிளம்புவதற்குள் தபால்களைச் சேர்க்க வேண்டும். அதனால் வண்டி கொஞ்சம் வேகமாகவே போயிற்று. அன்று வண்டியை நிறுத்தாதது பற்றித் தேநீர்க் கடைச் சேகரன் நாயருக்குக் கூடக் கொஞ்சம் மன வருத்தம்தான்.

அப்போதுதான் 'நடு ஹட்டி' கிராமத்தின் பக்கம் அவள் தென்பட்டாள். நீலகிரி தைல மரங்களால் அணையப்பட்ட சாலையின் மத்தியில் அவள் நின்றிருந்தாள். தலையில் ஒரு கூடை. வெண்மையான ஒரு புடவை. எடுப்பாகக் கட்டிய கூந்தலில் ஒரு காட்டு ரோஜா. ஒரு கையால் தலையில் உள்ள கூடையைப் பிடித்தவண்ணம், மறு கையை நீட்டினாள், பஸ்ஸை நிறுத்தச் சொல்லி. இமைப்பொழுது கண்ட அந்தக் காட்டு ரோஜா ரங்கனைக் கூட ஒரு மாதிரியாக்கி விட்டது. பஸ்ஸைச் சரேலென்று பிரேக் போட்டு நிறுத்தினான்.

"ஏறு புள்ளே, ஏறு!"—இது கண்டக்டர் ஜோதி கவுடரின் குரல். ஆனால் அதை யெல்லாம் கவனிக்கவே யில்லை அவன். "அறுவுக்கு எட்டுச் சுளை" என்ற சப்தம்தான் மேலோங்கியது. பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் எல்லாரும் கை நீட்டினர். பத்து நிமிஷங்களுக்குள் கூடை முழுவதும் காலியாகி விட்டது.

ரங்கன் வாய் திறவாமல் காட்டு ரோஜாவையே பார்த்துக் கொண்டிருந்தான். கண்டக்டர் ஜோதி கூடப் பேசவில்லை; பேச நினைத்தாலும் அவனால் முடிந்திருக்காது. ஏனென்றால் அவன் வாய் நிறையப் பலாச் சுளைகள்.

அதனால் அன்று பதினைந்து நிமிஷம் நேரங் கழித்தே மெயில் பஸ் போயிற்று. மலைச்சுனையின் மகிமையில் தங்களை மறந்தனர் பிரயாணிகள். காட்டு ரோஜாவின் கம்மென்ற மணத்திலே தன்னை மறந்திருந்தான் ரங்கன்.

இம்மாதிரி ஆரம்பித்த பலாப்பழ வியாபாரம் தினம் தினம் முன்னேறியது. இப்போதெல்லாம் 'நடு ஹட்டி'த் திருப்பம் ஒரு முக்கியமான பஸ் நிற்கும் இடமாகி விட்டது.

சுந்தரி—ஆம், அவள் பெயர் சுந்தரிதான்—இப்போதெல்லாம் கையைக் காட்டுவதே யில்லை

ரங்கன் கைகள் தானாகவே பஸ்ஸை நிறுத்தி வந்தன. மலைப் பலாச் சுளைகள் வியாபாரம் பலமாக நடக்கும். அதன் பலனைச் செட்டியாரின் பேரிக்காய் படுத்து விட்டது. நாலு மைல் முன்னேயிருந்த பேரிக்காயைப் பலாச்சுளை வென்ற மர்மத்தைப் பற்றி அவர் என்ன அறிவார்!


நடு ஊட்டி வரு முன்னரே பலாச் சுளைகளின் மகிமை பற்றி ரங்கனே பஸ் முழுவதற்கும் தெரிய வைப்பான். அதுமட்டுமா! தயாராகச் சில்லறை மாற்றி வைத்திருந்து இல்லாதவருக்குச் சில்லறை கூடக் கொடுப்பான். தினம் ஒரு அணாவுக்குத் தனக்காகவேகூடச் சுளைகள் வாங்குவான். மற்றவர்களுக்கு எட்டுச் சுளைகள் போடும் அவள் ரங்கன் கையில் மட்டும் பத்து வைப்பாள். இது அவனுக்கும் அவளுக்குமே தெரிந்த ரகசியம்.

நாளடைவில் பஸ் வராத வேளைகளில் கூட ரங்கன் நடு ஊட்டி இருப்பத்தில் அடிக்கடி தென்பட ஆரம்பித்தான். நீலமலை எஸ்டேட் பலாத் தோட்டத்தில் அவனும் அவளும் பேசுவார்கள், பேசுவார்கள்; அப்படிப் பேசுவார்கள். தாய் தந்தையற்ற அவளைக் கண்டிக்க ஆளில்லை. வயதான பாட்டி என்ன செய்ய முடியும்! ரங்கனைப் பற்றியோ கேட்க வேண்டாம். தந்தையை இழந்த அவனை அவன் தாய் ஒன்றுமே சொல்வதில்லை. "கல்யாணம் செய்து கொள்ளடா!" என்று அவன் தாய் எப்போதாவது சொல்லுவாள். "அது பற்றி எனக்குத் தெரியும், அம்மா!" என்பான் ரங்கன். அவ்வளவுதான்.

பலா மரங்களில் ஏறிப் பழங்களை இறக்குவாள் சுந்தரி. அவள் லாகவத்தை அவன் மெச்சுவான். வளைவுகளில் கொஞ்சமும் அஞ்சாமல் கார் விடும் அவன் திறமையைப் புகழ்வாள் அவள். இப்படியாக இன்பமாகப் போய்க் கொண்டிருந்தது அவர்கள் காலம்.

அப்போதுதான் அந்த 'எஸ்டேட்' மேஸ்திரி கிழவன் இறந்து போனான். அவனுக்குப் பதிலாக கஞ்சனை மேஸ்திரியாக நியமித்தார்கள்.

கஞ்சனுக்கு நாற்பது வயதுதான் இருக்கும். கஞ்சன் வந்தது முதலே சுந்தரியைக் கண்டு மனம் தத்தளித்தான். மலையழகியாகிய அவளைக் கண்டு அவன் மனம் இழந்ததில் ஆச்சரியமில்லை. தனது தோட்டத்தில் வேலை செய்யும் கூலிதான்






அவன் என்று கண்ட நஞ்சனின் மனம் ஆனந்தக் கூத்தாடியது. அவன் அடிக்கடி சுந்தரி வேலை செய்யும் பகுதிகளுக்குப் போனான். நஞ்சனுக்கு வாயில் அறுபது பற்கள் உண்டு. தெத்திப் பற்கள் என்பார்களே, அப்படி! அவன் வாய் அதனால் ஏதோ மலைக் குன்றுகள் மூட்டியடர்ந்த குகை போலிருக்கும். அதில் வெற்றிலைக் காவியும் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டுமா!

சம்பளம் போடும் வாரங்களில் எல்லாருக்கும் கடைசியாகத்தான் நஞ்சன் சுந்தரிக்குப் பணம் கொடுப்பான். புத்தம் புதிதான ரூபாய்களாகப் பார்த்து எடுத்து அவள் கையில் வைப்பதில் அவனுக்கு ஓர் ஆனந்தம். சுந்தரிக்கு முதலில் இது ஒன்றும் தெரியாது. ஆனால் ஒரு நாள் நஞ்சன் இரண்டு ரூபாயை அதிகமாகக் கொடுத்து "வைச்சுக்கோ, பின்னே!" என்று கூறின பிறகு தான் அவளுக்கு விஷயம் புரிந்தது. அந்த ரூபாயை வாங்க மறுத்த அவள், அன்று முதல் சம்பளம் வாங்குவதைக் கிழவியின் வேலையாக்கி விட்டாள். அறுபது வயதான பாட்டி சம்பளம் வாங்கப் போய்வர ஆரம்பித்தாள். நஞ்சனுக்குப் பாட்டியைக் கண்டு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது.

ஆனால்...!

மேஸ்திரி நஞ்சனா இதற்கெல்லாம் சளைத்தவன்! சுந்தரிக்கு வேலை அதிகம் கொடுக்கப்பட்டது. அவள் பறித்த தேயிலைகளெல்லாம் குறைத்து அளக்கப்பட்டன. பல விதங்களிலும் அவளுக்கு இன்னல்கள் விளைவிக்கப்பட்டன. குமரியைப் பிடிக்கக் கிழவியைச் சரி செய்ய ஆரம்பித்தான் நஞ்சன். கிழவிக்கு அடிக்கடி பலாப் பழங்கள் இனாமாகக் கொடுத்தான். ஒரு நாள் நஞ்சன் மனம் திறந்தே கிழவியிடம் தனது எண்ணத்தைக் கூறி விட்டான். கிழவிக்கு ஆனந்தம் தாங்க வில்லை. "மேஸ்திரி ஐயா எமது குட்டியைக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்கிறீரே, இது பெரிய பாக்கியமில்லை!" அவள் அப்படியே வசப்பட்டு விட்டாள். அன்றிரவு சுந்தரியைக் குழை அடித்தாள் பாட்டி. சுந்தரி எவ்வளவு மறுத்த போதிலும் கிழவி சளைக்கவில்லை.

சுந்தரி ரங்கனிடம் சொல்லி அழுதாள். ரங்கன் திடுக்கிட்டான். ஆனால் அவனால் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை. மலைச் சாதியனான மேஸ்திரியின் மூன்பு-கீழேயிருந்து வேலைக்கு வந்த அவனால் என்ன செய்ய முடியும்! சுந்தரிக்கோ பாட்டியை விட இஷ்டமில்லை. "நீ எங்கேயாவது ஓடினால், உன் பாட்டியை மலையிலிருந்து பள்ளத்திலே உருட்டி விடுவேன்!" என்றான்.

அவன் கூறியது வெறும் வாய்ப் பேச்சு அல்ல. உண்மையாகவே அவன் அவ்விதம் செய்யும் வல்லமையுள்ளவன்தான். வேண்டாத வரைப் பாதாளம் அனுப்புவது அவனுக்குப் புதிதல்ல. முன்பே ஒரு முறை ஒரு கூலிப் பெண்ணைப் பள்ளத்தில் தள்ளியதாக வழக்கு நடந்து கொலைக் குற்றம் ருசுவாகாமல் தப்பித்தவன் அவன்.

நாட்கள் ஓடின. இப்போது பலாப் பழம் விற்கச் சுந்தரி வருவதில்லை. பஸ்ஸும் முன் போல் அவ்விடம் நிற்பதில்லை. ஆனால் நடு ஹட்டித் திருப்பத்தில் டிரைவர் ரங்கனிடமிருந்து பெருமூச்சொன்று மட்டும் வெளிப்படும். ஆனால் அது பற்றி அறிந்தவர் யாருமில்லை.

சுந்தரிக்கும் நஞ்சனுக்கும் கலியாணம் நடந்து விட்டது. அது நடந்து ஒரு வருடம் ஓடி விட்டது. ரங்கன் ஜோரெல்லாம் போய் விட்டது. அவன் தங்கப் பொத்தான்கள் பித்தளையாகவே காணப்பட்டன. சட்டையில் கஞ்சியில்லை. உடம்பில் தென்பில்லை. வண்டியின் ஓட்டத்தில் உயிரில்லை.

ஒரு நாள் கிழவியைச் சந்தித்தான் ரங்கன். அவள் மிகவும் சந்தோஷமாய் இருப்பாள் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் அவளிடம் துக்கத்தின் சாயைதான் படர்ந்திருந்தது.

சுந்தரியை நஞ்சன் அடிக்கடி கொடுமைப் படுத்துவதாகக் கூறி அழுதாள் கிழவி. இதைக் கேட்ட ரங்கன் உள்ளம் குமுறியது. நஞ்சனைக் கொன்று விடலாமா என்று கூட ஆத்திரம் தோன்றியது. ஆனால் என்ன இருந்தாலும் சுந்தரியைத் தொட்டுத் தாலிகட்டியவன் நஞ்சன். அவன் அவள் கணவன். இந்த எண்ணம் அவனைத் தடுத்தது. உண்மைக் காதலின் உயரிய பண்பாடு அவன் கையைப் பின்னுக்கு இழுத்தது. நஞ்சன் இறந்தால் சுந்தரியின் கதி என்ன! அவனது உணர்ச்சி காதல்தான்; காமம் அல்ல. அவனது புனிதத் தன்மை அவனது மிருகத் தன்மையை வென்று விட்டது. எனவே, அவன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான்.

நடு ஹட்டிச் சாலையில் மரத்துக்குப் பத்து இருபதென்று தொங்கும் பலாப் பழங்கள் எல்லாம் அவனுக்கு அவள் நினைவை உணர்த்தின. பலாப் பழத்தின் முட்கள் அவனுக்கு நஞ்சனை நினைவுக்குக் கொண்டு வந்தன, ஆம்! இனிய சுளைகளைக் கொடுமைபுரிந்து காக்கும் வலுத்த முட்கள்போல் நஞ்சன் தோன்றி விட்டான்.


உங்கள் குழந்தையின் இருமலின் காரணத்தை வேரறுங்கள்
—அதை கட்டுப்படுத்துவதால் மட்டும் பயனில்லை
ஸிரோலின் நீங்கள் இருமுவதை மட்டுமல்ல நிறுத்துகிறது. அது நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளாமல் தடுத்து, அந்தக் கிருமிகளை ஒழிக்கவும் உதவி புரிகிறது. தவிர, ஸிரோலின் உங்கள் பசிருசியை அதிகரிப்பதுடன் நோய் விஷத்திலிருந்து பாதுகாப்பளிக்கிறது. வீட்டில் எப்பொழுதும் ஒரு புட்டி வைத்திருங்கள்.
ஸிரோலின்
'ரோஷ்'
SIROLIN
ROCHE
ROCHE

அன்று காலை முதலே 'பருவம்' ஆரம்பமாகி விட்டது. அடைமழை பொழியத் தொடங்கவே, அதனால் அன்று பஸ்ஸில் கும்பலே யில்லை.

அன்று வெள்ளிக் கிழமை. முன்பு ஒரு வெள்ளிக் கிழமைதான் அவள் பஸ்ஸை நிறுத்த முதன் முதலில் கை நீட்டினாள். இன்றும் அதே வெள்ளிக்கிழமைதான். ஆனால் அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

நடு ஹைட்டித் திருப்பம். ஒரு ஆள் கைநீட்டினான். பஸ் நின்றது. மழையில் தொப்பலாக நனைந்திருந்த அந்த ஆள் டிரைவருக்குப் பக்கத்திலே அமர்ந்தான். அவன் வேறு யாருமில்லை; கஞ்சன் தான்! பின்னாலிருந்த ஒருவன் அவனைப் பார்த்ததும், "நமஸ்காரமுங்க!" என்றான்.

மேஸ்திரி கஞ்சன் தலையைத் திருப்பி 'உம்' என்றான். "எங்க், அம்மா உடம்பு எப்படியிருக்குதுங்க!" என்று கேட்டான் அந்த ஆசாமி.

அதைக் கேட்டதும் ரங்கனின் மனம் பதறியது. மேஸ்திரியின் வாய் திறந்தது. "அது போயிட்டுது, கண்ணதை! நேற்று ராத்திரி ஆஸ்பத்திரிலே ஒழிஞ்சு போச்சு" என்று சொன்ன மேஸ்திரிக்குச் சிறிதும் வருத்தமே உண்டாகவில்லை. "சுந்தரி அம்மா இறந்து போயிட்டாங்களா!" – அந்தக் கேள்வியைக் கேட்டவனின் குரலிலே சோகம் படிந்தது.

அதைக்கேட்ட ரங்கனின்மனம் பதறியது. இந்த ஜன்மத்திலில்லா விட்டாலும் அடுத்த ஜன்மத்திலாவது கட்டாயம் சந்திப்போம் என்று கல்யாணத்துக்கு முன்பு சுந்தரி கூறிய கடைசி வார்த்தைகள் அவன் ஞாபகத்துக்கு வந்தன. ஆம்! அந்த ஜன்மம் பிறந்து விட்டது. இனி மேல் சந்திப்புத்தான் பாக்கி. மழையின் கடுமையிலும் சூறாவளியிலும் சுழற்சியிலும் அலைபடும் மரங்கள் 'ஆம்,ஆம்' என்று ஆமோதித்தன. ரங்கனின் கண்கள் நீர் மூடியது. கைகள் வெட வெடத்தன. கால்கள் உதறின. மேஸ்திரியின் பேச்சிலிருந்து மலைச்சரிவில் தடுக்கி விழுந்த சுந்தரி ஆஸ்பத்திரியில் மரணமடைந்ததாக அறிந்தான். அவன் மனம் கொதித்தது. மலைச்சாரலில் அவளாக விழுந்தாளா, கஞ்சன் கைவேலையா! யார் அறிவார்கள்!

நடுஹைட்டித் திருப்பம். "அபாயம், பாதை குறுகலானது!" என்ற அபாய அறிவிப்புப் பலகை தென்பட்டது, ரங்கன் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. பேய்க் காற்றில் ஆடிய யூகலிப்டஸ் மரங்கள், 'அடுத்த ஜன்மம், அடுத்த ஜன்மம்' என்று அவன் காதில் மூணு முணுத்தன. ரங்கனுக்கு யோசிக்க நேரமில்லை.

"சுந்தரி!" என்று அரற்றினான். அந்தப் பேய்க் காற்றின் பயங்கர ஓலத்திலே அவனுடைய அரற்றல் யாருக்கும் கேட்டிருக்காது. அவனது நெஞ்சக் கதவு திறந்து கொண்டது போன்ற ஒரு உணர்ச்சி. படாரென்ற சப்தம் அபாய அறிவிப்புப் பலகையில் மெயில் பஸ் மோதியது. குறுகிய வழியைக் கடந்து விட்டது பஸ். இனி அதற்கு எந்த அபாய அறிவிப்பும் தேவையில்லை. சட சடவென்று சப்தத்

அகில உலகச் சிறுகதைப் போட்டி

அகில உலகச் சிறுகதைப் போட்டிக்கு ஆங்கிலத்திலும், தமிழ் உள்படப் பன்னிரண்டு முக்கிய இந்திய பாஷைகளிலுமாக சுமார் ஏழாயிரம் கதைகள் வந்தன. அவற்றில் ஒவ்வொரு பாஷையிலிருந்தும் அந்தந்த மாகாணத்தில் நாலு கதைகள் பரிசுக்குரிய கதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியாவில் மேற்படி போட்டியை நிர்வகிக்கும் பொறுப்புள்ள "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக்கு அனுப்பப்பட்டன.

அந்தக் கதைகளை, இந்தியாவின் உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், பம்பாய் கவர்னர் ஸ்ரீ ஜி. எஸ். வாஜ்பேய், ஸ்ரீ பரதன் குமரப்பா இம்மூவரும் நீதிபதிகளாக இருந்து பரிசிலனை செய்து, அவற்றிலிருந்து பரிசுக்கு உரியவை என்று எட்டுக் கதைகளைத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.

அந்த எட்டுக் கதைகளில் ஸ்ரீ பி. ராமமூர்த்தி எழுதிய "ஆதார சக்தி" என்ற தமிழ்க் கதை ஏழாவது பரிசுக்குரிய கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதிபதிகள் தேர்ந்தெடுத்த கதைகளின் விவரமாவது:

	கதை	எழுதியவர்	பாஷை	பரிசுத் தொகை
1.	தியாகம்	ஸ்ரீமதி என். ஜே. தலால்	ஆங்கிலம்	ரூ. 1500
2.	திருடர்கள், ஜாக்கிரதை	ஸ்ரீ பொம்மி ரெட்டிபள்ளி சூர்ய ராவ்	தெலுங்கு	ரூ. 1000
3.	புலி சித்தரின் பத்தினி	பேராசிரியர் கே. ஏ. என். ராவ்	கன்னடம்	ரூ. 750
4.	பகைவன்	ஸ்ரீ நிர்மல குமார முதலி	ஆங்கிலம்	ரூ. 600
5.	மூன்று நாட்கள்	ஸ்ரீ சந்திரகுப்த வித்யாலங்கார்	ஹிந்தி	ரூ. 500
6.	பதினைந்து நிமிஷங்கள்	ஸ்ரீ டி. வி. உபாத்யாயா	ஆங்கிலம்	ரூ. 400
7.	ஆதார சக்தி	ஸ்ரீ பி. ராமமூர்த்தி	தமிழ்	ரூ. 300
8.	இரத்தம்	ஸ்ரீ குருதயால் சிங் 'பூல்'	பஞ்சாபி	ரூ. 200

இவற்றில் முதலில் குறிப்பிட்டுள்ள நாலு கதைகளும், அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, அமெரிக்காவில் உள்ள பிரபல பத்திரிகையான "நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்"க்கு அனுப்பி வைக்கப்படும்.

துடன் பெரும் பள்ளத்திற்குள் உருண்டது. சாதாரண பள்ளமா அது! மேஸ்திரியின் கொடும் நெஞ்சைவிட ஆழமான பள்ளம்! ரங்கனின் காதல் இருதயத்தைவிட ஆழமான பள்ளம்!

ரங்கன் அடுத்த ஜன்மத்தை அடையும் பாதையை அடைந்து விட்டான். பாவம்! மேஸ்திரிகூட விருப்பமின்றி அதே பாதையை அடைந்து விட்டான். ஒருவன் அதை வேண்டி வேண்டித் தினமும் எதிர்பார்த்தவன். மற்றவன் அதைச் சிறிதுகூட எதிர்பார்க்காதவன். விதி போலும்!

கஞ்சனுக்கு அவன் செய்த கொலை பாதகங்களுக்காக விதியளித்த தண்டனையா அது! அல்லது ரங்கன் சுந்தரியை அடையப் போகும் குறுக்கு வழியில் மறுபடியும் கஞ்சனைச் சேர்த்து விட்டதா விதி! அல்லது கிழவியை மலையிலிருந்து உருட்டி விடுவேன் என்று பயமுறுத்திய கஞ்சனைப் பார்த்து விதி சிரித்ததா! தெரியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். வேண்டுமென்று ரங்கன் பஸ்ஸை அபாயத்தில் சிக்கவைக்கவில்லை. காதலியின் மரணம் அவனது இருதயக் கதவைத் திறந்து விட்டது. எதிர்பாராத சமயத்தில். அவனது இருதய இயந்திரம் அப்படியே நின்று விட்டது. ஆனால் காரின் இயந்திரம் அப்பொழுதும் ஓடிக் கொண்டிருந்தது. காரின் இயந்திரத்துக்கு உணர்ச்சி ஏது!

மறு நாள் ஸ்தலத்திற்கு விஜயம் செய்த போலீசார் இறந்துபோன டிரைவர் ரங்கனின் சடலத்தைப் பலா மரக் கிளையொன்றில் கண்டனர். அவன் முகத்தில் பிரதிபலித்த அமைதியைக் கண்டு எல்லோரும் பிரமித்தார்கள். சுந்தரிக்கும் அவனுக்குமுள்ள காதலை ஒருவரும் அறியார்கள், பலா மரங்களைத் தவிர. அதே பலா மரங்கள் தான் இன்று அவனது மரண கீதத்தைப் பாடின. பாவம்! மேஸ்திரி அகால மரண மடைந்து விட்டான். பலத்த காற்றினால் வழி தவறி மழையில் வண்டி சாய்ந்து விட்டது என்று தீர்ப்புச் செய்தனர் பஞ்சாயத்தார். பலத்த காற்றும் கடுத்த மழையும் உண்மைக் காரணமில்லை. உள்ளப் புயலினால் ஏற்பட்ட விபத்து அது என்ற உண்மை அவர்களுக்கு எப்படித் தெரியும்! கண்டக்டருக்கும் பஸ்ஸில் வந்த இன்னொருவனுக்கும் நல்ல அடி. ஆனால் அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்றார் டாக்டர்.

மறுபடியும் மெயில் பஸ் தினம் தினம் அதே வழியே போகிறது. ஆனால் அதன் வேகத்திலே அந்தப் பழைய மிடுக்கு இல்லை. கடு ஹபட்டித் திருப்பமும் அவ்விடத்திலேயே இருக்கிறது. பழைய இடத்திலே புது அபாய அறிவிப்புப் போட்டிருக்கிறார்கள். எப்போதாவது பொழுது போகாவிட்டால் டிரைவரும் கண்டக்டரும் ரங்கனின் மரணம் பற்றிப் பேசுவார்கள்.

ஆனால் உள்ளக் குமுறலினால் விபத்துக்கு முன்பேயே தன் காதலியை அடைய எண்ணிக் குறுக்கு வழியை அடைந்த ரங்கனின் சோக சரித்திரம் யாருக்கும் தெரியாது.

ஒருவேளை வானளாவி நெடிதுயர்ந்து இருக்கும் அந்தப் பலா மரங்களைக் கேட்டால் தெரிய வரலாம். ஆனால் அவற்றின் மௌன பாஷை தான் நமக்குப் புரியாதே! என்ன செய்வது!

<u>அட்டைப்படம்</u>

அழகுத் தெய்வம்

கவி அரசர் பாரதியார் வானில், காற்றில், தேன் நிலவில், தண் புனலில் எங்கும் அழகைக் கண்டார். சிறுமை கண்டு பொங்கி எழுந்த மக்கள் சமுதாயத்தில் மாகாளியின் பேர் எழிலைக் கண்டார். இப்படி அவருக்கு அழகைக் காணும் பேற்றை ஒரு நாள் அழகுத் தெய்வமே தோன்றி அருளினளாம்.

இந்தச் சம்பவத்தை அழகுத் தெய்வத்தின் அருள் பெற்ற வாக்கிலே கவிஞர் வர்ணிப்பதைக் கேளுங்கள்:

மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்
வயது பதி னாறிருக்கும்
இளவயது மங்கை

பொங்கிவரும் பெருநிலவு
போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவரும் தோற்றம்

துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்

அங்கதனில் கண்விழித்தேன்
அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்

இந்த அழகுத் தெய்வத்தைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார் பாரதியார். அதற்கு அழகுத் தெய்வம் தெளிவான பதில்கள் அளித்தாள். அவற்றில் ஒன்றைப் பாருங்கள்:

காலத்தின் விதி மதியைக்
கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர்
கருவியாம் என்றாள்.

இதை வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு பங்கு கடைப் பிடித்தவர் பாரதியார் என்பதை நாம் நன்கு அறிவோம். அவருடைய கஷ்ட காலம் புதுச்சேரியில் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில்தான் அற்புதமான கண்ணன் பாடல்கள், மற்றுமுள்ள வேதாந்தப் பாடல்கள், சக்திப் பாடல்கள் ஏராளமாகப் பாடித் தமிழ்த் தாய்க்கு அருந்தொண்டு புரிந்தார். ஆம். தமது மதியினால் காலத்தைக் கருவியாகப் பயன் படுத்திக் கொண்டார். அதுமட்டுமன்றி காலத்தைக் கடந்து அமர கவியாகவும் இன்று விளங்குகிறார் அல்லவா!

** ** **

மங்கிய நிலவில் தோன்றிய அழகுத் தெய்வத்தை நமது சித்திரக்காரர் சந்திரா இவ்வார அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார். நிலவு இயற்றும் இந்திர ஜாலங்களை, அழகுத் தெய்வத்தின் புறப்படலமாக விளங்கும் கொடிகளும், இலைகளும், மலர்களும், வர்ணங்களும் நம் உள்ளத்தில் இயற்றுகின்றன. பாரதியாரின் சந்தேகங்களுக்குத் தக்க பதில்கள் கூறி அவருடைய கலக்கத்தைத் தீர்த்த விந்தையை, பூக் கூடையில் மலர்கள் கொண்டு வந்து வழங்கியதாகச் சித்திரக்காரர் வரைந்திருப்பது மிகப் பொருத்தம் அல்லவா!





சந்திரா.

கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா.வீ

18. குஸுமா திடுக்கிட்டாள்!

"ஏன் சார்! பத்திரிகை வெளியிடுவது சம்பந்தமாக நீங்கள் ஏதாவது முடிவு செய்தீர்களா, இல்லையா?" என்று ஸர் பிஹாரி லாலை ரமேஷ் கேட்டான்.

கர்ஜனைப் பத்திரிகையில் ஸர் பிஹாரி லாலுக்கு எதிராகப் பற்பல விதமான பொய்ச் செய்திகள் வெளியாகத் தொடங்கியிருந்தன. ஆலைத் தொழிலாளிகளிடம் அவர் எப்படியெப்படியெல்லாம் கொடுமையாக நடந்து கொள்கிறார் என்பதற்கு அநேக கற்பனை உதாரணங்கள் கவனம் செய்யப் பட்டுக் கூறப்பட்டன. ஸர் பிஹாரிலால் தம் கடமையென்று எண்ணி என்ன என்ன நல்ல காரியங்கள் செய்து வந்தாரோ, அவற்றையெல்லாம் தேசத் தொண்டர்கள் மிகவும் அலட்சியப் படுத்தி வந்தார்கள்; தங்களுக்குச் சாதகமான புது வியாக்கியானங்கள் செய்து அவற்றை மட்டம் தட்டி வந்தார்கள். பத்திரிகைக்காரர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? தமக்குத் தெரிந்தவாறெல்லாம் ஜோடித்துக் காது மூக்கு வைத்துப் பிரசுரித்து வந்தார்கள்; பிரசுரித்தவற்றைப் பிரபலப்படுத்தப் பற்பல யுக்திகளைக் கையாண்டு வந்தார்கள்.

இவ்விதமாகத் தொழிலாளர்களிடையே பரப்பப்பட்ட அதிருப்தி எத்தனையோ தடவைகள் பயங்கர உருவம் தரித்துக் கொண்டு உலவியது. அதன் பலனாகப் பெரிய வேலை நிறுத்தம் தொடங்கி விடக் கூடுமோ என்ற அச்சத்தைக்கூட வருவித்தது.

வேலை நிறுத்தம் காரணமாக ஏற்படக் கூடிய வேலையில்லாத் திண்டாட்டம், அதன் பலனாக ஏற்படக் கூடிய தீய செயல்கள், சண்டை சச்சரவுகள் ஆகிய எல்லாக் குற்றங்களும் ஸர் பிஹாரிலாலின் தலையில் அநாயாசமாகச் சுமத்தப்பட்டன.

பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகளைப் படித்த பிறகு படிப்போர் மனக் கண்களிலே சதியும் சூழ்ச்சியும் நகரத்தின் தலையிலே பருந்தாக வட்டமிட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் ஸர் பிஹாரிலால்தான் என்ற நினைவு அவர்கள் மனத்தில் அளவிட முடியாத அதிருப்தியை உண்டாக்கி வந்தது.

விலபுலன்கள் வாங்கிய பிறகு பல நாட்கள் இடை விடாமல் கர்ஜனைப் பத்திரிகையில் ஸர் பிஹாரி லாலைப் பற்றிய செய்திகளே மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆத்திர மூட்டும் அந்தச் செய்திகளை ரமேஷினால் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் அவன் மிகவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஸர் பிஹாரி லாலிடம் அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தான்.

"பத்திரிகை வெளியிட்டு நான் என்ன செய்யப் போகிறேன்?" என்று ஸர் பிஹாரி லால் அசுவாரசியமாகக் கேட்டார்.

"என்ன செய்வதா? உங்கள் உண்மை நிலைமையை ஊராருக்கு விளங்கும்படி நான் வெளியிடுவேன். நஞ்சு தோய்ந்த அந்தச் செய்திகளுக்கு நல்ல முறையில் பதில் அளித்து அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிப்பேன்!" என்று ரமேஷ் ஆவேசமும் ஆக்ரோஷமும் தொனிக்கச் சொன்னான்.

குஸுமா அருகில்தான் அமர்ந்திருந்தாள். அவன் சொல்லை அவளும் ஆமோதித்தாள்; "சூட்டுக்கு மேல் சூடாகக் கொடுத்தால் தான் அவர்கள் படிந்து வழிக்கு வருவார்கள்!" என்று அடித்தும் கூறினாள்.

"இந்த எழுத்தெல்லாம் ஒரு எழுத்தா? இதற்கு மதிப்பு வைத்து நாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமா? கிடக்கிறது குப்பை என்று விட்டுத்தள்ளுவது போக...!" என்று ஆரம்பித்தார் ஸர் பிஹாரி லால்.

"சார், இவ்விஷயமாக உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் பத்திரிகைகள் தாம் மக்களின் மனத்தை மாற்றுகின்றன என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். கிடக்கிறது குப்பை என்று நாம் ஒதுக்கினால் கடைசியில் அது பெரிய அனர்த்தத்தில் கொண்டு போய் விட்டு விடும்!" என்று இடைமறித்துக் கூறினான் ரமேஷ்.

"நஞ்சு தோய்ந்த சொற்களுக்குப் பதில் அளிக்க வேண்டுமென்றால், நாமும் நம்மை நஞ்சு தோய்ந்தவர்களாக அல்லவா ஆக்கிக் கொள்ள வேண்டி வரும்? நஞ்சுக்கு நஞ்சே மாற்று என்னும் கொள்கை ஏட்டோடு இருக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதோடு பதிலுக்குப் பதில் அளிக்கும் இந்தக் கோமாளிக் கலையில் எனக்கு அநுபவமும் இல்லை; நம்பிக்கையும் இல்லை. அப்படிச் செய்ய நான் விரும்பவும் இல்லை!" என்றார் ஸர் பிஹாரி லால்.

"அது சரிதான். இருந்தாலும் இம்மாதிரி பத்திரிகைகளில் வெளியாகும் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு எத்தனை அரசாங்க அதிகாரிகள் நம் காரியாலயத்தைச் சோதனை யிட வந்து போயிருக்கிறார்கள், தெரியுமா? இதனால் நமக்கு எத்தனை விதமான சிரமம் என்கிறீர்கள்? இது போன்ற சுமைகள் நம் பங்கில் அதிகரித்துக் கொண்டே போகு மானால், மற்ற காரியங்களை நாம் சரிவரக் கவனிக்க முடியுமா? அதற்காகத்தான் சொல் கிறேன். இம்மாதிரிக் குறிப்புகளுக் கெல் லாம் சரியான பதில் அளித்து நாம் நமது உண்மை நிலைமையை வெட்ட வெளிச்ச மாக்கி விட வேண்டும். அப்பொழுதுதான் நாம் சிந்தையற்று நம் வேலைகளைச் சரிவரக் கவனிக்க முடியும்!" என்றான் ரமேஷ்.

"ஆமாம், அப்பா! இவர் சொல்வது வாஸ் தவம்தான், அப்பா! இதில் என்ன பெரி தாகச் செலவாகி விடப்போகிறது என்கி றீர்கள்? லட்சக் கணக்கில் ரூபாய்கள் எப்படி யெப்படி யெல்லாமோ செலவாகின்றன. பத்தாயிரம் பதினையாயிரம் ஒரு பெரிய செலவா?" என்று கேட்டாள் சுஸீமா.


"செலவைப் பற்றிச் சிந்திக்க வில்லை. இந்தச் செலவைச் செய்வதனால் நாம் என்ன நன்மையைக் காண்போம் என்றுதான் கேட் கிறேன்! வீணில் விரோதத்தை விலைக்கு வாங்கிக் கொள்வதாக முடிந்து விட் டால்...? உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும் என்ற கதையாக முடிந்து விடக்கூடும் அல்லவா? அது மட்டும் அல்ல; நல்ல பத்திரிகை நடத் துவதென்றால் அதற்குத் தகுந்த மனி தர்கள் வேண்டும்!"

"அதற்கு என்ன? தகுந்த மனிதரை நான் கொண்டு வருகிறேன். எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். இந்தத் தொழி லில் அநுபவம் மிக்கவர். அவரை நிய மித்து விட்டால் போயிற்று!" என்று ரமேஷ் தன் நண்பன் ஜகதீசனை நினைத் துக் கொண்டு கூறினான்.

இதே சமயம் அங்கே மில் மானேஜர் வந்து சேர்ந்தார். அவர் பெயர் பிராணலால். தம் வாழ்நாள் முழுவதையும் ஸர் பிஹாரி லாலுக்கு ஊழியம் செய்தே அவர் போக்கி விட்டார். நம்பிக்கைக்குப் பாத்திரமாகப் பழகிப் பழகி அவர் சிறிய வேலையிலிருந்து பெரிய பதவிக்கு உயர்ந்தவர். பிஹாரிலால் அவர் மீது முழு நம்பிக்கை வைத்து மில் மானேஜர்போன்ற பொறுப்புள்ள பதவியை ஒப்படைத்திருந்தார். கடமையே கண்ணாக உள்ள பிராணலால் நெடு நாட்கள் வரை மிகத் திருப்திகரமான முறையில் அந்தப் பொறுப்பையும் நிர்வகித்து விட்டார். அதன் பலனாகப் படிப்பில் மிக்க ஆர்வம் கொண்ட ஸர் பிஹாரிலால் தம் தொழில் சம்பந்த மான சகல பொறுப்புகளையும் அவரிடமே விட்டு விட்டார்.

பிராணலால் வந்ததும் வராததுமாக, "சார்! இனிமேல் கொஞ்சமும் பொறுக்க முடியாது. இவர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல ஏற்பாடு செய்து விட வேண்டும். அப் பொழுதுதான் சரிக்கட்டி வரும்!" என்று புகார் கூறத் தொடங்கி விட்டார்.

"இவர்களுக்கு என்றால் எவர்களுக்கு? விஷயத்தை விவரமாகச் சொல்லாமல் இப் படிப் பூடகமாகப் பேசினால்......?" என்று கேட்டார் ஸர் பிஹாரி லால்.





ஒரு விநாடி கூட கவலை வேண்டாம்

சமனுள்ள, போஷாக்கு உணவை அருந்துவதற்கு அறிகுறியாக, அவனது புன்னகையும், உறுதியான அங்கங்களும், ஆரோக்கியமான உடம்பும் உள்ளன. இதை அவனுக்கு லாக்டோஜென் அளிக்கிறது. ஏனெனில் அவனது இயற்கை உணவான தாய்ப்பாலைப் போன்றது அது; லகுவாக ஜீரணமாகும்.



நம்புங்கள்

LACTOGEN லாக்டோஜென்

தாய்ப்பால் இல்லாதபோது

இலவச லாக்டோஜென் போல்டர் பெற இந்தக் கூப்பனை எழுதி தபாலில் இவ்விலாசத்துக்கு அனுப்புக.

நெஸ்ல்ஸ் புராடெக்ட்ஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி 396, கல்கத்தா.

பெயர் ....

விலாசம் ....

....

ட0/07

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் சால், குலைக்கட்டி வியாதிகளுக்கு வழக்கமான மாதாந்திர விஜயம்

நோயாளிகளின் சௌகர்யத்தை முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்குறித்த ஊர்களுக்கு அதனதன் எதிரே குறித்த தேதிகளில் பிரதி மாதமும் விஜயம் செய்வதால் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனை நேரம்: காலை 9-11 மணி; மாலை 3-5 மணி

இடம்	தேதி		இடம்	தேதி	
தஞ்சாவூர்	17	காலை & மாலை	சீர்காழி	23	காலை
பட்டுக்கோட்டை	18	காலை	சிதம்பரம்	24	காலை & மாலை
திருத்துறைபூண்டி	18	மாலை	கடலூர்	25	காலை & மாலை
மன்னார்குடி	19	காலை & மாலை	விழுப்புரம்	26	காலை & மாலை
திருவாரூர்	20	காலை & மாலை	திருக்கோயிலூர்	27	காலை
நாகப்பட்டினம்	21	காலை	விருத்தாசலம்	27	மாலை
நன்னிலம்	21	மாலை	காஞ்சீபுரம்	28	காலை & மாலை
மாயூரம் டவுன்	22	காலை & மாலை	வேலூர்	29	காலை & மாலை

இடமும் ஆலோசனை நேரமும் வழக்கப்படியே

விவரங்களுக்கு எழுதவும்:

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை-4 ★ திருச்சிராப்பள்ளி (தெப்பக்குளம்) ★ கும்பகோணம் (பெரிய தெரு)

"அதுதான் உங்கள் பத்திரிகைக்காரர்கள், உங்கள் சோற்றைத் தின்று உங்களுக்கே துரோகம் இழைப்பவர்கள், உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு உங்களுக்கே தீமை நினைப்பவர்கள், இவர்களைப் பற்றித்தான் சொல்கிறேன்!" என்றார் பிராண லால்.

"இவர்களை என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் வக்கீலைக் கலந்து ஆலோசனை கேட்டேன்! இது என்ன தொல்லை? தினம் பொழுது விடிந்து பொழுது போனால் பேச்சு, பிரசங்கம், சண்டை, சச்சரவு! கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய் விட்டது. நீங்கள் சரியாக வேலை செய்யுங்கள் என்று ஜனங்களிடம் சொல்கிறதில்லை. 'எதற்காக உழைத்து உழைத்துச் சாகிறீர்கள்? சம்பளத்தை அதிகமாகக் கேட்பதற்கென்ன? உங்கள் அறியாக் குழந்தைகள் பசியால் வாடுவது, உங்கள் முதலாளிகள் மோட்டாரில் உல்லாசப் பிரயாணம் போவதா? நிறுத்தி விடுங்கள் அப்பா, வேலையை!' என்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை என்ன செய்தால் தேவலை?" என்று கேட்டார் பிராணலால்.

"அது போகட்டும். வக்கீல் என்ன சொன்னார்?"

"என்ன சொன்னார்? அவர்களை ஓரிடத்தில் உட்கார விடாதே என்று சொன்னார். ஆனாலும் அவர்கள் வெளியே உள்ள பந்தாடும் மைதானத்தில் கூடி விடுகிறார்கள்; கூடிக் கூடிப் பேசுகிறார்கள். வேடிக்கை விளையாட்டு என்றால் இதுவா ஒரு வேடிக்கை விளையாட்டு? 'ஆட்டு வித்தால் யார் ஒருவர் ஆடாதாரே!' என்று சொல்வார்களே! அதுபோல் ஜனங்கள் எப்படி ஆட்டி வைத்தாலும் ஆடத் தொடங்கி விடுகிறார்கள். என்ன செய்வது?" என்றார் பிராணலால்.

"ஆமாம், அங்கே யார்யார் வருகிறார்கள்?" என்று விசாரித்தார் ஸர் பிஹாரிலால்.

"யார் கணக்கு எடுத்துப் பார்த்தார்கள்? எத்தனையோ விளையாட்டுப் பிள்ளைகள் கூடுகிறார்கள். தோன்றுவதைப் பேசுகிறார்கள்; போகிறார்கள். புது ஆசாமிகளுக்கு ஒரு தொழிலே கிடைத்து விட்டாற் போலத் தோன்றுகிறது. வேலை வெட்டி இல்லாமல் உட்கார்ந்திருப்பதற்கு இது எவ்வளவோ மேலானதல்லவா என்று எண்ணிக் கூடி விடுகிறார்கள். அவர்களில் ஒருவன் மனோஹர். சிவப்பழமாக இருப்பார்களே ஒரு அம்மா, அந்த அம்மாவின் பிள்ளை! அவனைப் பற்றி என்னவென்று சொல்வது போங்கள்! வெறிபிடித்தவன் மாதிரி வேலை செய்கிறான்! என்னைக் கேட்டால் அவனுக்குப் பித்தமே தலைக்கேறி யிருக்குமோ என்றுகூட எனக்குச் சந்தேகமா யிருக்கிறது!" என்றார் மானேஜர் பிராணலால்.

அவருக்குச் சட்டென்று மூளை கொதித்து விட்டது. அவர் நல்ல குணம் படைத்தவர்; நன்றி மறக்காதவர். ஆயினும் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வது என்று முடிவு கட்டி விட்டால், வாயில் வந்தபடி திட்டாமல் விட மாட்டார்.

"சிவப்பழமாக ஒரு அம்மா இருக்கிறார்களா? யாரது அந்த அம்மா? எனக்கு விளங்க வில்லையே!" என்று திகைத்தார் ஸர் பிஹாரி லால்.

"அப்பா! உங்களுக்கு அவளை நன்றாகத் தெரியும். ஆற்றங்கரைப் பங்களாவில் இருக்கிறாளே சாந்தா கௌரி, அவளே தான்! ஏன், பிராணலால் மாமா! அவளே தானே?" என்று கேட்டாள் குஸுமா.

"ஆமாம், ஆமாம்! அவளே தான்!" என்று பதில் அளித்தார் பிராணலால்.

ஸர் பிஹாரி லால் ஒரு கண நேரம் குஸுமாவையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, "ஏன், அம்மா! உனக்கு அவளைப் பற்றி எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் கேட்டார்.

"அடாடா! நான் சொல்ல மறந்தே போய் விட்டேனே! ஒரு நாள் சுகபாலும் சாந்திப் பிரியனும் உங்களைப் பார்க்க வந்தார்கள். நீங்கள் ஊரில் இல்லை. அன்று நான் மோட்டாரில் உலாவப் போய்க் கொண்டிருந்தேன். அவர்கள் போகும் மோட்டாரைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். நான் முடியாது என்று மறுதளிக்கலாமா? எனவே, சரியென்று சம்மதித்து அவர்களைக் காரில் ஏற்றிக் கொண்டேன். அவர்கள் சாந்தா கௌரியின் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்

களை அங்கே இறக்கி விடப் போன நான் தற்செயலாக அவளைப் பார்க்கும் படியாகி விட்டது. அவள் உங்களைக் கூட ரொம்ப விசாரித்தாள்!" என்று தான் போய் வந்த விருத்தாந்தத்தை ஆதியோடு அந்தமாக எடுத்துக் கூறினாள் குஸுமா.

"அப்படியா? ரொம்ப சரி!" என்று கூறிய ஸர் பிஹாரிலால் எழுந்து நின்றார். அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் அவர் ஏகாந்தமான தமது படிக்கும் அறைக்குச் சென்று விட்டார்.

பிராணலால், குஸுமா, ரமேஷ் மூவருக்குமே அதைப் பார்க்க ஆச்சரியமாயிருந்தது. ஸர் பிஹாரிலால் இப்படித் திடுதிப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் எழுந்து போவானேன்? இந்தக் கேள்வி மூவருக்கும் ஏக காலத்தில் தோன்றவே, ஒருவரையொருவர் பார்த்தனர்.

இதே சமயம் ஒரு ஆள் மூச்சு வாங்க ஓடி வந்தான். ஓடி வந்தவன் பிராணலாலைப் பார்த்து, "தொழிலாளிகள் வேலைக்கு வர முடியாது என்று மறுக்கிறார்கள். காவாலித்தனமான காரியங்களிலும் இறங்கியிருக்கிறார்கள்!" என்றான்.

"நான் நினைத்தேன். நான் எதிர்பார்த்தது தான் நடந்திருக்கிறது. எசமானிடம் தகவல் தெரியுங்கள். நான் போய்ப் பார்க்கிறேன்!" என்று சொல்லி விட்டுப் பிராணலால் வந்த ஆசாமியுடன் வேகமாக வெளியேறினார்.

பிராணலால் புறப்பட்டுச் சென்று விடவே குஸுமாவும் ரமேஷும் மட்டுமே அந்த அறையில் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அப்படி தனித்திருக்கும் வாய்ப்பு அவர்களுக்குப் பாக்கிய வசத்தினால் தான் கிட்டியிருந்தது. ஆனால் இருவருமே இத்தகைய வாய்ப்புகள் கிட்டும் பொழுதெல்லாம் அதைத் தவிர்க்கவே இதுகாறும் பாடுபட்டு வந்துள்ளனர். இன்றைக்கும் அந்த முயற்சி நடக்காமல் இல்லை.

"எசமானருக்கு நீங்கள் தகவல் தெரிவித்து விடுகிறீர்கள் அல்லவா?" என்று குஸுமாவைக் கேட்டான் ரமேஷ்.

"எனக்குப் பயமாயிருக்கிறது. ஏனென்றால் அப்பா இதுமாதிரி நடந்து கொண்டதேயில்லை. இம்மாதிரி எப்பொழுதாவது திடீரென்று எழுந்து விட்டால், அப்புறம் இரண்டு மூன்று மணி நேரத்துக்கு யாரையுமே பார்ப்பதில்லை; பேசுவதும் இல்லை!" என்றாள் குஸுமா.

"இருந்தாலும் நீங்களே சொல்லிப் பாருங்கள்! என்ன இருந்தாலும் இன்றைக்கு இருக்கும் நிலைமை வேறு அல்லவா?" என்றான் ரமேஷ்.

"நீங்களும் கூடவே இருந்தால்தான்..." என்றாள் குஸுமா கொஞ்சலாக.

இருவரும் சேர்ந்தாற் போலவே எழுந்து உள்ளே சென்றனர். நேரே பிஹாரிலாலின் புத்தகசாலைக்கெதிரே போய் நின்றனர். குஸுமா மெதுவாகக் கதவைத் தட்டினாள்.

பிஹாரி லால் உள்ளிருந்த வண்ணமே, "யார் அது?" என்று கேட்டார்.

"நான்தான்!" என்றாள் குஸுமா.

"யார்? குஸுமாவா?"

இந்தக் கேள்வியைக் கேட்ட பிஹாரி லாலின் குரல் ஒரு நிலையில் இல்லை.

"ஆலைத் தொழிலாளிகள் வேலைக்கு வர மறுக்கிறார்களாம். காவாலித்தனமான காரியங்களில் இறங்க முயலுகிறார்களாம். பிராண லால் இந்தத் தகவல் வந்ததும் ஆலைக்கு ஓடியிருக்கிறார். இந்தத் தகவலை உங்களுக்குத் தெரிவிக்குமாறு என்னிடம் சொல்லிப் போனார்!" என்றாள் குஸுமா.

"கவலைப்படாதே! இது ஒன்றும் பெரிய விஷயம், இல்லை!"

"ஏன், அப்பா! நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டாள் குஸுமா.

"அட! உன்னை யார் வர வேண்டாம் என்று இங்கே தடுத்தார்கள்?" என்றார் ஸர் பிஹாரி லால்.

கதவைத் திறந்து கொண்டு குஸுமா உள்ளே நுழைந்தாள். அவளுக்குத் துணுக்கென்றது. மேலே அடி எடுத்து வைக்க யோசனையாகி விட்டது. இருதயம் 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது. காரணம், அவள் அந்த அறைக்குள் ஒரு நிழலுருவம் ஓடி ஒளிவதைப் பார்த்ததுதான்! அந்த அறைக்குள் யார் வந்தார்கள்? எப்படிப் போனார்கள்? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. வெளியே போவதற்கு வேறு வழி கூட அந்த அறையில் இல்லையே! ஆனால் ஒரு சிறிய கதவு அடுத்த அறைக்குப் போவதற்கு இருந்தது. அதுவும் இந்தப் பக்கமாக மூடியிருந்தது. அதனால் வந்தவர் அந்த வழியாகவும் போயிருக்க முடியாது. குஸுமா கண்களை நிமிர்த்திப் பிஹாரி லாலைப் பார்த்தாள். அவர் கண்கள் சிவந்து நிலைத்திருந்தன. எப்பொழுதுமே சாந்தம் தவழ்ந்து காணப்படும் அவரது முகத்திலே கலவரக் குறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. கற்பனைக்கும் அப்பாற்பட்ட அற்புத சாகசச் செயல்களைக் கண்டால், மனிதன் எப்படித் திகைப்புறுவான்? அப்படித்தான் அவரும் திகைப்பே உருவாகக் காணப்பட்டார்.

அவ்விடத்துக் காட்சிகளைக்கண்ட குஸுமாவுக்கு அந்தச் சூழ்நிலையே மண்ணுலகத்தை மேவினதாகத் தோன்றியது. கண்களில் திகைப்பு மூட்ட, "ஏன், அப்பா! இங்கே யார் வந்திருந்தார்கள்?" என்று அவரிடம் கேட்டாள் குஸுமா.

"இங்கேயா? யாரும் வர வில்லையே, அம்மா!" என்றார் பிஹாரி லால். ஆனால் அவருக்குக் குஸுமாவை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்க்க அச்சமாயிருந்தது. அவர் அதைக் காட்டிக் கொள்ளா விட்டாலும், முகம் நன்றாகக் காட்டி விட்டது.

குஸுமா தனக்குப் பின்னால் வந்த ரமேஷைத் திரும்பிப் பார்த்தாள். காணக் கூடாத பொருளைக் கண்டு விட்டது போன்ற



''கல்கி'' அச்சக மிஷின் இலாகா போர்மென் திரு மணவாள நாயுடு அவர்களின் புதல்வி செல்வி நாராயணிக்கும், திருவள்ளூர் ஸ்ரீ தாசிரி கேசவலு நாயுடு குமாரன் செல்வன் புண்ணியகோட்டிக்கும் செப்டம்பர் இரண்டாம் தேதி சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின்போது ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் ''கல்கி'' காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர். வாழ்க மணமக்கள்!

உணர்ச்சி ரமேஷின் முகத்திலே கோடிட வில்லை. அதைக்கண்ட குஸுமாவுக்கு மேலும் வியப்பாக இருந்தது. ''ஏன், ரமேஷ்! உங்களுக்கு ஒன்றும் தெரிய வில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லையே!'' என்றான் ரமேஷ்.

''இல்லையா?'' என்று கேட்ட குஸுமாவின் வியப்புக்கு ஓர் எல்லை யில்லை.

ஸர்பிஹாரிலால் எங்கே உட்கார்ந்தாலும், அவர் உட்காரும் இடத்தின் சூழ்நிலை அமைதி நிலவியதாகி விடும்; கம்பீரம் நிறைந்ததாகி விடும்; எந்தப் பொருளும் எவ்வித அசைவும் இன்றி அவருடைய ஆக்ஞைக்கு உட்பட்டது போலாகி விடும். கார சாரமான பேச்சுக்கோ, கலகலப்பான சிரிப்புக்கோ அவர் இருக்கும் இடத்தில் இடமே கிடையாது. இயல்பாக உள்ள குரலுக்கு மேலுள்ள குரலில் பேசுவது என்பது கூட அங்கே முடியாது.

''அப்பா! என் கண்களுக்கு இங்கே ஏதோ தோன்றியது. ஏதோ ஒன்று அந்த அறையில் உலாவுகிறது என்பது மட்டும் நிச்சயம். எனக்கு இவ்விஷயத்தில் துளிக் கூட நம்பிக்கைக் குறைவு கிடையாது. அதனால் நீங்கள் இந்த அறையில் அதிகமாக உட்காராதீர்கள்!'' என்றாள் குஸுமா.

ரமேஷுக்கு ஏக வியப்பாய்ப் போய் விட்டது. இத்தனை படித்த பெண்ணுக்கு இவ்வளவு பிரமையா? அவன் அகத்திலே தோன்றிய வியப்பு முகத்திலும் விரிந்தது.

''சரி! இனிமேல் நான் இங்கே அதிகமாக உட்கார வில்லை. ஆனால் நான் இங்கே உட்கார்ந்திருக்கும் பொழுதெல்லாம் நீ இங்கே அதிகமாக வரக் கூடாது! என்ன தெரிந்ததா?'' என்றார் பிஹாரிலால் பலமாகச் சிரித்துக் கொண்டே.


ஆனால் அவர் சிரித்த அந்தச் சிரிப்பில் செயற்கைதான் அதிகமாக மிளிர்ந்தது; அதுவும் பார்ப்பவர்கள் யாருமே பளிச் சென்று சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் அமைந்திருந்தது.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்ட குஸுமாவின் குரலில் ஆச்சரியத்தோடு அச்சமும் கலந்து ஒலித்தது.

''ஏன்? உனக்குப் பயமாயிருக்கிறதா, என்ன? அப்படியானால் வா! தோட்டத்தில் போய் உட்காருவோம்!'' என்று சொல்லிப் பிஹாரிலால் நாற்காலியி லிருந்து எழுந்தார். எழுந்தவர் மேலே அடி எடுத்து வைக்காமல் இடது கையினால் தம் தலையை ஒரு முறைக்கு இருமுறையாகத் தடவி விட்டுக் கொண்டார். அப்படி அவர் தடவி விட்டுக் கொண்ட பொழுது அறையின் அறிதற்கியலாத சூழ்நிலையின் சுமையைத் தம்முடைய தலையி லிருந்து ஒரேயடியாக இறக்கப் பார்க்கிறாரோ என்று தோன்றியது.

பிறகு மூவரும் சேர்ந்தாற் போலவே வெளியே வந்தார்கள். வெளியறையில் ஜுகல்கிஷோர் மெதுவாக இங்கும் அங்கும் நடை போட்டவாறு உலாவிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



தங்கையின் கடிதம்

எஸ். தேவராஜன்

இந்தோ – சிலோன் எக்ஸ்பிரஸ் சென்னையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. பொழுது புலர்ந்து விட்டது. இன்னும் சில நிமிடங்களில் வண்டி தாம்பரத்தை அடைந்து விடும். தாம்பரத்தில் இறங்க வேண்டியவர்கள் தங்கள் சாமான்களை எண்ணிக்கொண்டும், தங்கள் உடைகளைச் சரிப் படுத்திக் கொண்டும், தாம்பரத்தில் இறங்குவதற்காகத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். கதிரவன் தன் மெல்லிய கிரணங்களை வண்டிக்குள் பிரயோகிக்க ஆரம்பித்து விட்டான். ஆனால் சிவராமனும் அவன் மனைவியும் இன்னும் தங்கள் தூக்கத்திலிருந்து விடுதலை அடையவில்லை.

"என்ன அக்கா, இப்பொழுது வரும் ஸ்டேஷன் தான் சென்னையோ ?" இது சுசிலாவின் குரல்.

"இல்லை சுசி, இப்பொழுது வருவது தாம்பரம். சென்னையை அடைய இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்." இது சிரோமணியின் குரல். "எனக்குத் தான் தூக்கம் வரவில்லை; நீயாவது நன்றாய்த் தூங்கி யிருக்கக் கூடாதோ !"

"எப்படி அக்கா தூங்குவது ! விழுப்புரம் வரும் வரை உட்காரக்கூட இடம் கிடைக்கவில்லையே ! அப்பாவும் அம்மாவும் படுத்துக் கொள்ள இடம் கிடைத்ததே—அதுவே அதிசயம் !"

வண்டி தாம்பரத்தை அடைந்து விட்டது. சிவராமனும், அவரது குடும்பமும் இருந்த பெட்டியில் வந்த எல்லாப் பிரயாணிகளும் அங்கு இறங்கி விட்டார்கள்.

"அப்பாடா, இனி நன்றாகப் படுத்துக் கொள்ளலாம். கொஞ்ச நேரமாவது நான் தூங்குகிறேன்," என்று சொல்லிக் கொண்டே சுசிலா ஓர் பெஞ்சியில் படுத்துக் கொண்டாள். இரவு முழுவதும் கண்ணயராததால் அவளுக்கு உடனே தூக்கமும் வந்து விட்டது. ஆனால் சிரோமணி மட்டும், முயன்றும் தூங்க முடியவில்லை. பெற்றோர்களும் தங்கையும் தூங்கும் பொழுது, தான் மட்டும் ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிற்றுண்டி விற்பவர்கள் இங்கு மங்கும் அலைந்து கொண்டே தங்கள் வேலையில் மூழ்கியிருந்தார்கள். பிரயாணிகளின் பேச்சொலி விற்பனையாளர்களின் குரலுக்குச் சுருதி சேர்ப்பது போல் இருந்தது. மின்சார வண்டிகள் வருவதும் போவதுமாக இருந்தன. ஆனால் சிரோமணியின் கவனம் மட்டும் இதில் ஒன்றிலும் செல்லவில்லை. அவளுடைய கண்கள் வெளியே நோக்கினவாறு இருந்தனவே ஒழிய, அவளுடைய உள்ளம் ஏதோ கற்பனை செய்து கொண்டிருந்தது.

அவளும் ஓர் பெண்தானே ! அவளும் இயற்கையின் விதிக்கு அடங்கி நடக்க வேண்டியவள்தான். பெண்ணுள்ளம். அதுவும் இன்னும் இரண்டு நாட்களில் ஒருவனுக்கு இல்லாளாகப் போகிற மங்கையின் பக்குவ மனம். கேட்பானேன் ! கற்பனை கரை கடந்து விட்டது. வரப்போகும் மணாளனை ஏற்கெனவே ஒரு முறை சந்தித்திருக்கிறாள், அவன் பெண் பார்க்கத் திருச்சிக்கு வந்த பொழுது. அவன் சிரோமணிக்கு ஏற்ற கணவன் என்று எல்லோருமே சொல்லி விட்டனர்.

அவனுடைய அழகு சிரோவின் அழகுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. நல்ல குணமுடையவன். சென்னையில் சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கிறான். நல்ல அறிவாளி. தன்னைப் பார்த்த பொழுதே தன்மீது அவனுக்கு அன்பு பிறந்து விட்டது என்பதைச் சிரோ அன்றே உணர்ந்து விட்டாள். தன்னைப்போன்ற பாக்யசாலி யாருமே கிடையாது என்று அவளுடைய உள்ளம் பூரித்தது. அவனுடைய உருவத்தைத் தன் மனக்கண் முன் கொண்டு வந்து, அதைக் கண்டு ரசித்துக் கொண்டேயிருந்தாள். கல்யாணம் ஆனபிறகு அவரிடம் எப்படியெல்லாம் பழக வேண்டும் என்று யோசனை செய்து கொண்டிருந்தாள். அவருடன் தான் கடற்கரைக்குப் போவது போல் அவள் கற்பனை செய்து கொண்டாள்.

ஆகா ! என்ன ரம்யமான மாலை ! அவர் அருகில் இருப்பது அவளுக்கு எல்லையற்ற ஆனந்

தத்தை அள்ளிக் கொடுத்து விட்டது. இன்ப லோகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். கடல் அலைகளின் ஓசைகூட அவள் காதில் விழவில்லை. அவருடைய இன்ப மொழிகள் அவளுக்குப் பரமானந்தம் ஊட்டின. அங்கு வீசிக் கொண்டிருந்த இளங்காற்று அவர்களுடைய சந்தோஷத்தைப் பன்மடங்காகப் பெருக்கியது.

வண்டி சென்னையை அடைந்து விட்டது. சிரோவின் கற்பனையும் கலைந்து விட்டது. வண்டி தாம்பரத்தை விட்டுக் கிளம்பியதும், சென்னையை அடைந்ததும் ஒன்றுமே சிரோவுக்குத் தெரியாது. அவள்தான் இன்ப உலகத்தில் இருந்தாளே!

"அம்மா, எழுந்திரு. எழும்பூர் வந்து விட்டது" என்று தன் அன்னையை எழுப்பினாள் சிரோமணி. இதற்குள் சிவராமனும், சசியும் எழுந்து விட்டனர். சிவராமன் சாவதானமாக, தலையை வெளியே நீட்டினார். மாப்பிள்ளையும் இன்னும் இரண்டு மூன்று பேரும் தங்களுக்காகக் காத்திருப்பதைக் கண்டு களிப்படைந்தார்.

"என்ன - மாப்பிள்ளை, சௌக்கியமா!"

"சௌக்கியம்தான் மாமா, ரயில் பிரயாணம் எப்படி இருந்தது!"

"இன்றைக்கு வண்டி சரியான நேரத்தில் வந்து சேர்ந்து விட்டது." இது மாப்பிள்ளையின் தந்தையின் குரல்.

"அடேடே, நீங்களும் வந்திருக்கிறீர்களா! வீட்டில் எல்லோரும் சௌக்கியம்தானே!" என்று சிவராமன் குசலம் விசாரித்தார். பிறகு சிவராமனும், மாப்பிள்ளையின் தந்தையும் பேசிக்கொண்டே முன்னேற, மற்றவர்கள் அவர்களைப் பின் தொடர்ந்தனர். இவர்கள் எல்லோருக்கும் முன்னால் போர்ட்டர் சாமான்களுடன் சென்று கொண்டிருந்தான். மாப்பிள்ளை சிரோமணியைக் கவனிப்பதும், அவள் அவனை சிரிக்குவதும், இவர்கள் இருவரையும் சசிலா பார்த்து ரசிப்பதும், ஒரு நாடகமாகவே இருந்தன.

"ரயிலில் கூட்டம் அதிகமாய் இருந்ததோ!" என்று மாப்பிள்ளை மெதுவாகக் கேட்டு வைத்தான். இதற்குப் பதில் சொல்ல சிரோ வெட்கப்பட்டுக் கொண்டே வாய் திறவாமல் நடந்தாள். அக்காவே பதில் சொல்லட்டும் என்று சசிலா ஒன்றும் பதில் அளிக்கவில்லை. சிறிதுநேரம் மௌனம். பிறகு, "ஆமாம் அத்திம்பேரே! சிரோ தூங்கவேயில்லை" என்று சசி ஒரு போடு போட்டான். சசியைச் சும்மா இருக்குமாறு சிரோ சமிக்ஞை செய்தாள். "நான் நினைத்தேன்—இப்பொழுதெல்லாம் ரயில் பிரயாணமே ஒரு பெரும் அவஸ்தைதான்" என்று உண்மையை விளம்பினான் மாப்பிள்ளை. இவ்வாறு மாப்பிள்ளை வினவுவதும், சிரோவுக்குப் பதிலாகச் சசி பதிலளிப்பதும், மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து ரசிப்பதுமாய் எல்லோரும் வீடு போய்ச் சேர்ந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமை. சிரோமணியின் மண நாள். கல்யாண வீட்டில் ஒரே குதூகலம். உறவினர்களும் நண்பர்களும் வந்து குவிந்து விட்டனர். மேளத்தின் ஒலியும், நாதஸ்வரத்தின் இன்னிசையும் கேட்போர் மனத்தைக் கவரும்படியாக இருந்தன. சிரோ, பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு, பெண்களுக்கே உரிய நாணத்துடன், மாப்பிள்ளையின் அருகில் மணவறையில் உட்கார்ந்திருந்தாள். சசிக்கு ஓய்வே யில்லை. அதிக வேலை. இங்குமங்கும் போய்க்கொண்டேயிருந்தான். மாப்பிள்ளை தன் ஓரக் கண்களினால், சிரோவையே பார்த்துக் கொண்டிருந்தார். மந்திர கோஷங்கள் வானைப் பிளந்தன. வந்திருக்கும் விருந்தினர் மணமக்களை ஆசீர்வதிக்கக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலருக்கு நடக்கப்போகும் விருந்திலேயே எண்ணம். இன்னும் சிலர் வந்திருப்பவர்களையே கவனித்துக் கொண்டிருந்தனர். சிரோவின் தாய் ஆனந்தமாகச் சிரோவின் பின்னால் அமர்ந்திருந்தாள்.

முகூர்த்த நேரம்—மங்கள வாத்யம் ஒலித்தது—சிரோமணி இல்லாள் ஆகி விட்டாள். எல்லோரும் மணமக்களை ஆசீர்வதித்தனர்.

"ஆ! மாப்பிள்ளை மூர்ச்சையாகி விட்டார்!"

"கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா."

"சார், கூட்டம் போடாதீங்கோ."

"கொஞ்சம் காற்று விடுங்கோ."

"யாராவது போய் டாக்டரை அழைத்து வாருங்கள்." அங்கு ஒரே அமளி. டாக்டர் வர வேண்டிய அவசியமே யில்லை. அவன் இறந்தான்—மாரடைப்பினால். தனது புது மனைவியை விட்டுப் பிரிந்து விட்டான். பாவம், சிரோ, தன் கணவனை மணவறையிலேயே இழந்து விட்டாள். சிவராமன் சிலைபோல் உட்கார்ந்து விட்டார். சிரோமணி தன் தாயார்மீது சாய்ந்து கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள். சசிலா தலையில் கை வைத்துக் கொண்டு அக்காவின் அருகிலேயே அமர்ந்து விட்டாள்.

மணக்கோலம் அலங்கோலமாயிற்று. மேளத்தின் ஒலிக்குப் பதிலாக அழுகையின் அலறல். வந்த விருந்தினரில் பலர் மெதுவாக நழுவி விட்டனர். சிரோமணி மணவறையிலேயே விதவையாகி விட்டாள். பாவம், தன் கணவனுடன் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை.

சில நாட்களாயின. சிவராமனின் குடும்பம் மறுபடியும் திருச்சியை நோக்கிப் பிரயாணம் செய்தது. சிரோவின் தாய் அழுது அழுது அவளுடைய கண்கள் வீங்கி விட்டன. சிரோ இப்பொழுது அழவில்லை. அழுது என்ன பயன்! பைத்தியம் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். சசி, அம்மாவைத் தேற்றிக் கொண்டேயிருந்தான். சிவராமன் துக்கம் விசாரிக்கும் பிரயாணிகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். சுவாரஸ்யமற்ற இந்த ரயில் பிரயாணம், சிரோவின் வருத்தத்தைக் கிளறிக் கொண்டேயிருந்தது. திருச்சி போய்ச் சேர்ந்த இக் குடும்பம் சுய நிலையை அடையப் பல நாட்களாயின.


சிரோவைப் பார்த்து அனுதாபப் படாதவர்கள் யாருமே இல்லை. அவளைத் தேற்ற வந்தவர்கள் அவளுடைய துக்கத்தைத்தான் இன்னும் அதிகரித்தனர். சசிதான் சிரோவுக்குத் துணையாக நின்றான். தாய் கூடத் தன் விதவை மகளைக் கண்டால் வெறுத்தாள். சமூகமே அவளை ஒதுக்கி வைத்து விட்டது. பூச் சூட்டிக் கொள்ள அவளுக்கு உரிமை யில்லை. குங்குமப் பொட்டு அவளை அலங்கரிக்க முடியாது. அவள் வீடே அவளுக்குச் சிறைச்சாலையாகி விட்டது. சசி இல்லா விட்டால் சிரோவும் தன் கணவனுடன் சென்றிருப்பாள். தங்கையின் அன்பும் ஆதரவும் அவளுக்கு ஆறுதல் அளித்தன. வீட்டில் சந்தோஷமே யில்லாமல் மூன்று ஆண்டுகள் கழிந்தன.

இதற்கிடையில், சிவராமன் தன் இளைய மகளுக்கு வரன் தேடுவதில் முனைந்திருந்தார். 'கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தால் முடியுமா! அவளுக்காவது கல்யாணம் நடக்க வேண்டாமா! அவளாவது இன்பமாக வாழ்க்கை நடத்தட்டும்.'

சிவராமனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு சீக்கிரம் அவளுக்கு வரன் கிடைத்து

அரித்து, எரிந்து, கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது

நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.



ஒரு புதிய சாதனம்


நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.



பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, ... திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ☼ மதராஸ் — 5
தந்தி: 'EVERMANS' . . . . போன்: 85834

சீட்டில் சேருவதற்கான கடைசி தேதி 22-9-54

முதல் ஏலத் தேதி 25-9-54

மாதாந்திரச் சீட்டுகள்

(4வது சனிக்கிழமை ஏலங்கள்)

25 மாதங்கள் — 25 மெம்பர்கள்


வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-
D	ரூ. 25/-	ரூ. 625/-
E	ரூ. 20/-	ரூ. 500/-
F	ரூ. 15/-	ரூ. 375/-
G	ரூ. 10/-	ரூ. 250/-

தெளிவாக விலாசம் எழுதி விண்ணப்பித்தால் சீட்டு விதிகளின் இலவச பிரதி அனுப்பப்படும். சீட்டில் சேர்த்துக்கொள்ளும் உரிமை விதியைச் சார்ந்தது.

(போர்டார் உத்தரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை





விடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. சாதாரண வரனுமல்ல. இந்தியக் கடற்படையில் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவர். பெண் பார்க்க வருவதாயும் நாள் குறித்துக் கடிதம் எழுதிவிட்டார். தாயின் மகிழ்ச்சி எல்லை கடந்துவிட்டது. கடற்படை அதிகாரி ஒருவர் தனக்கு மாப்பிள்ளை ஆகப்போகிறார் என்று சிவராமன் சற்றுக் கர்வம் கூட அடைந்து விட்டார். சிரோ, தன் தங்கைக்காவது எவ்வித இடையூறுமின்றி மணம் நடக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டாள். ஆனால், சுசியின் உள்ளம் மட்டும் ஓர் நிலையில் இல்லை. அவள் ஓர் தனிப் பிறவி. சீரிய பண்பு படைத்தவள். இனிய மனமுடையவள். தன் சகோதரியின் நிலையை நினைத்து ஏங்கினாள். தனக்கு வரப்போகும் மணாளனையும், இல்வாழ்க்கையையும் நினைக்கும் பொழுது, விதவைச் சகோதரியின் தோற்றம் அவளை வாட்டியது. "அவளுக்கு இல்லாத இன்பம் நமக்கெதற்கு!" என்ற கேள்வி எழுந்தது அவள் உள்ளத்தில். அதற்கு விடையும் தானே அளித்துக் கொண்டாள். "நான் எப்பொழுதும் கன்னியாகவேயிருந்து, என் சகோதரியுடன் வாழ்க்கை நடத்துவேன்—" அவசரமாகத் தன் அறைக்குச் சென்றாள். விரைவாக, பின் வருமாறு கடிதம் எழுதி அதைத் தபாலில் சேர்த்து விட்டாள்.

"அன்பு மிக்க ஐயா,

இந்தக் கடிதம் உங்களுக்கு மிக்க வியப்பை அளிக்கலாம். அல்லது தங்களுக்கு என் மீது வீண் வெறுப்பை உண்டாக்கலாம். ஒரு வேளை நான் கடிதம் எழுதியதே குற்றம் என்று நீங்கள் கருதினாலும் கருதலாம். ஆயினும் தாங்கள் ஒரு கற்றறிந்த வீரராகையால், மன்னிக்கும் மனப்பான்மையும் தங்களிடம் குடி கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

அடுத்த வாரம் பெண் பார்க்க வரப் போவதாக எழுதியிருக்கிறீர்கள். சுசீலா என்ற அந்தப் பெண் நான்தான். தங்களை நான் மணக்க வேண்டுமென்று என் பெற்றோர்களும், என் மூத்த சகோதரியும் விரும்புகின்றனர். என்னைப் பார்க்க வரும் நீங்களும் அப்படியே நிச்சயம் செய்து விடுவீர்களோ என்ற பயத்தினால்தான் இக்கடிதம் எழுதுகிறேன்.

நான் மணம் செய்து கொள்வதாய் எனக்கு உத்தேசமில்லை. அதற்கு ஒரே ஒரு காரணம் உண்டு. என் மூத்த சகோதரி-சிரோமணி-என்னை விட இரண்டே வயதுதான் மூத்தவள். அவளை நான் "சாந்த சிரோமணி" என்றே அழைப்பது வழக்கம். அவளைப் பார்ப்பவர்கள் என் அழகைக்கூட ரசிக்க மாட்டார்கள். அத்தனை அழகுள்ளவள் அதிர்ஷ்டமற்றவளாகி விட்டாள். அவள் பால்ய விதவை. மணநாளன்று மணவறையிலேயே மணாளனை இழந்து விட்டாள். இது விதியின் விளையாட்டு. கணவனுடன் ஒரு வார்த்தைகூட அவள் பேசியதில்லை. அவளைச் சமூகம் விதவை என்று ஒதுக்கி வைக்கிறது. அவள் வாழ்க்கை பாழாகி விட்டது. அவளுடன் இருந்து கொண்டு நான் கன்னிப் பெண்ணாகவே காலம் கழிக்க நிச்சயித்து விட்டேன். ஆகையால் என்னை மணக்க வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு வேண்டாம். இதை என் பெற்றோர்களுக்குத் தயவு செய்து தெரிவிக்க வேண்டாம். பெண் பார்ப்பதற்கென்று, கல்கத்தாவிலிருந்து இவ்வளவு தூரம் தாங்கள் வர வேண்டிய அவசியம் இல்லை. தாங்கள் வேறு

பெண்ணைத் தேடுவது உசிதம். இவ் விஷயத்தில் என் எண்ணம் ஈடேறும்படி நடந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சுசிலா.''

இக் கடிதத்தைத் தபாலில் சேர்த்த சுசி மிகவும் ஆறுதல் கொண்டவளாய்க் காட்சியளித்தாள். தன் அக்காவின் உயிரே தன் உயிராகக் கருதினாள். அவளுடைய துக்கத்தைத் தானும் பகிர்ந்து கொண்டாள். ஒரு வாரம் சென்றது.

அன்றுதான் பெண் பார்க்க வருவதாக அவர் எழுதியிருந்தார். சுசியின் தாயார் தடபுடலாகச் சமைத்துக் கொண்டிருந்தாள். சிவராமன் ஸ்டேஷனுக்குச் சென்று விட்டார், மாப்பிள்ளையை அழைத்து வர. சுசியை அலங்கரித்துக் கொள்ளும்படி அவசரப்படுத்தினாள் சிரோமணி. இந்த ஆடம்பரங்களைப் பார்த்த சுசிக்கு மனத்துக்குள்ளேயே ஓர் ஏளனச் சிரிப்பு ஏற்பட்டது. அன்று மாப்பிள்ளை வர மாட்டார் என்பதை அவள் மட்டும் தானே அறிவாள்!

சுசி ஏமாற்றமடையும்படி மாப்பிள்ளையுடனும், அவருடைய பெற்றோர்களுடனும், சிவராமன் வந்து சேர்ந்து விட்டார். சுசியின் முயற்சி வீணாகி விட்டது. அந்தக் கவலையுடன், அந்தக் கடிதத்தைப் பற்றி ஏதாவது சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயமும் கலந்து கொண்டது. ஒரு வேலையிலும் அவளுக்குப் புத்தி செல்லவில்லை. மாடியிலிருந்து கீழே யிறங்கியே வரவில்லை.

பெண் பார்க்கும் வைபவமும் ஆரம்பமாகியது. வெற்றிலை பாக்கை மென்று கொண்டே பெண் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார் மாப்பிள்ளை.

''சுசி, இங்கு வந்து, இவர்களுக்கு நமஸ்காரம் பண்ணு'' என்று தன் மகளை அன்பாக அழைத்தார் சிவராமன். சுசியின் கால்கள் உணர்வின்றி அவளை இழுத்து வந்தன. எல்லோரையும் வணங்கி விட்டு, குனிந்த தலை நிமிராமல் சுசிலா உட்கார்ந்து கொண்டாள்.

''உங்களுக்கு இந்த ஒரு பெண் தானோ!'' என்று சிவராமனைப் பார்த்துக் கேட்டார் மாப்பிள்ளையின் தந்தை. சிவராமனின் முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன. ''இல்லை இவளுக்கு மூத்தவள் ஒருத்தி இருக்கிறாள்'' என்றார்.

''மாப்பிள்ளை என்ன செய்கிறார்!'' என்ற அடுத்த கேள்வியும் பிறந்தது.

''அவள் துர்ப்பாக்கியவதி; மாப்பிள்ளை விவாக தினத்தன்றே இறந்து விட்டார். அதை நினைத்தாலே மனசு பொறுக்க வில்லை' என்று சிவராமன் கண்ணீர் வடித்தார்.

''கவலைப்படாதீர்கள். அந்த மகள் இப்பொழுது எங்கே யிருக்கிறாள்! இங்குதானோ!''

''ஆமாம்.''

''அவளைக் கூப்பிடுங்கோ; நான் பார்க்க வேண்டும்'' என்றாள் மாப்பிள்ளையின் தாயார்.

உடனே சுசி 'சடக்'கென்று அங்கிருந்து எழுந்து சென்றாள். அழுது கொண்டிருந்த சிரோவுக்கு ஆறுதல் கூறி, அவளுடைய கண்களைத் துடைத்து விட்டுக் கீழே அழைத்து வந்தாள். மாப்பிள்ளையின் தாயார் அவளை அருகில் அழைத்து உட்கார வைத்துக் கொண்டாள்.

''மறுபடியும் மணந்து கொள்ள உனக்குப் பிரியம் உண்டாம்மா!'' என்று கேட்டாள் அவள். சிரோவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. சிவராமனும், அவர் மனைவியும் ஆச்சரியத்தினால் கண்களை அகல விரித்தனர். சுசி, பேச்சின்

போக்கை உணர்ந்து கொண்டாள். தன் முயற்சி வீணாகவில்லை என்று களிப்புற்றாள்.

"என் வாழ்க்கையை மலரச் செய்ய, இனி யாரால் முடியும்!" என்று கேட்டாள் சிரோ.

"ஏன்! எங்களால் முடியும்—நீயே என் மகனை மணந்து கொள்—அவனும் என் சொல்லைத் தட்ட மாட்டான். என்ன பாஸ்கரன், உனக்குப் பிரியம்தானே!" என்றாள் அந்தப் புண்ணியவதி.

"ஆமாம் அம்மா; இந்த விவாகத்தில் எனக்குப் பூரண திருப்திதான்" என்றார் மாப்பிள்ளை.

சசி அங்கிருந்து உள்ளே ஓடினாள். குங்குமப் பெட்டியுடனும், பூவுடனும் வந்து சேர்ந்தாள். தன் சகோதரிக்கு அழகாகப் பொட்டிட்டு, பூச்சூட்டி, "அக்கா, இனி நீ விதவையல்ல—உன்னை வாழ்விக்க வந்த இவர்களை வணங்கு" என்று ஆனந்தம் பொங்கக் கூறினாள். அவ்வாறே வந்தவர்களை நமஸ்கரித்தாள் சிரோ. எதிர்பாராத இந்த முடிவைக் கண்ட சிவராமனும் அவர் மனைவியும் வாய் திறவாமல் நின்று கொண்டிருந்தனர்.

"சரி, விவாகம் அடுத்த மாதம் பத்தாம் தேதி வைத்துக் கொள்வோம். கல்கத்தாவிலேயே நடத்துவோம். செலவெல்லாம் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்பே நீங்கள் எல்லோரும் வந்து சேர்ந்து விடுங்கள்" என்று கூறினார் சிரோவின் மாமனார்.

வந்த விருந்தினர் மூன்று நாட்கள் அங்கேயே தங்கியிருந்து, பிறகு கல்கத்தா சென்றனர். சிவராமனின் வீட்டில் இப்பொழுதே கல்யாணம் நடப்பது போன்றிருந்தது. சசி வெற்றியடைந்து விட்டாள், தன் முயற்சியில். சசிக்கு வரும் அதிர்ஷ்டத்தை நாம் அபகரித்து விட்டோமே என்று வருத்தப்பட்டாள் சிரோ. அதை அறிந்த சசி, "என் விவாகத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே யில்லை அக்கா" என்று அவளுக்குச் சமாதானம் கூறினாள்.

அன்று கல்கத்தாவுக்கு இரவு வண்டியில் புறப்பட ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. மாலை ஆறு மணி இருக்கும்.

"சார், தந்தி"—சிவராமன் பதற்றத்துடன் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

"நீங்கள் புறப்பட வேண்டாம்; கடிதமும் எழுதி யிருக்கிறேன்."

சிவராமன் வாய் திறவாமல் போய் ஊஞ்சலில் உட்கார்ந்தார். சசி வாங்கி அதைப் படித்துப் பார்த்தாள். துக்கம் நெஞ்சை அடைத்தது. "என்ன காரணமோ தெரிய வில்லை; புறப்பட வேண்டாம் என்று எழுதியிருக்கிறது" என்று கண்ணீர் விட்டுக் கொண்டே சொன்னாள். சிரோவுக்குப் பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாகத் திரைப் படம்போல் காட்சி யளித்தன. தனக்குக் கல்யாணமே கிடையாது போலும் என்று முடிவு செய்து கொண்டாள். அதற்கு மறுநாள் மாப்பிள்ளை பாஸ்கரனே கடிதம் எழுதி யிருந்தார்.

"அன்பு மிக்க மாமா,

அனேக நமஸ்காரம். எதிர்பாராத விதமாய் விவாகத்தை ஒத்திப் போட வேண்டியதாகி விட்டது. வருத்தப்பட வேண்டாம். கடற்படையில் விசேஷப் பயிற்சி பெறுவதற்காக இன்று இங்கிலாந்துக்குப் புறப்பட வேண்டும் என்று திடீரென்று எனக்கு உத்தரவு அனுப்பினார்கள். அதை மறுக்க முடியாததால் கல்யாணத்தைத் தள்ளி வைக்கும்படி ஏற்பட்டு விட்டது. சிரோ என்னுடையவள்தான். நீங்கள் சந்தேகமோ, பயமோ கொள்ள வேண்டாம். இன்னும் மூன்று மாதங்களில் திரும்பி வந்து விடுவேன். வந்தவுடன் முதல் காரியம் சிரோ-பாஸ்கரன் திருமணம். இனி சசிலாவுக்கு வரன் தேடுவது என் பொறுப்பு.

பாஸ்கரன்."

இக் கடிதம் எல்லோருக்கும் ஆறுதல் அளித்தது. கடிதத்தின் கடைசி வரியைச் சசி நூறு முறை படித்து விட்டாள். பாஸ்கரனின் சிறந்த மனப்பண்பை நினைந்து, நினைந்து உள்ளம் மகிழ்ந்தாள். தன் சகோதரிக்கு ஏற்ற கணவன். அவர் சீக்கிரத்திலேயே பயிற்சியை முடித்துக்கொண்டு வந்து சேரவேண்டும் என்று தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தாள்.

மூன்று மாதங்கள் கழிந்தன. பாஸ்கரனும் பயிற்சி முடிந்து திரும்பி வந்து விட்டான். இச் செய்தியைப் பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டனர், சிவராமன் குடும்பத்தினர். அவர்கள் எதிர் பார்த்தவாறு இரண்டே நாட்களில் பாஸ்கரனிடமிருந்து கடிதமும் வந்து விட்டது. அப்பொழுது சிவராமன் வீட்டில் இல்லை. கடிதத்தை முதலில் படித்த சிரோ, "சசி, நாம் இருவருமே அதிர்ஷ்டசாலிகள்தான். இதோ பார், உன் அத்திம்பேர் எழுதியிருப்பதை! இந்தப் போட்டோவில் இருப்பவர்தான் உனக்கு வரப்போகும் கணவர்!" என்று சொல்லிக் கொண்டே கடிதத்தையும், அதில் இருந்த ஓர் போட்டோவையும் அவளிடம் எடுத்துக் கொடுத்தாள்.

"அன்பார்ந்த மாமாவுக்கு,

பாஸ்கரனின் அனேக நமஸ்காரம். பயிற்சி முடிந்து நேற்றுதான் வந்து சேர்ந்தேன். வரும் வெள்ளிக்கிழமையே நல்ல நாளாய் இருப்பதால் அன்றே கல்யாணத்தை வைத்திருக்கிறோம். ஆகையால் எல்லோரும் உடனே புறப்பட்டு வரவும்.

நிற்க, இத்துடன் நான் அனுப்பியிருக்கும் போட்டோவில் இருப்பவர் எனது நண்பர் ரகுநாத். அவரும் என்னுடன் பயிற்சி பெற்றுத் திரும்பிய என்னைப் போன்ற ஓர் கடற்படை அதிகாரியே. அவருக்கும் இன்னும் மணமாக வில்லை. நம் சசியைப் பற்றி அவரிடம் சொன்னேன். கல்யாணத்துக்கு அவர் சம்மதித்து விட்டார். தான் பெண் பார்க்க வேண்டிய அவசியம்கூட இல்லை என்று கூறிவிட்டார். என் மீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கை! ஆனால் சசியின் சம்மதம் தெரிய வேண்டுமாதலால் இத்துடன் அவருடைய போட்டோவையும் அனுப்பி யிருக்கிறேன். சம்மதத்தை உடனே தந்தி மூலம் தெரிவித்து விட்டால், சிரோவின் மண நாளன்றே சசியின் மணத்தையும் முடித்து விடலாம்.

பாஸ்கரன்."

கடிதத்தை ஒரேமுறை படித்த சசி, போட்டோவைப் பன்முறை பார்த்துக் கொண்டாள். வெளியிலிருந்து வந்த சிவராமன் இந்த நற்செய்தியைக் கேள்விப்பட்டவுடன், உடனே மறுபடியும் வெளியே சென்று, சம்மதத்தைத் தந்தி மூலம் தெரிவித்து விட்டார்.


இம்முறை தடங்க லொன்றுமில்லாமல், கல்கத்தாவில் சிரோ-பாஸ்கரன், சசி-ரகு விவாகங்கள் சிறப்பாக நடந்தன.

"உன் தியாகத்துக்கும், அன்புக்கும் குணத்துக்கும் ஏற்ற பரிசு உனக்குக் கிடைத்து விட்டது, சசி" என்று தன்னைத் தன் கணவனுடன் வணங்கிய சசியிடம் கூறினாள் பாஸ்கரனின் தாய். இதன் பொருள் சசிக்குத் தெரியாதா என்ன!

டயர் ஸர்வீஸ்


செப்பனிட்டு

புதுப்பிக்கிறோம்



இதனுல்

- சிலவு குறைவு
- பாதுகாப்பு
- நீடித்த உழைப்பு



இதற்கு
உத்தரவாதம்
அளிப்பவை :

**முழு வட்ட
மோல்டுகளால்
தயாரிப்பு ;
டி. வி. எஸ்.
அனுபவ சாதனம்.**

TVS2·50TH

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
புதுக்கோட்டை

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

சக்கரவர்த்தித்

24. சீதையின் தீர்மானம்

அந்தப் புரத்தில் நடந்த விஷயங்கள் இன்னும் நகரத்து ஜனங்களுக்குச் சரியாகத் தெரியாது. ராமனோ வனம் செல்லுவதில் தன் முழுமனதையும் செலுத்தி அதற்கு வேண்டியதை யெல்லாம் மிக துரிதமாகக் கவனித்து வந்தான்.

எல்லாக் காரியங்களும் முடித்துவிட்டு கௌசல்யா தேவியிடம் மங்கள ஆசீர்வாதம் பெறப் போனான்.

"நீ போய் விட்ட பிறகு நான் இந்த அயோத்தியையில் எப்படி யிருக்க முடியும்? உன்னுடன் நானும் வனம் போவதே நலம்" என்று கௌசல்யை திரும்பச் சொன்னாள்.

வேண்டா மென்று ராமன் அவளுக்குக் காரணங்களையும் தருமத்தையும் எடுத்துக் காட்டினான். அரசனாகிய புருஷனை விட்டு விட்டு மகனோடு காடு செல்வது தகாது. மூப்படைந்த புருஷனுக்குச் சிசுருஷை செய்துகொண்டு சுகமோ கஷ்டமோ சமாளித்துக் கொண்டு அயோத்தியையில் இருப்பதுதான் கடமை என்று ராமன் அவளுக்கே தெரிந்த விஷயமானாலும் துக்கத்தால் குழப்ப மடைந்திருந்த அவளுக்கு எடுத்துச் சொன்னான். தாயுள்ளத்தில் கிளம்பிய புகையை அகற்றி விட்டு, ராமன் சொல்லுவதே சரி என்று ஒப்புக்கொண்டாள்.

மகனை சுவஸ்தி மந்திரங்கள் சொல்லி ஆசீர்வதித்து, "தகப்பன் ஆணையைச் செய்து முடித்து விட்டு வெற்றியுடன் திரும்பி வருவாயாக!" என்றாள்.

"பதினான்கு வருஷங்களையும் சுலபமாகக் கழித்து விட்டு வந்து விடுகிறேன்" என்று ராமனும் சிரித்துக் கொண்டு சொல்லி அவளைத் தேற்றினான்.

தாயின் மங்கள ஆசிகளைப் பெற்ற சக்கரவர்த்தித் திருமகனுடைய முகத்தில் தேஜஸ் முன்னைவிட அதிகமாகப் பிரகாசித்தது என்கிறார் முனிவர். கடமையைக் கருதி ஒரு பெரிய தியாகம் செய்யச் சங்கற்பம் செய்பவர்களுடைய முகத்தைப் பார்க்கும்போதுதான் முனிவருடைய சொற்களின் பொருள் விளங்கும்.

அரசன் அழைத்து வரச் சொன்னான் என்று சுமந்திரனோடு சென்றானல்லவா ராமன்? தேரும் குடையும் சாமரங்களும் பரிவாரமுமாக எப்போது திரும்பி வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் சீதை. தந்தையின் வாக்கை நிறைவேற்று வதற்காக வனத்துக்குப் போகிறேன் என்று தன் காதலிக்கு எவ்வாறு சொல்லிச் சமாளிப்பது என்கிற ஏக்கத்தோடே சென்றான் ராமன். தேரும் சாமரங்களுமின்றி ராமன் தனியாகத் திரும்பிவந்ததைப் பார்த்தாள். முகத்தில் ஏக்கத்தையும் கண்டாள் சீதை.

'ஏன் என் நாதர் ஏதோ மனத்தில் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்? எது எப்படியாயினும் நம்மிருவருக்கும் உள்ள அன்பு ஒன்று போதாதா?' என்று எண்ணி, "என்ன விஷயம், ஒருமாதிரி இருக்கிறீர்களே?" என்று கேட்டாள்.

வெகு சுருக்கமாகவே ராமன் நடந்த விஷயத்தைச் சொன்னான். சொல்லி விட்டு, "வைதேஹி, நீ என்னை விட்டுப் பிரிந்து இவ்விடம் தனியாக இருப்பதில் உனக்கு ஏற்படக்கூடிய துக்கம் எனக்குத் தெரியும். ஆயினும் தருமத்தை நீ நன்றாக அறிவாய். ஜனகனுடைய மகளுக்கு நான் சொல்ல வேண்டியதொன்று மில்லை. மகாராஜாவிடமும் தாய்மார்கள் மூவரிடமும் ஜாக்கிரதையாக நடந்து கொள். மற்ற அந்தப்புரப் பெண்களைக் காட்டிலும் அதிகமாக நீ எதையும் எதிர்பார்க்க வேண்டாம். அரசனாகிய பரதனிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். உன்னிடம் அவனுக்குள்ள பிரியம் குறையாம லிருக்கும்படி நடந்து கொள்ள வேண்டும். வைதேஹி! என் மேல் நீ வைத்திருக்கும் அன்பு கொஞ்சமும் குறையாமல் பார்த்துக் கொள்வாயல்லவா? நான் வனத்தில் பதினான்கு வருஷம் கழித்துத் திரும்பி வருவேன். அதுவரையில் பூஜையும் விரதங்களும் சரியாகக் காத்து வர வேண்டும். கௌசல்யாதேவி மிகவும் துக்கப் படுவாள். அவளைக் கவலையோடு பார்த்து வர வேண்

ராஜாஜி

திருமகள்

டும். பரதனும் சத்ருக்னனும் எனக்கு மிகப் பிரியமானவர்கள். அவர்களைச் சகோதரர்கள் போல் கருதி வருவாய். அரசகுல சுபாவங்களை மனத்தில் வைத்து நடந்து கொள். என்னை அதிகமாகப் புகழ்ந்து பேசாதே. நான் இன்றே வனம் போகவேண்டும். மனத்தை நிலையில் வைத்துக் கொண்டிருப்பாயாக" என்றான் ராமன்.

இந்தப் பேச்சைக் கேட்ட சீதைக்குப் பெருங்கோபம் வந்துவிட்டது. அன்பெல்லாம் கோப உருவமாக வெளிப்பட்டது.

"நன்றாகப் பேசினீர்! தரும மெல்லாம் அறிந்த ராஜகுமாரரே! எனக்குச் சிரிப்பு வருகிறது. புருஷன் வேறு மனைவி வேறு என்பதை இன்று தான் உம்முடைய பேச்சில் அறிந்தேன். ராமன் வனம் போக வேண்டியதானால் அந்த ஆணையானது சீதைக்கும்தான். வனத்தில் செல்லும்போது நான் முன்னால் சென்று காட்டுப் பாதையிலுள்ள முள்ளையும் புல்லையும் மிதித்து உமக்கு மெதுவாக்கிக் கொண்டு செல்வேன். பிடிவாதம் செய்கிறேன் என்று கோபம் கொள்ள வேண்டாம். என்னுடைய தாயும் தந்தையும் தருமத்தைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். நீர் இன்று எனக்குச் சொன்னது நான் இதற்கு முன் கேட்டதற்கெல்லாம் முற்றிலும் விரோதமாக இருக்கிறது. நீர் செல்லும் இடம் நானும் கூடச் செல்ல வேண்டும் என்பதே நான் கற்ற ஒழுக்கம். இன்றே நீர் வனம் போக வேண்டியதானால் உம்முடன் நானும் இன்றே போவேன். இதைப் பற்றி அதிகம் பேசவேண்டிய அவசியமில்லை. வனம் சென்றால் நான் கஷ்டப் படுவேன், துக்கப் படுவேன் என்றெல்லாம் எண்ண வேண்டாம். வனவாசத்தை மிகவும் சந்தோஷமாகவே அனுபவிப்பேன். உம்முடன் இருந்தால் வனவாசம் என்பது எனக்கு ஒரு விளையாட்டாகத்தான் இருக்கும். இங்கே என்னைத் தனியாக விட்டுப் போகாதீர். நீர் வனம் சென்றால் இங்கே எனக்கு என்ன வேலை? வனத்தில் என்னால் உமக்கு ஒரு தொந்தரவும் ஏற்படாது. காயும் கிழங்கும் சாப்பிட்டுக் கொண்டு நிச்சயமாக உமக்கு முன்னால் நான் நடந்து செல்வேன். உம்முடன் சென்று மலையும் ஆறும் பார்த்து மகிழ வேண்டுமென்பது என் ஆசை. பறவைகளும் புஷ்பங்களும் நிறைந்த வனத்தில் உம்முடன் நானும் இருந்து சந்தோஷமாக ஆறுகளில் குளித்தும் நித்திய கருமங்களைச் செய்தும் சுகமாகக் காலம் கழிப்பேன். உம்முடனில்லாமல் சுவர்க்கமும் எனக்கு வேண்டாம். என்னைத் தனியாக விட்டுப் போனால் என் மரணம் நிச்சயம். நான் உம்மிடம் யாசிக்கிறேன். என்னை அழைத்துப் போக வேண்டும். என்மேல் இரக்கம் கொள்வீர். என்னை நிர்க்கதியாக்க வேண்டாம்" என்றாள் சீதை. கோபமாக ஆரம்பித்தவள் மிகவும் கெஞ்சிக் கேட்டு முடித்தாள்.

ராமன் காட்டில் ஏற்படும் பயம், கஷ்டம் எல்லாவற்றையும் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி, "நீ காட்டுக்கு என்னுடன் போவது தகாது" என்றான்.

சீதையின் கண்களில் நீர் பெருகிற்று. "புலி, சிம்மம், கரடி, பாம்பு இவையெல்லாம் உம்மைக் கண்டால் தூர விலகிச் செல்லும். நீர் சொல்லும் வெய்யில், மழை, காற்று, பசி, முள் அனைத்தும் நான் சந்தோஷமாகப் பொறுத்துக் கொள்வேன். எனக்கு வனவாசத்தைப் பற்றிக் கொஞ்சமும் பயமில்லை. நீர் என்னை இங்கே விட்டுவிட்டுப் போனீரானால் என் உயிர் என்னை விட்டு நீங்கும், நிச்சயம்" என்று சந்தேகத்துக்கும் மறு பேச்சுக்கும் இடமின்றிச் சொல்லி விட்டாள்.

சீதை அத்தோடு விடவில்லை. "நான் மிதிலையி லிருந்த காலத்தில் பிராமணர்களும் ஜோதிஷர்களும் இவளுக்கு வனவாசப் பிராப்தி என்று என்னைக் குறித்து என் தாயிடம் சொல்லி யிருக்கிறார்கள். நான் தனியாக வனவாசம் செய்ய முடியுமா? உம்முடன் சேர்ந்து வனவாசம் செய்துவிட்டு எப்படியும் நடக்க வேண்டிய அந்த நிகழ்ச்சியைச் சுகமாக முடித்து விடுவதற்கு இதுவே சமயம். வனவாசம் மிகக் கஷ்டம் என்பதெல்லாம் யாருக்கு? இந்திரியங்களை வசப்படுத்தாம லிருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்குத்தான். நீராவது நானாவது அவ்விதம் கஷ்டப்பட மாட்டோம். என்னைத் தடுக்காதீர்" என்றாள்.

25. மரவுரி தரித்தார்கள்!

ராமனுடன் சீதையும் வனம் போவது என்று நிச்சயமாகி விட்டது. ஏழை அந்தணர்களை அழைத்துச் சகல பொருள்களையும் தானம் கொடுத்து விட்டு வனவாசத்திற்குச் சீதை ஆயத்தமாகி விட்டாள்.

லக்ஷ்மணனும் அண்ணனுக்குச் சகாயமாக வனம் போகத் தீர்மானித்து ராமனுடைய சம்மதமும் பெற்றான். மூவரும் தந்தை தசரதனிடம் விடை பெற்றுக் கொள்ளுவதற்காகச் சென்றார்கள்.

தெருக்களிலும் ராஜ வீதியின் இரு பக்கத்திலுமுள்ள மாளிகைகளின் உப்பரிகைகளிலும் சாளரங்களின் பின்னாலும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நின்று, ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் காலால் நடந்து போவதைக் கண்டார்கள்.

அடங்காத துக்கமும் வியப்பும் கோபமும் அடைந்து "இப்படியும் ஒரு அரசன் உண்டா? இத்தகைய ராஜகுமாரனை எவனாவது வனத்துக்கு அனுப்பி விடுவானா? ஐயோ பாவம்! காலால் தெருவில் நடந்து போகிறாளே, சீதை! வனத்தில் வெய்யிலும் மழையும் இவள் தாங்குவாளா? இது என்ன விபரீதம்! சரி, இந்த நகரத்தை விட்டு நாம் அனைவரும் ராஜகுமாரர்கள் செல்லும் வனத்துக்குப் போக வேண்டியதுதான். வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு நாமும் வனம் செல்வோம். ராமன் இருக்கும் வனமே நமக்கு அயோத்தியை; இந்த நகரம் பாம்புகள் புகும் புற்றும் எலிகள் தோண்டிய வளைகளுமாக வீடுகளெல்லாம் பாழாகப் போக வேண்டியதுதான். கைகேயி இங்கே அரசு புரியட்டும். நாம் போகும் வனத்திலிருக்கும் காட்டு மிருகங்களும் பிணம் தின்னும் பறவைகளும் அந்த இடத்தை விட்டு விட்டு அயோத்திக்கு வந்து விடும். இதுவே காடாகும், அது நகரமாகும்."

இவ்வாறெல்லாம் மக்கள் பேசிய பேச்சு ராமன் காதில் விழுந்தாலும் அதை அவன் கவனிக்காமல் சென்றான்.

அரசனுடைய மாளிகையின் வாயிலண்டை துக்கம் நிறைந்த முகத்தோடு மூலையில் உட்கார்ந்திருந்த சுமந்திரனைப் பார்த்து ராமன், இனிய குரலில் "மூவரும் அரசனைக் காண வந்திருக்கிறோம். தெரியப்படுத்தி உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டு வரவேண்டும்" என்று சொன்னான். சுமந்திரனும் அவ்வாறே சொல்லுவதற்குச் சென்றான்.

ராகுவால் பீடிக்கப்பட்ட சூரியனைப் போல், சாம்பல் நிறைந்த அடுப்புபோல், நீர் வற்றிய தடாகத்தைப்போல் காட்சி தந்தான் சக்கரவர்த்தி.

சுமந்திரன் கைகூப்பி, துக்கத்தால் பேச்சு தடுமாறிச் சொன்னான்:

"அந்தப்புர வாயிலில் ராஜகுமாரன் நிற்கிறான். பிராமணர்களுக்குத் தன் பொருள்களைக் கொடுத்துவிட்டு, — மங்களம் ஆகுக, — எல்லாரிடமும் சொல்லி விடை பெற்றுக் கொண்டு தண்டகாரணியம் போவதற்கு முன் தங்களைக் காண விரும்புகிறான்" என்றான். மன்னன் அழைத்து வரச் சொன்னான்.

* * *

ராமன் வந்து கொஞ்சம் தூரத்திலே நின்று அஞ்சலி செய்தான். ராமனைக் கண்டதும் படுத்திருந்த அரசன் குதித்தெழுந்து மகனைக் கட்டியணைத்துக் கொள்ளச் சென்றான். கைகளை விரித்துக் கொண்டு தாவிப் போனவன் ராமனையடைவதற்கு முன்னே மூர்ச்சை அடைந்து தரையில் விழுந்தான்.

ராமனும் லக்ஷ்மணனும் கீழே விழுந்த மன்னனைத் தூக்கிப் படுக்கையில் உட்கார வைத்துத் தடவிக் கொடுத்தார்கள். பிறகு ராமன், "பெருமானே! விடை பெற்றுக் கொண்டு போக வந்திருக்கிறோம். என்னுடன் லக்ஷ்மணனும் வைதேஹியும் வனத்துக்கு வருகிறார்கள். எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவர்கள் என் கூடப் போக வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். எங்களுக்கு அனுமதி கொடுத்து, ஆசீர்வதித்து அனுப்புவீராக" என்றான்.

அப்போது தசரதன், "கைகேயிக்கு நான் கொடுத்த வரத்தால் நான் கட்டுப்பட்டேன். நீ கட்டுப்படவில்லை. நீ என்னை மதிக்காமல் உன் பலத்தால் அயோத்தியைப் பற்றிக் கொண்டு அரசனாக இருக்கலாமே!" என்றான்.

முன்னால் மனத்தில் மட்டும் இருந்த கருத்தை இப்போது அரசன் வியக்தமாகச் சொன்னான்.


"தாங்கள் இன்னும் ஆயிர வருடங்கள் ஆண்டு வரவேண்டிய இந்த ராஜ்யத்துக்கு நான் ஆசைப்படவில்லை. நான் பதினான்கு வருஷம் அரண்ய வாசம் செய்து விட்டுத் திரும்பிவந்து உம்முடைய பாதங்களைத் தொட்டு வணங்குவேன்" என்றான் சக்கரவர்த்தித் திருமகன். அரசனுடைய ஆசை இல்லை என்று தீர்ந்தது.

"குலத்தின் புகழைப் பெருக்குவாய், மகனே! போய்த் திரும்பி வா. மங்களமாகுக. பயம் என்பது உன் வழியை

விட்டு விலகி நிற்கக் கடவது. தருமத்தினின்று பிறழாத உத்தமனே! திடசங்கற்பம் கொண்ட வீரனே! யாரும் உன் எண்ணத்தை மாற்ற முடியாது. ஆனால் இன்றேபோக வேண்டாம். ஒரு ராத்திரி இருந்து விட்டுப்போகலாம். உன்னை நான் மனதாரப் பார்த்துத் திருப்தி அடைய விரும்புகிறேன். நாளை விடிந்ததும் நீ போகலாம். ராமா! நான் கைகேயியால் வஞ்சிக்கப்பட்டேன். அவளுக்கு நான் தந்த வரத்தால் கட்டுப்பட்டு இந்தப் பாப காரியத்தைச் செய்ய வேண்டியதாயிற்று. அவள் என்னை மோசம் செய்து விட்டாள். சாம்பல் பூத்து மூடிய நெருப்பைப் போல் மறைந்திருந்த அவளுடைய எண்ணத்தை நான் அறியாமல் ஏமாந்து போனேன். அவள் வலையில் சிக்கி விட்டேன். நீயோ தந்தையின் சொல்லைச் சத்தியமாக்கியே தீருவேன், தந்தையைப் பொய்யனாக்கி விடமாட்டேன் என்று ராஜ்யத்தையும் நாட்டையும் விட்டு வனம் போகத் தீர்மானித்து விட்டாய். உலகத்தில் உன்னைப்போல் ஜேஷ்ட குமாரன் வேறு யார் இருக்கிறான்? இந்த அனர்த்தம் என் சம்மதம் பெற்றதல்ல என்று சத்தியமாகச் சொல்லுகிறேன்'' என்று பரிதாபமாக அரசன் கூறினான்.

அந்திகாலத்தில் ராமனுடைய அன்பை இழக்காமல் உயிர் நீக்க வேண்டும் என்பது தசரதனுடைய ஆசை.

''தந்தையே! பரதனுக்குச் சொல்லியனுப்பி நீர் என் தாய்க்குத் தந்த வரத்தைப் பூர்த்தி செய்யவும். ராஜ்யத்தை நான் மனத்தால் துறந்து விட்டாயிற்று. என் உள்ளம் இப்போது வனத்தைப் பற்றி நிற்கிறது. உம்முடைய மனத்தில் ஒரு குறையும் வருத்தமும் இல்லாமல் நீர் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, ஆசீர்வதித்து முடிக்க வேண்டும். நான் இப்போது இந்த ராஜ்யத்திலாவது வேறு சம்பத்திலாவது ஒரு சிறிதும் மனத்தை வைக்கவில்லை. தந்தையே, துக்கத்தை முற்றிலும் அகற்றிக் கொள்வீராக கண்ணீர் விடாதீர். சமுத்திரம் உலர்ந்து போகுமா? அதைப்போன்ற தீரராகிய நீர் நிலையை இழக்காதீர். உம்மைச் சத்தியவாதியாக்குவதே என் ஆசை. உம்மைப் பொய்யனாக்கி விட்டு நான் மற்றப் பொருள்களை வைத்துக் கொண்டு என்ன சுகம் சம்பாதிப்பேன்? நீர் மனத்தை முற்றிலும் சாந்தப்படுத்திக் கொண்டு துக்கத்தை விலக்கி விட வேண்டும். நான் வனத்தில் ஆனந்தமாகக் காலம்



கழிப்பேன். வனத்தில் உள்ள அழகும் சுகமும் வேறு எங்கே கிடைக்கும்? தகப்பனாராகிய நீரே எனக்குத் தெய்வம். ஆனபடியால் நான் வனம் போவது தெய்வ வாக்கின்படி யாகும். பதினான்கு வருஷங்கள் தீர்ந்த பின், என்னை மறுபடி பார்ப்பீர். விசனப்படாதீர். இந்த ராத்திரி இருந்து நாளை போகச் சொல்லுகிறீர். அதில் என்ன பயன்? இன்று போலவே நாளையும்; நாளைப் போலவே மறு நாளும். ஆனபடியால் இன்றே போக அனுமதி தருவீராக'' என்றான்.

அதன் பிறகு தசரதன் சுமந்திரனுக்குச் சொன்னான்: ''சரி, அப்படியானால் நம்முடைய சேனைத் தலைவர்களுக்குச் சொல்லி நல்ல சதுரங்க சேனை ஒன்றைத் தயார் செய்து ராமனுடன் வனம் போக உடனே உத்தரவிடுவாய். ராமன் காட்டில் சுகமாக ரிஷிகளுடன் காலம் கழிப்பதற்கு வேண்டிய சகல பொருள்களும் திரட்டி அமைத்துச் சேனையுடன் அனுப்பிவிட வேண்டியது. தனம், தானியம், ஆட்கள், எல்லாம் ஒரு குறையுமின்றித் திரட்டி அனுப்பவேண்டியது.''

பாவம், தசரதன் வனவாசம் என்றால் அரசர்கள் செய்யும் சுற்றுப் பிரயாணம் போல் செய்து விடலாம் என்று பார்த்தான்.

கைகேயி, பக்கத்திலிருந்தவள், சிரித்தாள். ''அப்படியா? வரத்தை மிக அழகாகப் பூர்த்தி செய்கிறீர்கள்! 'பரதனுக்கு ராஜ்யம் கொடுத்தேன்' என்று சொல்லி ராஜ்யத்திலுள்ள செல்வத்தையெல்லாம் வாரி எடுத்து ராமனுக்குக் கொடுத்து விட்டு ராஜ்யத்தைப் பாழாகச் செய்து அதைப் பரதனுக்குத் தருகிறீரா?'' என்றாள் கைகேயி.

தசரதன் கோபாவேசமாகப் பேசப் போனான். ராமன் அமாத்தியர்களைப் பார்த்துச் சொன்னான்:

''வணக்கத்துடன் நான் கேட்டுக் கொள்கிறேன். நான் வனம் போக நிச்சயித்தது இந்த வகையில் அல்ல. ராஜ்ய போகங்கள் அனைத்தையும் விட்டு விட்டு, தவசிகள் வாழ்க்கை வாழ நான் வனம் செல்லுகிறேன். பரிவாரமும் பொருள்களும் எனக்கு எவ்விதத்தில் உதவும்? யானையைத் தானம் செய்த பின் யானையைக் கட்டும் கயிற்றில் ஆசை வைப்பதா? தயவு செய்து மரவுரியைக் கொண்டு வரச் சொல்லுக! மண்வெட்டியும் கூடையும் கொண்டு வரச் சொல்லுக. அவை போதும்'' என்றான்.

கைகேயி ஓடிப்போய்த் தயாராக வைத்திருந்த மரவுரியைக் கொண்டு வந்து ராமனுக்குத் தானே வெட்கமில்லாமல் கொடுத்தாள். உடனே அவ்விடத்திலேயே ராமன் மரவுரியை உடுத்திக் கொண்டான். ரிஷியைப் போல் பொலிவடைந்தான். லக்ஷ்மணனும் தன் ஆடையை அவிழ்த்து மரவுரியைத் தரித்தான். தசரதன் இதையெல்லாம் செய்கையற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

பிறகு சீதைக்காகவும் மரவுரி கொண்டு வந்தாள் கைகேயி. அதை வாங்கிச் சீதை இன்னது செய்வது என்று தெரியாமல் ஒரு க்ஷணம் திகைத்து நின்றாள். அவள் அதற்கு முன் இத்தகைய ஆடையை உடுத்தினதில்லை யல்லவா!


பக்கத்தில் கந்தர்வ ராஜனைப் போல் அழகு வீசிக்கொண்டு நின்ற ராமனைப் பார்த்துக் கொஞ்சம் கூச்சத்துடன், ''இதை எப்படிக் கட்டிக் கொள்வது, சொல்லுவீர்'' என்றாள்.

ராமன் அதை எடுத்துச் சீதை உடுத்தியிருந்த பட்டின் மேல் மரவுரியையும் உடுத்தித் தானே முடி போட்டான். அச்சமயம் பார்த்துக் கொண்டிருந்த அந்தப்புர ஸ்திரீகள் அனைவரும் 'கோ!' என்று அழுதார்கள். தசரதன் நினைவு இழந்து விட்டான்.

மூர்ச்சை தெளிந்த பிறகு, கைகேயியை அனைவருக்கு மெதிரில் தசரதன் மிகக் கடுமையாகத் திட்டினான். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. தவிர அவனால் இப்போது என்ன செய்ய முடியும்? சீதை வனம் போவது கைகேயிக்காக அல்ல. ராமனுடன் வனம் போவதிலேயே அவள் சுகம் கண்டாள். யார் சொல்லியும் அவள் நிற்க மாட்டாள். போகும்போது தரையைப் பார்த்த வண்ணம் அரசனை வணங்கி ராமன் சொன்னான்:

''தந்தையே! தாய் கௌசல்யா தேவியை இவ்விடம் விட்டு விட்டுப் போகிறேன். ஒப்பற்றவள். யார் பேரிலும் அவளுக்குக் கோபமில்லை. மகராஜனே! அவளைச் சரியாகப் பார்த்துக் கொள்ளவும். என்னை விட்டுப் பிரிந்து இதற்கு முன் அவள் பார்த்திராத துக்கத்தில் — பெருந் துயரக் கடலில் — அவள் மூழ்கினாளாயினும் உமக்காக உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாள். நான் வனத்திலிருந்து திரும்பி வரும் போது அவளை நான் இங்கேயே காண வேண்டும். யமாலயத்தில் தேடும்படி நேரிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று துக்கம் தாங்காமல் சொன்னான்.

ராமன் இப்படிச் சொல்லி விட்டு வெளியே செல்லும் காட்சியைப் பார்க்கக் கிழ அரசனால் சகிக்க முடியவில்லை. கண்களைக் கையால் மூடிக் கொண்டான்.


இந்த ரேமாண்ட்ஸ் ஜேகே சூட்டிங்ஸில்
உங்கள் உருவகித்துப் பாருங்கள்
கம்பளமோஸ்தர்களில் முதன்மையானவை ரேமாண்ட்ஸ் ஜேக்கே ஒர்ஸ்டட் சூட்டிங்ஸ். இறக்குமதி உடைகளுக்கு இணையானவை, உங்களுக்கும் உங்கள் உருவத்துக்கும் அதிக நம்பிக்கை அளிப்பவை.
எல்லாரகநெசவுகளிலும் கிடைக்கும்
ரேமாண்ட்ஸ் Jaykay
JK
கம்பள உடைகள்
சிறந்த உழைப்புக்காக உறுதியான நெசவு
தி ரேமாண்ட் உல்லன் மில்ஸ் லிட்., பம்பாய்

தந்தை உள்ளம்

வியார்ஜி

வைகறைப் போது. இருட்படலம் இன்னும் பூரணமாக விலகாமல் சண்டித்தனம் செய்து கொண்டிருந்த நேரம். வாசல் புறத்து வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்த நான் அப்பொழுத்தான் எழுந்து, படுக்கையில் உட்கார்ந்தபடியே மணிவாசகரின் பள்ளியெழுச்சிப் பாடல் ஒன்றை இசைக்கும், உரைக்கும் இடைப்பட்ட நிலையில் மனனம் செய்து கொண்டிருந்தேன். இரவெல்லாம் ஒரே புழுக்கம். இருந்தாலும் இந்த இளங் காலையில் மட்டும் எங்கிருந்தோ 'சில்' என்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. வேலைக்காரி சாணம் கலந்த நீரை வாயிலில் தெளித்துக் கொண்டிருந்தாள். கடைசியாக எஞ்சியிருந்த தண்ணீரை வீசிக் கொட்டிவிட்டு, அவள் வாளியை வாசல் படியில் 'கக்'கென்று வைத்துத் தென்னங் துடைப்பத்தினால் 'சர்சர்' என்று பெருக்கினாள்.

பிறகு "அம்மா பெருக்கி மூடிச்சுட்டேன். நீங்க வரலாம்" என்று சொல்லிக் கொண்டே வாளியையும், விளக்குமாற்றையும் எடுத்துக் கொண்டு உள்ளே போனாள் வேலைக்காரி.

'ஓகோ, இன்று வெள்ளிக் கிழமையோ' என்று எண்ணிக் கொண்டேன். வெள்ளிக் கிழமை மட்டும் லக்ஷ்மிக்குத் தன் கையால் வாசலில் கோலம் போட்டால்தான் திருப்தி. அப்படித் தான் அவள் அம்மாவுக்கும்.

கையில் கோலப்பொடி வைத்திருந்த கிண்ணத்தோடு வந்தாள் லக்ஷ்மி. அரைக் கண் மூடிய படியே பாட்டைச் சொல்லிக் கொண்டிருந்த நான் அதையும் நன்றாகத் திறந்து லக்ஷ்மி என்னைத் தாண்டி வாசலுக்குப் போவதைப் பார்த்தேன். அவள் என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் சென்றதும் தொடர்ந்து மல்லிகைப் பூவின் 'கம்' என்ற வாசனை வராந்தா முழுவதும் பரவியது. முதல் நாள் இரவு அவள் தலையில் வைத்துக் கொண்டிருந்த பூவின் மணம் போலும்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தான் போட்டுக் கொண்டிருந்த கோலத்தோடு ஒன்றி விட்டாள் லக்ஷ்மி. வரிசையாகப் புள்ளிகளை வைத்து அவைகளினூடே மின்னல் வேகத்தில் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகளை இழுத்துக் கலை சமைக்கும் அவளது மெல்லிய தளிர் விரல்களின் லாகவத்தை மனத்துக்குள் வியந்து கொண்டேன்.

என்ன இருந்தாலும் லக்ஷ்மி ரொம்பவும் சாமர்த்தியசாலிதான். படிப்பில் ஆகட்டும், இல்லை, பாட்டில்தான் ஆகட்டும் அவள் என்றுமே சோடை போனவள் அல்ல. வீணையை எடுத்து வைத்துக் கொண்டு அதற்கேற்ப இழையும் இனிமை நிறைந்த தன்னுடைய குரலில் திருத்தாண்டகப் பதிகத்தை அவள் சொல்லுவதை இன்று பூராவும் கேட்டுக் கொண்டிருக்கலாமே! இத்தனைக்கும் அவளுக்குத் துளி கர்வம் இருக்க வேண்டுமே. ஊஹூம்...கிடையவே கிடையாது! 'இண்டர்' பாஸ் செய்த பெண், இசைத் தட்டுகளில் குரலைப் பதிவு செய்யுமளவுக்கு இசைஞானமும் குரல் இனிமையும் உள்ளவள் லக்ஷ்மி என்று சொன்னால் கேட்பவர்கள் மூக்கின் மேல் விரலை வைப்பார்கள். அத்தனை பணிவு; அத்தனை அடக்கம். எல்லாம் அவள் அம்மாளை அப்படியே கொண்டிருக்கிறாள். உருவத் தோற்றத்திலும் அப்படித்தான். அதே எடுப்பான நாசி; சிரித்தால் குழிவிழும் அதே அழகிய கன்னங்கள்! லக்ஷ்மி அழகிதான். ஆனால் போதைதரும் கவர்ச்சி அவளுடைய அழகு அல்ல. அமைதியான, ஏதோ தெய்வீகம் கலந்த அழகு அவளுடையது. அப்படித்தான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

தோளிலே சரிந்து விழுந்து, சற்றைக் கொருதரம் இடர்ப்படுத்திக் கொண்டிருந்த தன்னுடைய கருநாகம் போன்ற நீண்ட பின்னலைச் சரி செய்து கொள்ளுவதற்காகத் தலையை அசைத்தாள் லக்ஷ்மி. நான் அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டாள் போலும்! "என்ன அப்பா!" என்று கேட்டு விட்டு இலேசாகச் சிரித்தாள். அவளுக்குப் பழைய நிதானம் போய் விட்டது. இயந்திரம் போல் மிகுதிக் கோலத்தையும் போட்டு விட்டு விரைந்து உள்ளே சென்று விட்டாள். இன்றைக்குத்தானே அவளைப் பார்க்க வருகிறார்கள்! ஆமாம். இப்பொழுதுதான் எனக்கு அது ஞாபகத்துக்கு வருகிறது. அதுதான் அவள் வெட்கத்தோடு சிரித்ததற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

* * *

கௌரி போய் இன்றைக்குப் பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. அப்பொழுது லக்ஷ்மிக்கு என்ன ஐந்து வயது இருக்குமா! ஆமாம்; அவ்வளவுதான் இருக்க வேண்டும். இந்த ஆடிக்குத்தானே அவளுக்குப் பத்தொன்பது நிறைகிறது! அப்பா, பதினைந்து வருஷங்கள்! எவ்வளவு விரைவில் சென்று விட்டன! காலம் அவளைக் கரைத்து விட்டது. ஆனால் என்னுள்ளிருந்து அவள் நினைவை என்றாவது அதனால் கரைக்க முடியுமா! எனக்கு அப்பொழுது முப்பது வயதுதான் ஆகியிருந்தது. மறு வருஷமே மீண்டும் விவாகம் செய்து கொள்ளும்படி என்னை எத்தனைபேர் வற்புறுத்தினார்கள், தெரியுமா! நான் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. எனக்காக இல்லாவிட்டாலும் லக்ஷ்மிக்காகவாவது நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். சொன்னார்கள்: நான் சிரித்தேன். "லக்ஷ்மியின் நன்மையை நீங்கள் விரும்பினால் இப்படிச் சொல்ல மாட்டீர்கள்" என்று கூறி அவர்களை வாயடக்கி விட்டேன். என்னுடைய ஒன்று விட்ட அத்தை ஒருத்தியைச் சிறிது காலம் துணைக்கு அழைத்துக் கொண்டேன். அவளும் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாள். என்னுடைய பிடிவாதத்தைக் கண்டு முடிவில் அவளும் பேசாமல் இருந்து விட்டாள். என்னுடைய நண்பர்கள் அடிக்கடி என்னிடம் சொல்வதுண்டு, "உங்களுடைய சாதனை சாமான்யமானதல்ல" என்று. பைத்தியக்காரர்கள்! கௌரி என்னை விட்டுச் சென்று விட்டதாக அவர்கள் நினைப்பு. லக்ஷ்மியின் ஒவ்வோர் அசைவிலும் நான் கௌரியையல்லவா கண்டேன்! அது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

நேற்றுத்தான் போல இருக்கிறது, பாவாடையும் சட்டையுமாக "அப்பா, அப்பா" என்று லக்ஷ்மி என்னைச் சுற்றி வந்ததெல்லாம். நான் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பும் போதெல்லாம் லக்ஷ்மி என்னுடைய வரவு நோக்கிக் காத்துக் கொண்டிருப்பாள். — கௌரியுடன் நான் புதுக் குடித்தனம் வைத்த சமயத்தில் அவளும் இப்படித்தான் என்னை எதிர்நோக்கி நின்றிருப்பாள். தெருத் திருப்பத்தில் என்னுடைய தலையைக்

கண்டதும் எப்படித்தான் குதித்துக் கும்மாளி கொட்டுவாள்! என்னுடைய ஒரு விரலைத் தன்னுடைய இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "அப்பா, இன்னிக்கு எனக்கு என்ன வாங்கிண்டு வந்திருக்கே!" என்று அவள் கேட்பது எனக்கு இன்னும் நன்றாக நினைவிலிருக்கிறது. என்றாவது ஒரு நாள் ஞாபக மறதியினாலோ, வேலைத் தொந்தரவினாலோ வெறுங் கையோடு நான் திரும்பினால் அந்தச் சின்னஞ் சிறு மலர் முகந்தான் எப்படி வாடி விடும்!

அவளை முதன் முதலில் பள்ளிக்கூடம் சேர்த்தது எனக்கு இன்றைக்கும் ஞாபகத்தில் இருக்கிறது. பள்ளிக்கூடம் விட்டதும் நாள் தோறும் பள்ளிக்கூடத்தில் நடந்ததையெல்லாம் என்னிடம் வந்து சொல்லா விட்டால் மண்டை வெடித்து விடும். அவர்களுடைய வகுப்பில் அவர்கள் 'டீச்சரு'க்கு அவளைத்தான் ரொம்பப் பிடிக்குமாம். அதில் அவளுக்குத் தாங்க முடியாத பெருமை. பள்ளிக்கூடத்தில் தான் வாங்கிய மார்க்கை அப்படியே அழிக்காமல் 'ஸிலேட்' பலகையோடு கொண்டு வந்து காட்டுவதில்தான் அவளுக்கு எவ்வளவு சந்தோஷம்!

பத்தாவது பாஸ் செய்யும்போது அவள் தன்னுடைய பள்ளியிலேயே முதலாவதாகத் தேறினாள். அப்பொழுது அவள் விவரம் தெரிந்த பெண்ணாகி விட்டாள். பழைய ஓட்டமும் துள்ளலும் நீங்கி, எங்கிருந்தோ புதியதொரு பயமும், அடக்கமும் அவளை வந்து சூழ்ந்து கொண்டன. பள்ளிக்கூடத்தில் தனக்குக் கிடைத்த பரிசுகளையெல்லாம் என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அவள் என்னை நமஸ்கரித்தபொழுது எனது கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது.

அந்த விடுமுறையின் போதுதான் அவள் முதன் முதலாகத் தனது குரலை வானொலியில் அரங்கேற்றினாள். அந்த முதல் ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்டு அவளுக்கு வந்து குவிந்த பாராட்டுக் கடிதங்கள் எல்லாம் என்னை அப்படியே சுவர்க்கத்துக்கே கொண்டு சென்று விட்டன. ஆண்டவன் அவளுக்கு நல்ல அழகை, இனிய குரலை எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண்மையின் மிக உயர்ந்த பண்புகளை நிரம்பக் கொடுத்திருந்தான். அவள் என்னுடைய ஒரே மகள்; எனது அன்புக்கதிர். என்னுடைய பல்வேறு செயல்களும்—நான் அறிந்தோ அறியாமலோ – அவளை மையமாகக் கொண்டே நிகழ்ந்தன போன்ற பிரமை. என்னோடு அவள் பத்தொன்பது முழு வருடங்கள் பழகி விட்டாள். எனது ஒவ்வொரு நிமிட வாழ்விலும் அவள் தன்னைப் பிரிக்க முடியாதபடி பிணைத்துக் கொண்டு தன்னுடைய முத்திரையை ஆழப் பதித்து விட்டாள். என்னில் ஒன்றிவிட்டு, இப்படி இணைபிரியாதவளாகிவிட்ட அவளை நான் பிரியும் காலம் வந்துவிட்டது. அவளைப் பிரிந்து தனியாக வாழ்வது என்பதை என்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லையே!

"என்ன அப்பா இன்னுமா நீங்கள் எழுந்திருக்கவில்லை? வெந்நீர் ஆறிப்போகிறதே" என்று குரல் வந்தது. நிமிர்ந்து பார்த்தேன். குளித்துவிட்டுப் புதுப் புடவை சலசலக்க வந்து நின்ற அவளைப் பார்த்த மாத்திரத்தில், கொல்லையிலே பூத்துக் குலுங்கி நிற்கும் பன்னீர் மரத்தின் நினைவும், பூஜை அறையில், தாமரையின்மீது நின்றபடி நகை புரியும் லக்ஷ்மி தேவியின் திருவுருவமும் ஒன்றாக நினைவு வந்தன. தலை உலருவதற்காகத் தலைமயிரைத் தாழ்வாக முடிபோட்டுக் கட்டியிருந்தாள். நெற்றியில் கீறல் போன்ற விபூதியும், மேலே பளிச்சென்ற குங்குமமும் துலங்கின.

"இதோ எழுந்து விட்டேன், அம்மா" என்று சொல்லிக் கொண்டே எழுந்திருந்தேன்.

* * *

"லக்ஷ்மி! உனக்கு என்ன படுகிறது! என்னிடம் நீ ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லலாம்" என்றேன் லக்ஷ்மியைப் பார்த்து.

"உங்களுக்குப் பிடித்திருந்தால் சரிதான் அப்பா" என்றாள் தலையைக் குனிந்தபடி, கால் கட்டை விரலால் நிலத்தைக் கீறிக் கொண்டே.

"அப்படி அல்ல அம்மா! இந்த விஷயத்தில் உன்னுடைய எண்ணத்தைத் தெளிவாகச் சொன்னால்தான் எனக்குத் திருப்தி. நீ படித்த பெண். உனக்கு இதெல்லாம் சொல்லித் தரணுமா, என்ன!" என்றேன்.

"எனக்குச் சம்மதந்தான், அப்பா!" அடுத்த விநாடி அவள் அங்கே இருக்கவில்லை. சிட்டாகப் பறந்து தன்னுடைய அறைக்குள் போய்விட்டாள்.

நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டேன். நேற்று லக்ஷ்மி நடந்துகொண்ட விதத்திலிருந்தே அவளுடைய மனநிலை எனக்குத் தெரிந்துதான் இருந்தது. இருந்தாலும் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ளவே கேட்டேன்; பிள்ளை வீட்டாருக்கும் அப்படித்தான். வீணையோடு அவர்கள் எதிரே லக்ஷ்மி அமர்ந்திருந்த அரைமணி நேரமும் அவர்கள் இந்த உலகத்தில் இருக்கவில்லை. போகும்பொழுதே அவர்கள் தங்களது சம்மதத்தைத் தெரிவித்து விட்டுத்தான் சென்றார்கள். பிள்ளை, லக்ஷ்மியுடைய பாட்டிலே அப்படியே மனத்தைப் பறி கொடுத்து விட்டான். போகட்டும், அந்த மட்டும் நல்ல ரசிகனாக வந்து வாய்த்தானே என்று சந்தோஷப் பட்டேன். இருந்தாலும், "குழந்தையிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டு எழுதுகிறேன்" என்றேன்.

"அதற்கென்ன பேஷாகச் செய்யுங்கள். இந்தச் சம்பந்தம் எங்களுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று மனத்தில் பட்டதை ஒளிக்காமல் சொன்னார், பிள்ளையின் மாமா என்று அறிமுகப்படுத்தப் பட்டவர்.

இப்போது லக்ஷ்மியின் சம்மதமும் கிடைத்து விட்டது. இன்றைக்கே எழுதிப் போட்டுவிட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டேன்.

அன்று மாலை ஸ்நேகிதிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பிய லக்ஷ்மி, நான் படுக்கையில் சாய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, "என்ன அப்பா உங்களுக்கு உடம்பு!" என்று கேட்டுக் கொண்டே விரைந்து அருகில் வந்தாள். அவள் குரலில் இருந்த பதட்டம் அவளது கவலையை நன்கு எடுத்துக் காட்டியது.

"ஒன்றுமில்லையம்மா. லேசாகக் கொஞ்சம் தலைவலி. அவ்வளவுதான் சுப்பராமய்யர் காப்பி போட்டுக் கொடுத்தார். இப்பொழுது சரியாகி விட்டது" என்றேன். சுப்பராமய்யர் என்பது எங்கள் வீட்டுச் சமையற்காரரின் பெயர். லக்ஷ்மி பிறப்பதற்கு முன்பிருந்தே எங்களுடன் இருக்கும் அவரை நாங்கள் வீட்டு மனிதருள் ஒருவராகவே கருதியதில் என்ன வியப்பு இருக்கிறது!

"நீங்கள் உடம்பை அலட்டிக் கொள்ளாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள், அப்பா, நான் வேண்டுமானால் டாக்டருக்கு 'டெலிபோன்' பண்ணி வரவழைக்கிறேன்."

"ஒன்றும் வேண்டாம். அம்மா! எனக்கு இப்பொழுது ஒன்றுமே யில்லை" என்று அவளை அனுப்புவது பெரும்பாடாகி விட்டது. அவள்

போய் விட்டான். நெஞ்சத் திரையில் பழைய நிகழ்ச்சி ஒன்று நிழல் விரித்தது.

அப்பொழுது லக்ஷ்மி 'இண்டர்' படித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் நான் காரியாலயத்திலிருந்து வரும்போதே ஏகப்பட்ட தலைபாரத்துடன் வீட்டுக்கு வந்தேன். அன்று இரவு அது பெரும் ஜுரமாக மாறி விட்டது. மறு நாளும் காய்ச்சல் விடவில்லை.

"எனக்கு இப்பொழுது தேவலை அம்மா. நீ காலேஜுக்குப் போய்விட்டு வா. சுப்பராம மாமா பார்த்துக் கொள்வார்" என்றேன்.

"நீங்கள் சும்மா இருங்கள், அப்பா. இரண்டு நாள் காலேஜ் பாடம் போனால் ஒன்றும் குடிமுழுகி போய்விடாது. உங்களுக்கு உடம்பு சொஸ்தமானால் போதும்." இந்தப் பதிலைக் கேட்டு எனது உள்ளமும் உடலும் குளிர்ந்து விட்டன. அப்பொழுதே எனக்குக் காய்ச்சல் விட்டிருக்க வேண்டும்! அன்று மாலை தன்னைப் பற்றி விசாரிக்க வந்த சிநேகிதிகளிடம் லக்ஷ்மி, "அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமல் இருக்கிறபோது நான் எப்படிக் காலேஜுக்கு வருவது! நீங்களே சொல்லுங்கள். அப்பா ஒரு குழந்தை மாதிரி. அவருக்கு நான் இருந்து எல்லாம் கவனித்தால்தான் உண்டு" என்று சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டபொழுது அவளைப் பற்றிய எனது அபிப்பிராயம் பன்மடங்கு உயர்ந்து விட்டது. முன்பு ஒருமுறை கௌரியும் — அப்பொழுது லக்ஷ்மி பிறந்திருக்கவில்லை — இதே வார்த்தைகளை நான் உடம்பு சரியில்லாமல் இருந்த பொழுது பக்கத்து வீட்டுப் பெண்டுகளிடம் சொன்னது எனது நினைவுக்கு வந்தது. தாய்க்கும் மகளுக்கும் என்ன ஒற்றுமை! கௌரிக்கும் அப்பொழுது நான் குழந்தையாகத்தான் பட்டேன். அந்தச் சம்பவம் நடந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் நான் குழந்தையாகத்தானிருக்கிறேன், லக்ஷ்மியின் பார்வையில்!

* * *

லக்ஷ்மியின் கல்யாணம் சம்பிரமமாக நடந்தேறி விட்டது. விசுவநாதன் சகல விதத்திலும் லக்ஷ்மிக்கு ஏற்ற கணவன்தான். ஊர்வலத்தின் போது ஏறு போல் மிடுக்காக அமர்ந்திருந்த விசுவநாதனையும், அருகில் மலர்ந்த முகத்துடன் அமைதியாக ஆனால் கம்பீரமாக உட்கார்ந்திருந்த லக்ஷ்மியையும் பார்த்தவர்களில், 'சரியான ஜோடிதான்' என்று வாய் விட்டுச் சொல்லாதவர்கள் இல்லை. மனம் நிறைந்த மகிழ்ச்சி லக்ஷ்மியின் முகத்தில் தாண்டவமாடியது.

"தாயில்லாப் பெண், பாவம். எப்படியோ வளர்த்து ஆளாக்கிக் கலியாணமும் செய்து கொடுத்து விட்டான். அப்பான்னா உசிரு அந்தப் பெண்ணுக்கு. இனிமே எப்படித்தான் புக்ககத்திலே அப்பாவைப்பிரிந்து இருக்கப்போகிறதோ!" என்று பெண்கள் பகுதியில் ஒரு மூதிய பெண்மணி பக்கத்திலிருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அது என்னுடைய செவிகளில் விழுந்த போது, என்னுடைய தொண்டையில் ஏதோ ஒன்று அடைத்துக் கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"தாயில்லாப் பெண், கவலை தெரியாமல் வளர்ந்து விட்டாள். இனி மேல் நீங்கள்தான் அவளுக்கு எல்லாம். ஏதோ முன்னே பின்னே நடந்து கொண்டாலும் நீங்கள்தான் அணைச்சு அழைத்துக் கொண்டு போகணும்" என்னுடைய பிரதிநிதியாகச் சம்பந்தியம்மாளிடம் என்னுடைய அத்தை சொல்லிக் கொண்டிருந்தாள்.



வாசலில் வண்டி வந்து நின்று விட்டது. ஆயிற்று. இன்னும் சில நிமிஷங்களில் லக்ஷ்மி என்னை விட்டுப் போய் விடுவாள்.

அவள் கணவன், மாமியார், இளைய நாத்தனார் இன்னும் மற்ற சம்பந்தி வீட்டுப் பரிவாரங்கள் யாவரும் என்னிடம் விடை பெற்றுக்கொள்ள நின்றிருந்தார்கள். அந்தச் சூழ்நிலையில் லக்ஷ்மி செய்த நமஸ்காரமும், அதைத் தொடர்ந்து விம்மலுக்கிடையில் "போய்விட்டு வருகிறேன், அப்பா" என்ற அவளுடைய சொற்களும் எல்லாம் சேர்ந்து என் இதயத்தை அப்படியே கசக்கிப் பிழிந்து விட்டன. லக்ஷ்மியைத் தூக்கி நிறுத்திய போது அவளுடைய பெரிய கரு விழிகள் இரண்டிலும் இரு பெரிய முத்துக்கள் மின்னின. "சந்தோஷமாய்ப் போய் விட்டு வா, அம்மா. போகிற இடத்தில் அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொண்டு நல்ல பெயர் எடுக்கணும். உனக்கு நான் ஒன்றும் சொல்லித் தர வேண்டாம்..." என் தொண்டை கம்மிக் கொண்டே வந்தது. லக்ஷ்மியின் எதிரில் எனது உணர்ச்சிகள் முழுவதையும் வெளியிட்டு, பிரிவின் துயரத்தை இன்னும் அதிகமாக அவள் உணரும்படி செய்ய நான் விரும்பவில்லை.

இருந்தும் லக்ஷ்மி வாய்விட்டுக் கதறி விட்டாள்.

* * *

"என்ன அப்பா, இன்றைக்குமா அவரிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை!" கடந்த மூன்று தினங்களாகத் தபால்காரர் வரும் நேரத்தில் தவறாமல் இந்தக் கேள்வியைக் கேட்பது லக்ஷ்மிக்கு வழக்கமாகி விட்டது.

கலியாணத்துக்குப் பிறகு இப்பொழுதுதான் முதன் முதலாகப் பிறந்தகத்துக்கு வந்திருக்கிறாள் லக்ஷ்மி. பிறந்தகத்து மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதற்குத்தான் அவளுக்கு யார் இருக்கிறார்கள்? போயும் போயும் நான் ஒருவன் தானே. எனக்கு உடல்நிலை சரியாக இல்லை என்பதைக் கேள்விப்பட்டுச் சிறிது காலம் உதவியாக இருக்கட்டும் என்று தான் மாப்பிள்ளை அவளை அனுப்பியிருந்தார். எனக்கு உடம்புக்கு

விசேஷமாக ஒன்றுமில்லை. பலஹீனம்தான். லக்ஷ்மி போனப்புறம் வாழ்க்கையில் எனக்கு இருந்த ஒரே ஆதாரமும் போய்விட்டது போல் உணர்ந்தேன். சுப்பராமய்யர் பொங்கிப் போடும் சோற்றைச் சாப்பிட்டு விட்டு, மனித யந்திரமாக நாட்களை ஓட்டி வந்தேன்.

லக்ஷ்மிதான் எப்படி மாறி விட்டாள்! நாள் தோறுமா கணவன் அவளுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்க முடியும்! மூன்று நாட்களுக்கு முன்புதானே அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதற்குள் மறுபடியும் எதிர்பார்த்தால்! என்னிடமிருந்த பழைய பிடிப்பு அவளுக்குப் போய் விட்டது. என் உடல் நிலையை அக்கறையுடன் கவனிக்கத்தான் செய்கிறாள். ஆனால் அதில் பழைய ஆழமோ, நெருக்கமோ இல்லை என்று தான் எனக்குப் படுகிறது.

எனக்கு இப்பொழுது நான்கு நாட்களாக உடம்பு சற்றுச் சுமாராகி விட்டது. லக்ஷ்மியும் ஊருக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது. நானும் அவள் வந்ததிலிருந்தே கவனித்துக் கொண்டுதான் வந்தேன். அவளுக்கு இங்கே நிலையே கொள்ளவில்லை. "நான் இல்லா விட்டால் அவருக்கு ஒன்றுமே ஓடாது. அப்பா. சின்னக் குழந்தை மாதிரி அவர். ஒவ்வொன்றையும் நான் இருந்து கவனித்தால்தான் உண்டு" என்று சொல்லி விட்டு லக்ஷ்மி ஊருக்குப் போய் விட்டாள்! என்ன பெண்கள் இவர்கள்! இவர்களுடைய தாய்மைப் பண்புதான் எத்தனை விசித்திரமான வடிவங்களில்–வேறுபட்ட சந்தர்ப்பங்களில்–விகசிக்கிறது.

அது சரி, லக்ஷ்மி எப்படி இப்படி ஒரேயடியாக மாறி விட்டாள்! முதன் முதலில் என்னைப் பிரிந்து புக்ககம் போன பொழுது அழுது அரற்றிய அதே லக்ஷ்மியா இவள்! நம்புவதற்குச் சற்று கடினமாகத்தான் இருக்கிறது. கலியாணம்தான் இந்தப் பெண்களை யெல்லாம் எப்படி மாற்றி விடுகிறது!

சே, என்ன பைத்தியக்காரத்தனம்! என்றைக்கும் அவளுடைய பணிவிடை எனக்குச் சாசுவதமா என்ன! உலக நியதிப்படி தன்னைக் கைப்பிடித்தவருக்கு அன்பு செலுத்துவதுதானே அவளுடைய கடமை! இனிமேல் அவளிடமிருந்து பழைய நெருக்கத்தையோ அதீதமான அன்பையோ எதிர்பார்க்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது!

"அண்ணாவுக்கு லக்ஷ்மியைப்பற்றியே எண்ணம். நானும் பார்த்துக் கொண்டுதான் வந்தேன். இந்த முறை வந்தப்போ குழந்தைக்கு இவ்விடத்துப் பிடிப்பு தளர்ந்துதான் போச்சு. லோகத்திலே இது சாதாரணம்தான். ஆனால் அண்ணாவுக்கு மனசு பஞ்சு. தாங்கிக் கொள்கிறது கஷ்டம்தான். பாருங்கோ, நானும் என் இரண்டு பொண்ணுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டேன். எப்பவோ, ஆடிக்கொரு தரம், அமாவாசைக்கொருதரம் அவளிடமிருந்து கடுதாசி வருகிறது. நானும் அதிகமாகக் கவலைப்பட்டுக் கொள்கிறது கிடையாது. எங்கேயோ முருகன் அருளாலே க்ஷேமமா இருந்தால் சரி, நேரமாகிறது. நீங்க சாப்பிட வாங்கோ அண்ணா!" என்று என்னைச் சாப்பிட அழைக்க வந்த சுப்பராமய்யர்தான் எவ்வளவு எளிதாகத் தெளிவுபடுத்தி விட்டார் நிலையை. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த உண்மை தெற்றென விளங்கியது.

மேஜை மீது இருந்த தேவாரப் புத்தகத்தின் தாள்கள் காற்றில் பறந்தன. அதை மூடி வைக்கச் சென்ற என் கண்ணில் எதேச்சையாக வாகீசப் பெருந்தகையின் பாடல் ஒன்று பட்டது. இந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான பாடல் என்று எண்ணிக் கொண்டேன். வாய் விட்டு ஒரு முறை படிக்கவும் செய்தேன். 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, அவனிருக்கும் வண்ணமும் கேட்டுப் பின்னை அவனுக்கே பிச்சி ஆகி அன்னையையும் அத்தனையும் நீத்த 'கங்கை'யின் பவித்திர உருவம் என் மனக் கண் முன் வந்து நின்றது. அவ்வுருவம் சாயலில் லக்ஷ்மியைப் போலவும் இருப்பதாகப் பிரமை யுண்டாயிற்று.

"அண்ணா, இலை போட்டாச்சு"–சமையலறையிலிருந்து சுப்பராமய்யரின் குரல் மீண்டும் ஒலித்தது. கண்களின் ஓரத்தில் துளித்திருந்த கண்ணீரை மேல் துண்டால் ஒற்றிக் கொண்டேன். முன்னைவிட இப்போது எனது நெஞ்சு மிகவும் இலேசாகி விட்டிருந்தது.

மின்சாரப் பொறி இயல் கலைஞரான ஸ்ரீ எம். கணபதி அவர்களுக்கு நம் பாரத தேச ஜனாதிபதி பத்ம விபூஷன் என்ற கௌரவத்தை வழங்கியிருக்கிறார். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக ஸ்ரீமான் எம். கணபதி தேசத்துக்குப் புரிந்து வரும் தொண்டு அபாரமானது. பல பெரிய பாலங்கள், அணைகள் கட்டிப் பெரும் புகழ் ஈட்டியிருக்கிறார். வங்காளத்தில் சித்தரஞ்சனில் ரயில்வே என்ஜின்கள் நிர்மாணிக்கும் பெரிய தொழிற்சாலையை நிறுவும் பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக முடித்திருக்கிறார். தற்சமயம், பாரத சர்க்காரின் போக்குவரவு இலாக்காவில் பதவி ஏற்று, காண்டலா என்னும் இடத்தில் பதின்மூன்று கோடி ரூபாயில் பெரிய துறைமுகம் நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இவரைக் கௌரவித்தது தமிழ் மக்களின் பொறி இயல் நுட்பத்தையே கௌரவித்ததாகு மல்லவா!



மலேரியாவை ஒழியுங்கள்

நிச்சயமாக – ஆபத்தில்லாமல் – குறைந்த சிலவில்

'பாலுட்ரின்'

மலேரியாவை வீழ்த்துகிறது



மலேரியாவின் சின்னங்கள்:

முதலில் குளிரால் நடுக்கமுண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை (0.3 Gm.)
6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை
6 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.

ICI

ICP 287

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரசாமி

30. வைட்டமின் 'பி'

முதன் முதலில் வைடமின் 'பி' என்றால் ஒரு வகை என்றுதான் நினைத்தார்கள். பிறகு அதில் பலவகை யிருக்கின்றன என்று கண்டு பிடித்தார்கள். இப்பொழுது வைடமின் 'பி' வகையில் பதினெட்டு வகைகள் இருக்கின்றன. இந்தப் பதினெட்டு வைடமின்களில் சில வகைகள் தான் மிகப் பிரதானமானவை. அவைகளில் வைடமின் பி. 1 என்பது மிக முக்கியமானது. இதற்கு தையமின் என்றும் சொல்லுவதுண்டு. இது மிக மிக முக்கியமானது. உயிர் வாழ மிக இன்றியமையாதது. இந்த தையமின் – வைடமின் பி 1. சத்து சரிவர இருந்தால் நாம் சாப்பிடும் உணவிலுள்ள மாப் பொருள், இனிப்புச் சத்து சரிவர உடலில் ஒட்டும். இந்தச் சத்து இல்லையானால் நாம் என்னதான் சாப்பிட்டாலும் உடலில் ஒட்டாது. இயற்கையான உடல் வளர்ச்சிக்கும், நரம்புகளுக்கும், ஜீரண உறுப்புகளுக்கும், இரத்தக் குழாய்களுக்கும் இந்தச் சத்து மிக மிக அவசியமானது. இந்தச் சத்து சரிவர இருந்தால் தான் மேற்சொன்ன அவயவங்களெல்லாம் சரிவர வேலை செய்யும். இந்தச் சத்து போதுமான அளவு உடலில் இல்லையானால் பெரிபெரி என்ற நரம்பு நோய் உண்டாகும். நமது தமிழ் நாட்டில் இதைப் பித்த பாண்டு என்பார்கள். சோகை, நரம்புத் தளர்ச்சி, ஜீரண சம்பந்தமான வியாதிகள், கால் வீக்கம், மலச்சிக்கல், பசியின்மை, சீக்கிரம் எதிலும் களைப்படைதல், ஆயாசம், தலைச் சுற்றல், தலைவலி, இருதயம் அதிவேகமாய்த் துடித்தல், இருதய வீக்கம், எதிலும் தெம்பு இல்லாமை, தைரியக் குறைவு முதலியனவெல்லாம் ஏற்படும். உடலின் ஒவ்வொரு அணுவுக்கும் இந்த தையமின் சத்து மிக அவசியம்.

இவ்வளவு முக்கியமான சத்து நமக்குத் தினசரி வேண்டியதெல்லாம் மிக மிகச் சிறிதளவே யாகும். வளரும்குழந்தைகளுக்கு அரை அல்லது ஒரு மில்லி கிராமும், பெரியவர்களுக்கு ஒரு மில்லி கிராமும், மாதர்களுக்குக் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போதும், கர்ப்பமாய் இருக்கும் போதும் ஒரு மில்லி கிராமிலிருந்து இரண்டு மில்லி கிராமும் தான் வேண்டியது. ஆண்களில் சரீர உழைப்பு அதிகமானவர்களுக்கு இரண்டு மில்லி கிராமும் தேவையாகும். இவ்வளவு குறைந்த அளவுதான் நமக்குத் தேவையாய் இருக்கிறது. அப்படியிருக்கும் நம்மில் அநேகர் இந்த வைடமின் பி 1. குறைவினால் பல இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம்.


இந்தச் சத்து குறைவானவர்களுக்கு வெகு சுலபமாய் வைடமின் பி. 1 மாத்திரையைச் சாப்பிடச் சொல்லி வைத்தியர்கள் சிபார்சு செய்து விடுகிறார்கள். அவர்களும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். தினசரி சாப்பிடும் உணவில் சிறிது அறிவைச் செலுத்திச் சீர்திருத்தம் செய்து கொண்டால் இந்த மருந்துகளெல்லாம் இல்லாமலேயே காலங் கழிக்கலாம். அப்படியும் இந்த மருந்துகளை உபயோகிப்பதால் உடனே வியாதி போய் விடும் என்பதில்லை. எது வரை உபயோகிக்கிறோமோ அது வரை ஒரு கோளாறும் காட்டாது. சிலருக்குச் சிறிது குணமாகும். பின் இம் மருந்துகளைச் சாப்பிடுவதை விட்டு விட்டால் மறுபடியும் நோய்களின் குறிகள் துவங்கும். எனவே ஆயுள் முழுதும் மருந்துகளையே சாப்பிட்டுச் சாப்பிட்டு வாழ வேண்டியதுதான்.

சிலர் இந்தச் சத்துகள் எல்லாம் உணவுடன் சேர்க்கைதானே, மருந்தில் எப்படிச் சேர்க்கை யாகும் என்று மருந்துக்குப் பரிந்து பேசுவார்கள். ஆம், உணவுச்சத்துதான்; அந்தச் சத்தை உணவில் சாப்பிடுவதற் கென்ன! ஏன் வைத்தியர்கள் அவைகளைச் சிபார்சு செய்யக் கூடாது! ஏதோ இம்மாதிரி மருந்துகள் கொடுத்தால்தான் பிழைக்கும் என்ற நிலைமையில் மருந்துகளைச் சிபார்சு செய்தால் அதை வரவேற்கக் கூடியதுதான். தன்னிடம் வருபவர்கள் எல்லோரும் இம்மாதிரி ஆபத்தான நிலைமையில் வருவதில்லை. ஏதோ சிலருக்கு அப்படி யிருக்கலாம். மற்றவர்களுக்கு உணவுகளைச் சிபார்சு செய்யலாம் அல்லவா! உணவில் அந்தச் சத்தைப் பெறும் வழிவகைகளைச் சொல்லலாம் அல்லவா!

சில வைத்தியர்கள் மக்களின் மனோபாவம் அறிந்து வெறும் எலுமிச்சைச் சாற்றில் சிவப்பு வர்ணம் கலந்தும், இளநீரில் மஞ்சள் வர்ணம் கலந்தும் கொடுப்பவர்களும் உண்டு. நோயாளிகள் அதைக் கொண்டு போய் மருந்தெனச் சாப்பிட்டுச் சுகமும் அடைந்திருக்கிறார்கள்.

எல்லா நோயும் மருந்தினாலேயே போவது இல்லை. சில என்னதான் மருந்துகளை உபயோகித்தாலும் வந்த விருந்தாளி இரண்டு மூன்று நாட்கள் இருந்தே போகும். அதற்கு மருந்தே அவசியமில்லை. சில ஓய்வு எடுத்துக் கொண்டாலே போகும். சில பட்டினி போடுவதில் போகும். சில நம்பிக்கையில் போகும். சில இட மாறுதல் அடைந்தால் மறையும். சில உணவு மாறுதல்களில் விலகும். மிகச் சிலவற்றிற்குத்தான் மருந்து வேண்டியிருக்கும். அப்படி யிருக்க ஒரு சிறு மாறுதலுக் கெல்லாம் மருந்துகளையே நாடும் பழக்கம் எப்படியோ ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுதெல்லாம் வைத்தியர் மருந்தைக் கொடுத்துச் சாப்பிடு என்று சொன்னாலும் மக்கள் மட்டமாக மதிக்கிறார்கள் ஊசி போட்டால் தான் வைத்தியர்கள் கவனித்து வைத்தியம் செய்வதாக நினைக்கிறார்கள். "அந்த வைத்தியர் என்ன வெறும் மருந்தையே கொடுக்கிறார், யாருக்கு அதை வேளா வேளைக்குச் சாப்பிட முடிகிறது. ஒரு ஊசி போட்டால் எல்லாம் போய்விடும்!" என்று அநேகர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். இப்பொழுதெல்லாம் வைத்தியர்களிடம் போய் மருந்து கேட்பது இல்லை. ஊசி போடுங்கள் என்றுதான் நாகரிகமாய்க் கேட்கின்றனர். வைத்தியர் இது என்ன வியாதி, ஊசி வேண்டியது அவசியந்தானா என்று யோசனை செய்வதற்குள் இவர்களாகவே அவர்களுக்கு யோசனை சொல்லி விடுவார்கள். சில வைத்தியர்கள் நோக்க மறிந்தும் பிழைப்புக்காக நடக்க வேண்டி யிருக்கிறது. சாதாரண மருந்து கொடுத்தாலே போகக்கூடியதா யிருந்தாலும் அம் மருந்தை ஊசி மூலம் போடுகிறார்கள். சிலர் வெறும் ஜலத்தைக் கூட ஏற்றுகிறது உண்டு. வைத்தியர் வந்தார், இன்று இரண்டு ஊசி போட்டார், மூன்று ஊசி போட்டார் என்று சொல்லுவது மதிப்பிற்குரிய வார்த்தையாய்



நாடகக் கலைஞருக்குப் பாராட்டு

★ சென்ற நாற்பது ஆண்டு காலமாக நாடகத் துறையில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வரும் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுக்கு ஆகஸ்டுமீ 31உ அண்ணாமலை மன்றத்தில் ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். அண்ணாமலை மன்றம் நிறைந்து ததும்பும்படி விழாவுக்குச் சென்னை நகரப் பிரமுகர்களும் ரஸிகர்களும் திரண்டு வந்திருந்தனர். இந்த விழாவுக்கு டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் தலைமை வகித்தார். ராஜா ஸர். முத்தையாச் செட்டியாரைத் தலைவராகப் பெற்று, பல பிரமுகர்களைக் கொண்ட கமிட்டியார் கலைச்சிறப்புடன் கூடிய மிகப் பெரிய மலர் மாலையை ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளைக்கு அணிவித்து, வெள்ளியால் செய்து தங்கம் இழைத்திருந்த சபரி மலையையும், ஐயப்பன் ஆலயத்தையும் பாராட்டு விழா நினைவுப் பொருளாக வழங்கினார்கள்.

நவாப் ராஜமாணிக்கம் நாடகக் குழுவைச் சென்னைக்கு அழைத்து வந்து, நிர்வாகப் பொறுப்பு ஏற்று, நாடகங்களை நடத்துவிக்கும் "ஸ்டேஜ்" நிர்வாகிகள் இருவருக்கும் வெள்ளிக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

ராஜாஜி, ராஜா ஸர் முத்தையாச் செட்டியார், மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம், சபாநாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை, கல்கி ஆசிரியர், ஸ்ரீமதி சரஸ்வதிபாய், ஸ்ரீ வி. டி. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகக் கலைத் திறனையும், அவர் நடத்தி வரும் பக்தி மயமான நாடகங்களையும் போற்றிப் புகழ்ந்து பாராட்டினர்.

நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் தமக்கு அளித்த பாராட்டுதலுக்கு நன்றி உணர்ச்சியுடன் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொங்கப் பதில் அளித்தார். அவர் தமது வாழ்க்கை அனுபவங்களை ரஸமாக எடுத்துரைத்து மக்கள் மனத்தில் பதியும்படி கூறினர்.

நாடகக் கலை மூலம் தமிழ் நாட்டுக்கும், குறிப்பாக பக்தி மயமான நாடகத்துக்கும் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாடகக் கலைக்கு மேலும் மேலும் பணியாற்றும்படி இறைவன் அருள் புரிவாராக!

சமூகத்தி னிடையே இன்று இருக்கிறது. வைத்தியர்களாவது வேறு வழி யில்லாமல் மக்களைத் திருப்திப்படுத்தச் செய்கிறார்களென்றால் க்ஷயம் போன்ற நோய்களுக்குக் கொடுக்கக் கூடிய மிக விலை உயர்ந்த ஊசி மருந்துகள் இடையில் வியாபாரிகளாலோ, வழிகளிலோ மோசடி நடந்து வெறும் ஜலத்தை நிரப்பியும் வந்திருக்கிறது. இவைகளை எப்படியோ அறிந்து நடவடிக்கைகள் கூட எடுத்திருக்கிறார்கள்.

இந்த வைடமின் பி. 1 சத்து மற்றப் பொருள்களில் இருந்தாலும் முக்கியமாய் நாம் உண்ணும் உணவில் பெரும் பகுதியாக உபயோகிக்கும் அரிசியின் மேல் தவிட்டில்தான் இருக்கிறது. அதுவும் நமது தென்னாட்டில் அரிசி தவிர மற்றவைகளைத் தொடக்கூட மாட்டார்கள். ரேஷன் காலங்களில் எப்படியோ கஷ்டப்பட்டுக் கோதுமையைச் சாப்பிட்டு வந்தார்கள். இப்பொழுது அந்தக் கஷ்டம் கூட இல்லை. இரண்டு வேளையிலும் நன்றாய் மிஷினில் தீட்டிய அரிசியைக் கொண்டு ஆசை தீர வெள்ளை வெளேரென்ற சாதத்தை வெளுத்து வாங்குகிறார்கள். ரேஷனில் கொடுத்த போதோ சிறிது தவிடு இருந்தது. அதையும் சிலர் நன்றாய்க்



எம்மொழியிலும் **விஸ்டம்** கேட்பது விவேகமாகும் — அது நீடித்து உழைக்கும், சரியான வடிவமுள்ள நைலன் டூத் ப்ரஷ்

In any language, it's wise to ask for WISDOM — the long-lasting, correct-shape nylon toothbrush.

ఏ భాషలోనైనా 'విజ్డమ్' అని అడగటం వివేకమైనది. చిరకాలం మను సరైన ఆకారంగల ప్లాస్టిక్ పండ్ల కుంచె.

43

Wisdom

REGD.



சுத்தமான முழு நறுமணமுள்ள காப்பி

நீங்கள் இலகுவாக வாங்கக் கூடிய விலையில்!





Stanes

ஸ்டேன்ஸ்
சிகப்பு லேபிள்
சுத்தமான காப்பி

THE PICK OF THE SOUTH

சுத்தமான காப்பியை வாங்குவதே நல்லது. அது உங்களுக்கு சரியான நறுமணத்தையும், ரசத்தையும், அதிக அளவு காப்பியையும் அளிக்கிறது!

ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஸ்டேன்ஸ் சிகப்பு லேபிள் சுத்தமான காப்பியையே வாங்குகிறார்கள். ஏனெனில் அதன் நறுமணம் கெடாமல் புத்தம் புதியதாக இருக்கிறது. அது காற்றுப் புகாமல் பாக்செய்யப்பட்டு, ½ பவுண்ட், 1 பவுண்ட், 3 பவுண்ட், 7 பவுண்ட் டின்களில் கிடைக்கிறது.

எல்லோரும் வாங்கக் கூடிய நல்ல காப்பி!

STC 4058

தி யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்,
கோயம்புத்தூர், தென் இந்தியா

கும்பகோணத்திற்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். ராதாகிருஷ்ணா ஜெனரல் ஸ்டோர்ஸ், கஸ்பா ரோடு

திருவாரூர் ஏஜண்டு:
ஸ்ரீ எஸ். கே. தெக்ஷிணாமூர்த்தி முதலியார், ஜெனரல் மெர்ச்சண்ட், விஜயபுரம் P. O.

சுத்தியும் மிஷினில் மறுமுறை தீட்டியோதான் உண்டு வந்தார்கள்.

உண்மையில் இந்த அரிசி அப்படியே உபயோகித்தால்தான் சகாயம். மறுபடியும் மிஷினில் கொடுத்தால் முக்கால் பங்குதான் தேறும். மீதியானது மாட்டுத் தொட்டிக்கும், குப்பைத் தொட்டிக்கும் போய் விடும். அப்படியே இவர்களுடைய ஆரோக்கியமும் குப்பையோடு குப்பையாய்ப் போய் விடுகிறது. முன் சொன்ன அத்தனை வியாதிகளும் வருகின்றன. ரேஷன் அரிசியைத் தீட்டுகிறவர்களுக்கு மட்டுமல்ல. பொதுவாயில் அரிசியைச் சாப்பிடும் அத்தனை பேருக்கும்தான் வருகின்றது. அத்தனை பேருக்கும் சேர்த்துத்தான் நாம் பல கோடிக் கணக்கில் மருந்துகளை வாங்கி, நம் பணத்தை வெளி நாடுகளுக்கு அனுப்பி விடுகிறோம். அரிசியை மில்லில் கொடுப்பதால், அளவு குறைந்து தேவை அதிகப்படுவதோடு அல்லாமல் பற்றாக் குறைக்காகப் பாடுபடுகிறோம். ஏதோ இந்த வருடம் வருணனின் அருளால் நமது தென்னாட்டில் அரிசி விளைவு இந்தத் தடவை போதுமானதாய் இருக்கிறது. இல்லையானால் மற்ற நாடுகளில் பிச்சை கேட்க வேண்டிய நிலைமையில் இருப்போம். இந்த வருடம் அதுவரைக்கும் திருப்தி. ஆனால் தவிட்டை நீக்காமல் என்று நாம் சாப்பிடுகிறோமோ அப்பொழுதுதான் நாம் பூரண ஆரோக்கியமாய் வாழ முடியும். அத்துடன் ஆசனமும் செய்தால் சாப்பிட்ட சத்தைஉடல் கிரகிக்கும்.

நமக்கு வேண்டிய பி 1. சத்து ஜலத்தில் கரையக் கூடியது. அதனால் அரிசியை அதிகம் கழுவக் கூடாது. ஊறவைத்துத் தண்ணீரை எடுக்கக் கூடாது. வெந்தஜலம் கொட்டக்கூடாது. இப்படியெல்லாம் செய்வதில் வைடமின் பி 1. சத்து கரைந்துபோய் வெறும் சத்து இல்லாமல்தான் சாப்பிடுகிறோம். ஆகையால் சமைப்பவர்கள் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

இரண்டு கலை நிகழ்ச்சிகள்

சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது தர்ம பத்தினியார், அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக, விவாகமாகாத அனாதைச் சிறுமிகளுக்கு ஒரு இல்லம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆதரவில் ஆரம்பிக்கப்படும். அதன் உதவிக்காக மயிலை ரஸிக ரஞ்சனி சபையில் ஆகஸ்டு மீ 29உ அன்று கனம் கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்களது தலைமையில் ஒரு சங்கீதக் கச்சேரி நடந்தது. பாடியவர்கள் சேலத்தில் 'அட்வொகேட்'டாயிருக்கும் ஸ்ரீமான் ஆர். சுப்ரமணிய முதலியாரின் தவப் புதல்விகள் ஸ்ரீமதி கௌரி கனக சபாபதியும் ஸ்ரீமதி எஸ். ஜயலக்ஷ்மியும் ஆவர். அவர்கள் குடும்பத்தினர் யாவரும் பண்பும், பக்தியும் முக்கியமாக, ஸ்ரீ ராமகிருஷ்ண சேவையில் மிகுந்த ஈடுபாடும் உடையவர்கள். சகோதரிகள் சங்கீதக் கலையில் நல்ல தேர்ச்சியுடையவர்கள். பெரிய வித்வான்களிடம் கலையைக் கற்றவர்கள். ஸ்ரீ சாரதா தேவியின் ஞாபகார்த்த இல்லத்துக்கு நிதி சேர்க்கும் விஷயத்தில் மிகுந்த ஆவலுடன் சேலத்திலிருந்து வந்து கச்சேரி நடத்தினார்கள். சங்கீத வித்வான்களும் சங்கீத ரஸிகர்களும் திரளாக அன்று சபைக்கு வந்து சகோதரிகளின் அழகான சங்கீதத்தை மெய்ம் மறந்து கேட்டு ரஸித்தார்கள்.

ஸ்ரீ முடிகொண்டான் வெங்கட்ராமய்யர் சகோதரிகளின் சங்கீதத்தைக் கடைசி வரைக்கும் இருந்து ரஸித்து உணர்ச்சியுடன் பேசினார் :

"நான் உள்ளே வரும்போது ஒருவர் பாடுவதாகத்தான் நினைத்தேன். இங்கு வந்த பிறகுதான் இரண்டு பேர் சேர்ந்து பாடுவது தெரிந்தது. இருவருடைய சாரீரமும் இழைந்து இணைந்து ஒற்றுமையாயிருக்கிறது. சங்கீதம் உயர்ந்த முறையில் கலப்பில்லாமல் நல்ல தானம் பாவம் லயம் இவற்றுடன் சுத்தமாயிருக்கிறது. கர்நாடக சங்கீதத்தை இவ்வளவு சுத்தமாயும் உணர்ச்சியுடனும் பாடுபவர்கள் அருமை. சங்கீதக் கலையில் மிகுந்த ஆர்வத்துடன் அப்பியாசம் செய்திருக்கின்றார்கள். நாங்கள் யாவரும் கேட்டு அனுபவிப்பதற்குத் தகுந்த அருமையான கச்சேரி" என்று பாராட்டினார்.

ஆகஸ்டு 30உ திங்கட் கிழமை யன்று திருவல்லிக்கேணி ஸ்ரீனிவாச சங்கத்தைச் சேர்ந்த மாணவிகள் காதம்பரி என்னும் ஸம்ஸ்கிருத நாடகத்தைத் தமிழில் மிகவும் திறமையுடன் நடித்தனர்.

கல்கி ஆசிரியர் 'காதம்பரி' காவியத்தை நாடகமாக அமைத்துக் கொடுத்தவர்களின் திறமையைப் பெரிதும் வியந்தார்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு காதம்பரி நாடகத்தைத் தாம் படித்த போது, கதைப் போக்கு எளிதில் விளங்க வில்லை யென்றும், கதா நாயகர்களின் மூன்று ஜன்ம வரலாறுகள் ஒரே



குழப்பமாயிருந்தன வென்றும், இன்று நாடகத்தைப் பார்த்த பிறகு குழப்பம் நீங்கிக் கதை நன்றாக விளங்கிற்று என்றும் கூறி, நடிகர்களின் நடிப்புத் திறமையையும் பெரிதும் பாராட்டினார்.

இந்த இரண்டு நாட்களிலும் டிக்கட்டுகள் விற்றதின் மூலமும் நன்கொடைகளின் மூலமும் சேர்ந்த தொகை சுமார் ரூ. 5000. பல காரணங்களினால் இந் நாளில் எத்தனையோ ஏழை அனாதைப் பெண்கள் வாழும் வகையின்றித் தவிக்கின்றனர். கருணையும் அன்பும் பக்தியுமே வடிவாயிருந்த அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் பெயரால் ஆரம்பிக்கும் அனாதை இல்லத்துக்குச் சீமான் சீமாட்டிகள் யாவரும் தங்களாலியன்ற உதவி செய்ய முன்வர வேண்டும்.



தர்ம சக்கரம்—ஒரு நல்ல நாடகம்

பாரத நாட்டின் புராதன சக்கரவர்த்திகளில் அசோகருக்கு இணையானவர் யாரும் இல்லை. அந்த மன்னர் மன்னரின் சின்னமாகிய தர்ம சக்கரத்தையே இன்று நம் சுதந்திர பாரத சர்க்காரும் தங்கள் சின்னமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய அசோக சக்கரவர்த்தியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் "தர்ம சக்கரம்" என்னும் பெயருடன் நாடகமாக அமைத்து, மயிலை லேடி சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப் பெண்கள் பள்ளியின் மாணவிகள், ஆகஸ்டு மீ 25உ சிறப்பாக நடித்தார்கள். ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நடந்த இந்த நாடக நிகழ்ச்சிக்கு ராஜாஜி, ஸ்ரீ எஸ். வரதாச்சாரியார், ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியார் முதலியோர் விஜயம் செய்திருந்தார்கள். பச்சையப்பன் கல்லூரியின் பிரின்ஸ்பால் ஸ்ரீ ஆர். கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., தலைமை வகித்தார். அசோகர் காலத்தை அப்படியே நினைவூட்டக் கூடிய சரித்திர ஆதார பூர்வமான காட்சி அமைப்புக்கள் மிக்க பொருத்தமாக அமைந்திருந்தன. மாணவிகளின் நடிப்புத் திறமையையும் பேச்சுத் திறனையும் சபையோர் மிகவும் பாராட்டினார்கள்.

லேடி சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப் பெண்கள் பள்ளியில் ஆண்டு தோறும் மாணவிகள் ஒரு முறையும், ஆசிரியைமார்கள் ஒரு முறையும் நாடகம் நடத்தி மாணவிகளின் கலை உணர்ச்சியை வளர்ப்பதுடன், நாடகங்களினால் கிடைக்கும் தொகையை ஏழை மாணவிகளின் உதவிக்குப் பயன் படுத்தி வருவது பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

மேற்படி நாடகத்தில் பல்வேறு பாத்திரங்களாக நடித்த மாணவிகளையும், ஆசிரியைமார்கள் சிலரையும் மேலேயுள்ள படத்தில் காணலாம். கீழ் வரிசையில் நடுநாயகமாக வீற்றிருப்பவர் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி செல்லம் அவர்கள்.

[லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி எவ்வளவு நல்ல முறையில் நடந்து வருகிறது என்பதைப் பற்றிக் "கல்கி"யில் முன்னமே கட்டுரைகள் வெளியாகி யிருக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெளியான "கல்கி" இதழ் ஒன்றில், ஏதோ ஒரு பெண்கள் பள்ளியின் ஆசிரியைமார்கள் அதிக விலை கொடுத்து நோட்டுகள் வாங்கும்படி மாணவிகளைக் கட்டாயப் படுத்துகிறார்கள் என்று குறை கூறும் கடிதம் ஒன்று வெளியாகி யிருக்கிறது. இது எந்தப் பள்ளிக்கூடத்தைக் குறிப்பிட்ட கடிதம் என்று சில நேயர்கள் கேட்டிருந்தார்கள். கடிதம் எழுதியவர் எந்தப் பள்ளிக்கூடத்தை மனத்தில் வைத்துக் கொண்டு எழுதினார் என்பது தெரியவில்லை. நாம் விசாரித்துத் தெரிந்து கொண்ட அளவில், லேடி சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப் பள்ளியைப் பற்றி அத்தகைய குறை கூறச் சிறிதும் இடம் இல்லை. ஏழை மாணவிகளுக்குப் பல விதங்களிலும் உதவி செய்வதில் இப் பள்ளிக்கூடத்து நிர்வாகிகளும் ஆசிரியைமார்களும் விசேஷ சிரத்தை எடுத்து வருகிறார்கள் என்பது அனைவரும் நன்கு அறிந்ததாகும். —ஆசிரியர்.]

மிக உறுதியானது..

ஒரு அங்குல அகலமுள்ள துண்டு காகிதம் 20 ராத்தலை தாங்குகிறது!



இந்த அனுகூலங்களை
கவனியுங்கள்:



ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் காகிதம் கண்ணாடியை விடத் தெளிவானது... அதன் மூலம் 95% வெளிச்சம் ஊடுருவிச் செல்லுகிறது. ஆகையால் அது உங்கள் பொருள்களை தெளிவாகக் காட்டுகிறது.



இதுவே மிகவும் மலிவான பாக்கிங் சாதனம். விலையை ஒப்பிட்டுப் பாருங்கள். 20"X30" அளவுள்ள ஒருதாளின் விலைகீ அளவுக்கும் குறைவு!

ஒரு சதுர அங்குலத்திற்கு 6.5 டன் எடை வரை கிழியாமல் நிற்கும் சக்திவாய்ந்த ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் காகிதம் எஃகை விட உறுதியானது. அதில் பாக் செய்யப்பட்ட பொருள்கள் சுத்தமாகவும் புத்தம்புதியதாகவும் இருக்கின்றன. எவ்வளவு அஜாக்ரதையாக கையாளப்பட்டாலும் பொருள்களுக்கு சேதம் ஏற்படுவதில்லை. உங்களுடைய பொருள்களை ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் காகிதத்தில் பாக் செய்து, சுலபமாக விற்பனை செய்யுங்கள். உங்களுக்குத் தேவையான காகிதங்களை வாங்குவதில் கஷ்டமிருந்தால் எங்களுக்கு நேராக எழுதுங்கள்..

விலை:

நிறமற்றது:-500 தாள்கள் கொண்ட 1 ரீம்-ரூ 44/-
ஆம்பர் :-500 தாள்கள் கொண்ட 1 ரீம்-ரூ 51/8
உள்ளூர் விற்பனை வரி தவிர
பாக்கிங் சார்ஜ்—ரூ 1/4 கூடுதலாக

TRAYONS **ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் காகிதம்**

தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட்
பாக்டரி: ரேயான்புரம், வடக்கு திருவாங்கூர்
ஸேல்ஸ் ஆபீஸ்: யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், மதராஸ்-1.
இந்தியாவில் முதன் முதலாக ட்ரான்ஸ்பெரன்ட் காகிதம் தயாரிக்கும் ஸ்தாபனம்

மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள்: ரேயான் ட்ரேடர்ஸ் லிமிடெட், 27 கோரல் மர்ச்சென்ட் தெரு, மதராஸ்-1 (பிராஞ்சுகள்: மதுரை, சேலம் & கோயம்புத்தூர்)
பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்: Mr. H. சுப்பண்ணா, டாட்பேட், பெங்களூர் TR.4086



மார்கோ ஸோப்

வாசனை நீக்கப் பெற்ற வேப்பெண்ணெயிலிருந்து ஒரு விசேஷ முறைப்படி தயாரிக்கப்படுவது. அதன் அபரிமித மான கிருமி நாசன நுரை அழுக்கை அகற்றி, சருமத்தினுள் புகுந்து நன்கு சுத்தம் செய்யும். சருமத்திற்கு புஷ்டியும் மென்மையும் தரும். அபூர்வ மணம். நுட்பமான சருமத்திற்கும் ஹானியற்றது.

A CALCHEMICO PRODUCT

தென் இந்தியா ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரையில் சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வினஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வினஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறுநீரும் குறைகிறது. 3வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்கு மேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் இடையாது; இன்ஜக்ஷன் இடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

•

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0


(பாக்கிங், தபாற் செலவு இனும்)

•

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

ஆண்டாள் கல்யாணம்

தில்லைவாசி



அந்தக் கிராமத்தில் செய்தி பரபரவெனப் பரவியது. "ஆண்டாளுக்குக் கல்யாணம்! மூன்றாம் முறையாக இப்போது ஏற்பாடு, இனிக் கல்யாணம் நிற்காது!" இப்படிப் பேசிக் கொண்டனர் கிராம வாசிகள்.

ஆண்டாள் தம்புசாமியின் மகள். இவருக்கு இரண்டே மக்கள். பெரிய பையன் ராஜாங்கம். அவனுக்கு ஏற்கெனவே கல்யாணமாகி விட்டது. சொற்பப் படிப்புக்காரன். கிராமத்துப் பள்ளியோடே நின்று விட்டான். ஆனாலும் அவன் மேதாவியென நடந்து கொள்வான். ஊர் விவகாரங்களில் தானே முந்தி நிற்பான். தந்தையை மிஞ்சிய செல்வாக்கு; பெயருக்குத்தான் தம்புசாமி. குடித்தனப் பொறுப்பும், மற்ற அதிகாரமும் ராஜாங்கத்தின் கையில். தன் கணவரைப் போல் ஒதுங்கி யிருந்தாள் அவர் மனைவி; வீட்டுப் பொறுப்பை மருமகளிடம் ஒப்படைத்துவிட்டாள்.

தம்புசாமி காசுக்காரர். ஊருக்கே பணக்காரர் அவர்தாம். நன்செயும் புன்செயுமாக நாற்பது காணி நிலம் படைத்தவர். அங்கே முதல் முதலாகக் கல் வீடு எழுப்பியவரும் அவர்தாம்.

ஊருக்கு அதிசயமாக இருந்தது, ஆண்டாள் பள்ளிக்கூடம் போனதுதான். அந்தக் குடும்பத்தில் கண்ணெனத் தகும் கல்வி யறிவைப் பெறப் போன முதல் பெண்ணும் அவளே.

ஆண்டாள் நாலாவது படித்து முடித்து விட்டாள். "இத்துடன் போதும்! நகரத்துப் பள்ளிக்கு ஏன் போகவேணும்!" என்றார் தம்புசாமி. ஆனால் அவர் மகன் ராஜாங்கம் இணங்கவில்லை. "தங்கச்சி படிப்பை நிறுத்த வேணும். ஆங்கில அறிவும் வரட்டும். நிறையப் படிக்கட்டும். படித்து உத்தியோகத்திலிருக்கும் மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுப்போம்" என்று அவன் தன் உள்ளத்து ஆசையைக் கொட்டினான். தான் படிக்காமல் விட்ட படிப்பைத் தன் தங்கை ஆண்டாளாவது படித்து விடட்டும் என்பதுதான் அவனுடைய அவா.

தந்தை சம்மதித்தார். ராஜாங்கம் ஆண்டாளை ஐந்து மைல் தூரத்திலிருந்த உயர் நிலைப் பள்ளியில் கொண்டு போய்ச் சேர்த்தான்.

ஆண்டாள் பள்ளிக்கூடம் போய்வர அழகான வில் வண்டியும் தயாராகி விட்டது. வண்டிக்கேற்ற ஒரு ஜோடி மதமதப்பான மயிலைக் காளைகளையும் வாங்கி விட்டான் ராஜாங்கம். அதை ஓட்டுவதற்கும் ஒரு ஆளைப் பிடித்துப்போட்டான்.

இப்பொழுது கிராமப் பெண்ணுக்குப் பள்ளிக்கூடத்து நாகரிகமும் சேர்ந்து கொண்டது. கேட்க வேண்டுமா அவள் கவர்ச்சிக்கு! வசீகரம் புன்முறுவல் பூத்தது. விதவிதமான பட்டாடைகள். பற்பல வண்ணத்தில் பகட்டாகக் காட்சியளிக்கும். ஆண்டாள் பள்ளிக்கூடம் போவதைப் பார்ப்பதே ஜனங்களுக்கு ஒரு வேடிக்கை. ஆமாம், அவர்களுக்கு அவள் ஒரு அதிசயப் பொருள்.

காலையில் எட்டு மணிக்கு வண்டி அங்கிருந்து கிளம்பிவிடும். வண்டியில் மாண்புடன் அமர்ந்திருப்பாள் ஆண்டாள். மயிலைக் காளைகள் அதிவேகமாக ஓடும். வேடிக்கை பார்க்கும் ஜனங்களின் கண்களும் தோற்றம் எட்டும் வரையில் வண்டியுடனேயே ஓடும்.

இந்த வேடிக்கையோடு வேடிக்கையாகக் காலமும் ஓடியது. வருஷங்கள் சில கழிந்தன.

ஆண்டாள் எட்டாவது வகுப்பைத் தாண்டியவுடன் பருவ மங்கையானாள். அப்பொழுது தம்புசாமிக்கு மகள் படித்தது அத்துடன் போதும் என்றாகி விட்டது.

"தம்பி! ஆண்டாள் பள்ளிக்கூடம் போனது போதும். நிறுத்தி விடு. பெரிசான பெண் படிக்கப் போவது நம் வழக்கத்துக்கு ஆகாது. நாலு பேர் நாலு சொல்ல இடம் வைத்துக் கொள்ளக் கூடாது!" என்றார் அவர், மகன் ராஜாங்கத்திடம்.

ராஜாங்கம் அவரைப் போன்ற நினைவு வைக்கவில்லை. தங்கை இன்னும் படிக்கத்தான் வேண்டும் என்ற தன் திட்டத்தை அமுல் நடத்தவே அவன் விழைந்தான். அதில் வெற்றியும் கண்டான். தகப்பனாரையும் சம்மதிக்க வைத்தான்.

கால நதி ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் ஆற்றங்கரையில், தண்ணீர்த் துறையில் குடி தண்ணீர் கொண்டு வரப்போன பெண்மணிகளிடையே வம்புப் பேச்சின் மத்தியில் ஒரு வதந்தி பரவியது.

"அந்த ஊர் பள்ளிக்கூடத்து வாத்தியார் செல்லப்பனுக்கு ஆண்டாளைக் கொடுக்கச் சம்மதித்து விட்டார்கள். வரும் ஆவணியில் கல்யாணம்

நடக்கப் போகிறது. படிச்ச பிள்ளைக்குப் படிச்ச பெண்!'' என்றாள் ஒருத்தி.

ஆனால் இதில் உண்மை சிறிதே யிருந்தது.

செல்லப்பன் ஆண்டாளை மணக்க ஆசை வைத்ததும் உண்மை. அவன் தந்தை தம்புசாமி வீடு தேடிப் போனதும் உண்மை. கல்யாணம் நிச்சயமானது என்பதுதான் பொய்.

''ஆண்டாளை மணக்கச் செல்லப்பனுக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது! அவன் படித்த படிப்புத்தான் போதுமா! வாத்தியார் பிழைப்பு ஒரு பிழைப்பா! அல்லது சொத்து சுதந்திரம்தான் உண்டா அவனுக்கு!'' என்று பெண் கேட்க வந்தவரைத் தாறுமாறாகப் பேசி ராஜாங்கம் பதில் சொல்லி அனுப்பி விட்டான்.

செல்லப்பன் அக்கணமே ஆண்டாளை மறந்தான்! வேறு பெண்ணைப் பார்க்கச் சொல்லி மணந்து கொண்டான்.

ஆண்டாள் படிப்பில் ஒரு படி மேலே போனாள். காலத்தில் கல்யாண மின்றி வளர்ந்தியான ஒரு பெண் இப்படி வண்டியில் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தது கிராமத்தில் பரபரப்பை அதிகமாக்கியது. இதை வேடிக்கை பார்த்தவர்கள் ஒரு பக்கம். வம்பு பேசியவர்கள் இன்னொரு பக்கம். ''என்ன இருந்தாலும் தம்புசாமிக்கு இந்தக் காசுத் திமிர் கூடாது. பேசாமல் செல்லப்பனுக்குப் பெண்ணைக் கொடுத்துக் கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காணத் தவறிவிட்டார்'' என்று பேசிக் கொண்டவர்களும் அநேகம்.

ஊர் வாய்க்குப் பயந்தால் எதுவுமே செய்து விட முடியாது. தம்புசாமி வகையறா இதைக் கண்டு அஞ்சுபவர்களல்ல. ஆண்டாள் படிக்கப் போவது நிற்கவில்லை.

இப்படிப்பட்ட பள்ளி வாழ்வில் ஆண்டாளுக்கு ஒரு அனுபவம் நேர்ந்தது.

அன்று காலையிலிருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சூரியனைக் காணோம். வீசிய காற்று குளிரை யூட்டியது! மழை பெய்யப் போகிறதா!

கிராமத்திலிருந்து பிரிந்து நகரை நோக்கிப் பாதை திரும்பியது. சாலையில் ஜோடி மயிலைக் காளை பூட்டிய வண்டி ஓடிக் கொண்டிருந்தது. ஆண்டாள் வனப்பு மிக்க மங்கையாகப் பருவகால எழிலுடன் அதில் அமர்ந்திருந்தாள்.

வண்டி இரண்டாவது மைல் கல்லையும் கடந்து விட்டிருந்தது.

அப்போது திடீரென்று வானத்தில் கரிய இருள் சூழ்ந்தது. அதில் கனத்த கரு மேகங்கள் பவனி வந்தன. அவைகளின் ஆட்சி கொம்மாளமிடத் தொடங்கி விட்டன. இதன் விளைவு! பிசு பிசு வென்று சிறு சிறு தூறல்கள் ஆகாயத்தையும் பூமியையும் இணைத்து முடிபோட முயன்று முடியாமல் கீழே சிதறி விழுந்து கொண்டிருந்தன. சிறு மழை பெரு மழையாகும் அறிகுறி தோன்றியது.

மழைக் காட்சி ஆண்டாளின் மனத்தில் குதூகலத்தை விளைவித்தது. மழையின் சூழ்நிருட்டில் தூரக் காட்சிகள் மறைவதே விநோதமாக இருந்தது அவளுக்கு.

அதே சமயம் வண்டிக்கு முன்னால், சற்று தூரத்தில் போய்க் கொண்டிருந்த வாலிபன் மழையில் நனைவதை அவள் கண்டாள்.

''யாரோ பாவம், தெரியவில்லை. வீணாக மழையில் நனைகிறார். உத்தியோகஸ்தர் போலிருக்கு'' என்று ஆண்டாள் சொல்லிக் கொண்டாள்.

''கந்தா! வண்டியை நிறுத்து. அவரை ஏறி இப்படி ஒரு பக்கம் உட்கார்ந்து கொள்ளச் சொல். மழையில் நனைய வேண்டாம்!'' என்று வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டாள் அவள்.

வாலிபனை அணுகியதும் வண்டி நின்றது.

''ஐயா! வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள். டவுனில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். இப்போதைக்கு இந்த மழை விடப் போவதில்லை'' என்றான் வண்டிக்காரன்.

வாலிபன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் திகைப்புத்தான் ஏற்பட்டது. கண்ணைக் கவரும் மின்னலழகி! இல்லை...கடைந்தெடுத்த தங்கப் பதுமை அங்கே காட்சியளித்தாள், யுவதி வடிவில் ஆண்டாள் என்ற அருமையான பெயருக்குரியவளான பொற்கொடி. அவனுக்கு இந்த உதவியை ஏற்கவோ மறுக்கவோ தோன்றவில்லை.

''சும்மா, ஏறிக் கொள்ளுங்கள், ஐயா! ஒன்றும் வித்தியாசமாக என்ன வேணும்'' என்று வண்டிக்காரன் மீண்டும் சொன்னான். கொஞ்சம் துணிவு பிறந்தது. அவன் வண்டியை நெருங்கி வந்தான்.

அதற்குள் ஆண்டாள் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து முன்புறம் கொஞ்சம் நகர்ந்து, அவன் பின்புறம் வசதியாக அமர இடம் ஒழித்து வைத்து விட்டாள். வாலிபன் உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வை பின் திசையை நோக்கியிருந்தது: வண்டி செல்லத் தொடங்கியது.

ஆண்டாளும் முன்புறமே தன் பார்வையைச் செலுத்திய வண்ணமிருந்தாள். அவளுடைய சிவந்த முகம் வெட்கத்தினால் மேலும் சிவப்பாகியது. இடது கையினால் முகத்தை மறைத்துக் கொள்ளவே முயன்றாள்.

ஆனால் இருவர் யோசனைகளும் தீவிரமாயின. ''யார் இவள்!'' ''யார் இவர்'' விடை காணவே இருவருக்கும் ஆவல் தோன்றியது.

இந்த மந்த நிலை அப்படியே இருந்துவிடவில்லை. அவ்விருவருடைய பார்வைகளும் திசை மாற்றிக் கொண்ட வேளைகளும் உண்டு; கூரிய பார்வையைக் கூரிய பார்வை வெட்டியது.

நளினமான அவள் தோற்றம் அவன் நெஞ்சைக் கவ்வி யிழுத்தது. வாழ்வின் இறுதிவரை வண்டி ஓடிக் கொண்டிருக்க, இந்த இன்பச் சூழ்நிலையே நிரந்தரமாகிவிட வேண்டு மென்ற கனவு அவனை விழுங்கியது. அவனைக் கிராமப் பெண்ணாக அவனால் எண்ண முடியவில்லை.

அவளும் ஏதேதோ எண்ணினாள். அவனது கம்பீரத் தோற்றம் கண்ட அவள் மயங்காமலிருக்க முடியுமா! அழகான ஆடவனருகில் இருக்க அவள் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்!

இப்படி ஒரு வாய்ப்பை யளித்த மழை கோடி கோடி வருஷங்கள் நீடூழி நிலைத்து நின்று மழையாகவே பொழிந்து தள்ளட்டும்!

ஆனால் மழை நீடிக்கவில்லை. பெரு மழையாகாமல் சிறிதுநேரத்தில் நின்றே போய்விட்டது.

இருண்ட மேகங்கள் கலைந்து, மறைந்து ஒழிந்தே போயின. உடனே வானத்தில் வெளிச்சம் கண்டது. பதுங்கிக் கிடந்த சூரியனும் வெளியில் வந்தான். சற்று முன் மழை பெய்தது தெரியாமல் 'சுள்' என்று வெய்யில் காய்ந்தது.


''வண்டியை நிறுத்தப்பா! இறங்கிக் கொள்கிறேன். மழைதான் விட்டுவிட்டதே'' என்றான் வாலிபன், வண்டியோட்டியைப் பார்த்து.

''இன்னும் கொஞ்ச தூரம்தானே யிருக்கு! வண்டியிலேயே வந்துவிடுங்கள். மழை மட்டும் பெய்திருந்தால் பேசாமல் உட்கார்ந்து வந்திருப்பீர்கள், இல்லையா!'' என்றாள் ஆண்டாள்.

வண்டியும் நிற்கவில்லை. அதற்குமேல் அவனும் இறங்க முயற்சி செய்யவில்லை.



பெர்ல் பார்லி என்று கூறுவதற்கு முன்பாக
ராபின்ஸன்ஸ்
என்று சொல்லிக் கேளுங்கள்
எல்லா உபயோகங்களுக்கும் சிறந்தது
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்.,
த. பெ. 664, கல்கத்தா.
ROBINSON'S
PEARL
BARLEY



அந்த இருமலை நிறுத்துக தொண்டை
ரணத்தை சமனமூட்டி
குணப்படுத்துக
பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் சுவாசத்துடன் தொண்டை சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்ப ஸ்தானத்திற்கே சென்று வேலைசெய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாய் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, உங்கள் சுவாசப் பையை காப்பாற்றி, கபத்தை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளுயன்ஸா மற்றும் ப்ராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.
பெப்ஸ் சாப்பிடுங்கள் PEPS
உலக பிரசித்தி பெற்ற
தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
FPY. 29-TAM
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன்

"கிராமத்தில் நீங்கள் யார் வீடு?" முதல் கேள்வி அவனிடமிருந்தே பிறந்தது.

"ஆற்றங்கரையிலிருந்து சற்று தள்ளியிருக்கும் கல் வீடு எங்கள் வீடு. தம்புசாமியின் மகள். ராஜாங்கத்தின் தங்கை, நான்தான் ஆண்டாள்!"

"மிகவும் சந்தோஷம். ராஜாங்கம் எனக்கு ரொம்பவும் வேண்டியவராயிற்றே"

"நீங்கள்!"

"நானா! பெயரைச் சொல்ல வேணுமானால் தியாகராஜன்! பிழைப்பைச் சொல்லவேணுமானால், இந்தப் பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர். இந்த வட்டாரத்து அபிவிருத்திக்காக என்னைப் புதிசாய்ப் போட்டிருக்கிறார்கள். வந்து ஒரு மாசமே யாகிறது. எங்கோ இப்படிப் புறப்பட்டு வந்தேன். மழையில் அகப்பட்டுக் கொண்டேன். உங்கள் உதவிக்கு நன்றி" என்று கூறி விடை பெற்றுக் கொண்டான் தியாகராஜன்.

மழை எதைத்தான் விளைவிக்கவில்லை! இங்கே இவ்விரு இளம் பருவத்தினரிடம் அன்பை விளைவித்து விட்டது!

அப்பொழுதிலிருந்தே ஆண்டாள் தியாகராஜனிடத்து அன்பு வளர்ந்தது; கடலென விரிந்தது.

சாலைச் சந்திப்பு அதிகரித்தது. அவன் வண்டியில் போவான். சாலையில் எதிரே அவள் நடந்து போவாள். கண்களும் கண்களும் பேசும்; புன்முறுவல் உறவு கொள்ளும்.

ஒருநாள் தன் உத்தியோக அலுவலை முன்விட்டு அவன் ஆண்டாள் கிராமத்துக்குப் போனான். அன்று அவனுக்கு விடுமுறை நாள்.

ஊர் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட ராஜாங்கம், வட்டார அபிவிருத்தி அதிகாரி தியாகராஜனை உள்ளன்போடு வரவேற்றான். அவரிடம் இன்னும் அதிகத் தோழமை பூண்டான். வேலை முடிந்ததும் கையோடு விருந்துண்ண வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டான்.

அன்பான உபசரணை அங்கே கிடைத்தது தியாகராஜனுக்கு.

சாப்பிட்ட பின்னர் ஏதாவது பேச வேண்டாமோ! "நீங்கள் படித்து, இப்படி உத்தியோகம் பார்ப்பது எங்களுக்குத் திருப்தி. நாலு பேர் விவசாயம் பார்த்தாலும், ஒருத்தர் நம் சமூகத்தில் உத்தியோகம் பார்ப்பதே பெருமைதான்" என்றான் ராஜாங்கம்.

"தம்பிக்குக் கல்யாணமாகி விட்டதா!" தம்புசாமியின் ஆவலான கேள்வி இது.

"இன்னும் இல்லை. இந்தப் பக்கத்திலே பெண் பார்க்க வேண்டும். அப்பாவுக்குக் கூடக் கடிதம் எழுதியிருக்கிறேன். படிச்ச பெண் கிடைப்பது தான் கஷ்டமாயிருக்கு" என்றான் தியாகராஜன்.

"தம்பி, நான் சொல்வதை வித்தியாசமாக எண்ணக் கூடாது. எங்கள் வீட்டுப் பெண் ஆண்டாளும்தான் பள்ளிக்கூடம் போகுது. அடுத்த வருஷம் பத்தாவது முடிச்சவிடும். இஷ்டமிருந்தால் உன் தகப்பனுக்கு எழுதி வந்து பார்க்கச் சொல். அதிர்ஷ்டப்படி நடக்கட்டும்" என்றார் தம்புசாமி சிரித்துக் கொண்டே.

"பெரியவர்களாகப் பார்த்து ஏற்பாடு செய்தால் சரிதான். பெற்றோர்களைக் கலந்தாலோசித்துச் சொல்கிறேன். ஆனால் ஒன்று. உங்கள் பெண்ணை மணப்பவன் அதிர்ஷ்டசாலியாயிருக்க வேணும்" என்றான் தியாகராஜன் மீண்டும்.

"அதை நாங்கள் சொல்லக் கூடாது. தங்கச்சியை இவ்வளவு தூரம் படிக்க வைத்ததற்கே காரணம் நான்தான். சும்மா பெண்கள் கண்மூடித்தனமாக இருந்துவிடக்கூடாது, பாருங்கள்" என்று பெருமையாகக் கூறினான் ராஜாங்கம்.

தியாகராஜன் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான்.

இதற்குப் பிறகு அவசியமான காரியங்கள் அந்தக் கிராமத்தில் பல இருந்தன தியாகராஜனுக்கு. தம்புசாமி வீட்டுக்கும் அவன் நிறைய நிறையப் போனான். இன்னும் பல சமயங்கள் ஆண்டாளும், அவனும் வண்டியில் ஒன்றாகப் போவார்கள்; வருவார்கள். உள்ளம் விட்டுப் பேசவும் முடிந்தது அவர்களால்.

"உன்னை அடைய நான் பாக்கியம் செய்திருக்க வேணும். நம் அதிர்ஷ்டம் உன் அப்பாவே பேச்சைத் துவக்கி விட்டார்" என்பான் அவன்.

"உங்களை இதுதான் நான் கேட்டுக் கொள்ள முடியும்! என் அன்ப மனத்தை ஒடித்து விடாதீர்கள். பணத்துக்கோ பதவிக்கோ ஆசை வைத்து விடாதீர்கள்" என்பாள் ஆண்டாள்.

"மனிதன் சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் கொள்வான். இல்லாவிட்டால் அவன் மனிதனே அல்ல, மிருகம்" என்பான் மீண்டும் தியாகராஜன்.

இருவருடைய நெஞ்சின் உறவும் வளர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் நெருங்கிப் பழகினார்கள்; பேசிக் கொண்டார்கள். ஆனால் வரம்பு முறையைத் தாண்டவில்லை. ஆயிரமாயிரம் வருஷங்களாக இந்த மண்ணில் வளர்ந்து வாழும் மக்கள் உடம்பில் ஊறி உரமேறிப் போயிருந்த கற்பண்பு பரம்பரை பரம்பரையாக வாழையடி வாழையாக வந்த முறையினின்று ஒரு சிறிதும் நழுவி விடவில்லை இவர்கள்.

ஆண்டாள் தியாகராஜனோடு பழகுவதைத் தம்புசாமி குடும்பத்தாரும் வித்தியாசமாக எண்ணவில்லை. விகற்பமான எண்ணமே அவர்களுக்குச் சிறிதும் உதிக்கவில்லை.

ஆனால் ஊரில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது.

வம்புப் பேச்சு அதிகமாயது. "ஆண்டாளை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தியாகராஜனுக்குக் கொடுக்கப் போகிறார்கள்" என்ற செய்தி ஊர் பூராவும் அதி விரைவில் பரவியதுதான் இதற்குக் காரணம். அவன் அதிர்ஷ்டத்தை வியந்தனர் சிலர்; அவளுக்கேற்படப் போகும் வாழ்வைக் கண்டு அசூயை கொண்டனர் ஒரு சிலர். எதையாவது வைத்துக் கொண்டு ஏதேனும் பேச வேண்டும் என்ற குறிக்கோளிலேயே நாளைப் போக்கக் கூடியவர்களில் சிலர், "என்னதான் படித்து விட்டாலும், ஒரு ஆணும் பெண்ணும் கல்யாணம் ஆவதற்கு முன் இப்படியா பேசுவார்கள்; வருவார்கள்! கேட்டறியாத புதுமையாக இருக்கே! மானம் அவமானம் இல்லாமல் இப்படிக் கூடப் பெற்றவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா! அதிசயம்தான் இது!" என்று இவர்கள் சந்தை, சாவடி, தோப்புத் துரவு, ஆற்றங்கரை, குளத்து மேடு, இப்படிக் கண்ட கண்ட இடத்தில் பேசித் திரிந்தார்கள். இத்தகைய புண்ணியாத்மாக்களில் ஒருவனாகச் செல்லப்பனிருந்தது ஆச்சரியமல்ல.

இப்படி வெறும் வாயை மென்றவர்களின் வாயில் கொஞ்சம் அவலை அள்ளிப் போட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வாழ்வுக் கதையில் அடுத்த ஒரு திருப்பம் ஏற்பட்டதுதான் விந்தை! இதை அவனே எதிர்பார்க்கவில்லை.

அப்போதுதான் தியாகராஜன் வேலை பார்த்த காரியாலயத்துக்கு ஒரு புது டெபுடி கலெக்டர் மாற்றலாகி வந்திருந்தார். அவர் வீட்டுக்கு அலுவல் காரணமாகத் தியாகராஜன் அடிக்கடி போய் வரவேண்டியதாயிற்று.

டெபுடி கலெக்டர் தியாகராஜனைப் பற்றிய விவரத்தை அவன் வாய் மொழியாகவே கேட்டறிந்த போது அவர் அவனிடம் அதிக வாஞ்சையும் அன்பும் செலுத்த ஆரம்பித்தார். மிக்க மரியாதையுடன் நடத்தவும் தொடங்கினர். இது அவனுக்கு அதிசயமா யிருந்தது. காரணம் சில நாட்கள் சென்ற பின்னரேதான் அவனுக்குத் தெரிய வந்தது. ஆண்டாளை மணக்க எத்தகைய பொருத்தங்களை அவன் பெற்றிருந்தானோ அந்தகைய பொருத்தங்களை அவர் பெண் சுந்தரியை மணக்கப் பெற்றிருந்ததுதான்.

சுந்தரி படித்தவள். கல்லூரி வாயிலையும் கொஞ்சம் எட்டிப் பார்த்து விட்டு வந்தவளே! ஆனால் அவள் அழகு போதாது; நிறமும் கறுப்பு. எனவே அவள் திருமணப் பிரச்னை டெபுடி கலெக்டருக்குப் பெருத்த தலைவலிதான்.

இப்போது தியாக ராஜனைப் பார்த்ததும் அவர் உள்ளத்தில் சபலம் தட்டியது. பையனின் குணமும், அறிவும், வேலை செய்யும் சாமர்த்தியமும் அவரை மயக்கின. அவனைத் தம் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள அவர் மனம் விழைந்தது.

நாளாக ஆக அவர் நோக்கம் அவனுக்கு நன்கு புரிந்தது. இதிலிருந்து தப்பவும் முடிய வில்லை. நாளும் வேலை அங்கே அவனுக்கு.

ஒரு நாள் டெபுடி கலெக்டர், "தியாகராஜன்! இந்த இலாகாவில் முன்னுக்கு வர எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. உன்னைப் போன்ற இளைஞர்கள் நாளைக்கு என்னைப் போல டெபுடி கலெக்டராக வழியிருக்கிறது. ஏன்! ஜில்லாக் கலெக்டராகக்கூட முடியும். எனக்கு மேலிடத்துச் சிபாரிசு நிறைய உண்டு. நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னையும் ஒரு பெரிய அதிகாரியாக்குவது என் பொறுப்பு" என்றார் அவனிடம். அவருடைய உள்ளக் கிடக்கையை அவன் புரிந்து கொண்டான். "எல்லாம் உங்களைப் போலப் பெரியவர்களின் அன்பும் ஆதரவு மிருந்தால், நடக்காதது எது இருக்கிறது!" என்றான் தியாகராஜன் சிரித்துக் கொண்டே.

இன்னொரு நாள், "தியாகராஜன்! நான் இங்கு வந்ததுமே ஒரு நல்ல முடிவு செய்து விட்டேன், அதாவது என் மகள் சுந்தரியை உனக்குக் கலியாணம் செய்து கொடுத்து விடுவது என்று. என்ன சொல்கிறாய்! வீணான யோசனை வேண்டாம். அதிர்ஷ்டம் உன்னை வந்தடைகிறது. பெரிய உத்தியோகமும் என் மூலம் உன்னை அடையப் போகிறது" என்று அவர் மூடி வைத்திருந்த அணுகுண்டை அவன் முன் வீசி யெறிந்தார். அவன் எதிர்பார்த்துப் பயந்தது நடந்தே விட்டது. இதற்கு அவன் எதிர்கால இன்ப வாழ்வு பலியாவதா! உலகம் அவன் கண் முன்னே சுற்றியது. மயக்கம் போடாத குறை ஒன்றுதான்.

"ஸார்! அவகாசம் கொடுங்கள். நானே வந்து பதில் சொல்கிறேன்."

"சரி! நல்லதொரு முடிவுக்கு வர, பகவான் உனக்குப் புத்தி கொடுப்பார்."

தியாகராஜனின் சிந்தனைக்கு இடமில்லாது செய்து விட்டார் டெபுடி கலெக்டர். சுற்றிச் சுற்றி வந்தாலும் போக்கிடமில்லை செக்கு மாட்டுக்கு. உத்தியோக வாழ்வை நம்பிய அவனுக்கு, அவரைப் பகைத்துக் கொள்ளத் திடமில்லை.

ஆண்டாளின் மனத்தில் வளர்ந்து வரும் ஆசைச் செடியைக் கருக்கி விடவே அவன் முனைந்து விட்டான். 'துரோகச் செயல் இது' எனத் தெரிந்த பின்னரும் அதையே அவன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்து விட்டது.

"என் அன்பு மனத்தை ஒடித்து விடாதீர்கள்! பணத்துக்கோ பதவிக்கோ ஆசை வைத்து விடாதீர்கள்!" என்று ஆண்டாள் கனிந்த குரலில் சொல்லியதும், அதற்கு அவன் "மனிதன் சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் கொள்வான். இல்லா விட்டால் அவன் மனிதன் அல்ல, மிருகம்!" என்ற உணர்ச்சி ததும்பும் இந்தப் பேச்சுக்களும் அவன் நினைவுக்கு வந்தன. ஆனால் ஏதோ காதல் கதையில் படித்தது போன்று மறந்துவிட வேண்டியவனாகி விட்டான்.

ஆண்டாள் தீர்க்கதரிசி. அன்றொரு நாள் அவள் சந்தேகித்தபடியே நடக்கப் போகிறது!

தம் வழியில் திரும்பி விட்ட தியாகராஜனின் போக்கு டெபுடி கலெக்டருக்கு மனம் நிறைந்த திருப்தியை யளித்தது.

அடுத்த சில வாரங்களில் தியாகராஜனுக்கும் சுந்தரிக்கும் கல்யாணம் நடந்த செய்தி தம்புசாமியின் கிராமத்துக்கும் எட்டியது. பத்திரிகைகளிலும் இத்திருமணப் படங்கள் வந்தன.

தம்புசாமியும் ராஜாங்கமும் மனம் ஒடுங்கிப் போனார்கள். ஆனால் ஆண்டாள் வருந்த வில்லை. வருந்த என்ன இருக்கிறது! என்ன குடி முழுகிப் போய் விட்டது! பெண்ணென்றால் பல பேர்கள் வந்து பார்ப்பார்கள். கல்யாணம் செய்து கொள்கிறோம் என்று நம்பிக்கை யூட்டுவார்கள். பின் சௌகரியப்படி வேறு இடம் பார்த்துக் கொள்வார்கள். இதற்காக வருந்தினால் சாத்தியப்படுமா! அதைப் போலத்தான் இதுவும்.

கொஞ்சம் நெருக்கமாகப் பழகி விட்டதுதான் தோஷம். அதனால் என்ன! தூய்மையை இழக்க வில்லை. நேர்மைப் பாதையை விட்டு விலகவில்லை. இத்திருப்தி அவளுக்கு ஆறுதல் அளித்தது.

ஸ்திர புத்தி படைக்காத இந்தத் தியாகராஜன் தன் கணவனாக வராத வரையில் அவளுக்கு மன மகிழ்வு கூட. வாழ்க்கை வெள்ளத்தில் எதிர் நீச்சுப் போட முடியாதவனோடு எப்படிக் காலமெல்லாம் வாழ்வது!

ஊருக்கு ஒரு வாய் இல்லை. மூடி விடவும் ஆகாது. இதற்கு அஞ்சினாலும் முடியாது. தன் நெஞ்சைத் தானே வஞ்சிக்காத வரை, துணிவுடன் வாழத் தயக்கம் வேண்டியதில்லை.

படித்து ஞானம் பெற்ற ஆண்டாளின் ஆறுதல் மொழி கேட்ட அவர்கள் வருத்தம் விடுத்தனர்.

"என் பரிசுத்தத் தன்மையை உணர்ந்து, என்னை மணக்க வருகிறவனை நான் மணப்பேன். அதுவும் அவன் நேர்மை யறிந்த பின்னர்தான். இல்லாவிடில் கடைசி மூச்சு உள்ளளவும் நான் கன்னிப் பெண்ணாகவே காலம் தள்ளிவிட முடியும்" என்ற ஆண்டாளின் மனத் திடத்தைத் தம்புசாமியும் ராஜாங்கமும் மெச்சி வியந்தனர். இத்தகைய பெண்ணைப் பெற்ற பெருமை அவர்களுக்குப் பிடிபடவில்லை.

காலம் நீதி, அநீதியைப் பார்ப்பதில்லை. இதையெல்லாம் கண்ணுற ஓய்ச்சல், ஒழிவு ஏது அதற்கு! எனவே நாட்கள் நில்லாது சென்றன.


ஆண்டாளின் பள்ளிப் படிப்பு முடிந்தது. எஸ். எஸ். எல். ஸி. படிப்பில் தேறி விட்டாள்.

அடுத்த படியாகத் தங்கையைப் போதனா முறைப் பள்ளியில் சேர்த்து, உபாத்தியாயினி வேலை பார்க்கும்படி செய்து விடலாம் என்ற ஒரு அரிய யோசனையை ராஜாங்கம் சொன்னான். இதற்கான முயற்சியில் ஈடுபடவும் முனைந்தான்.

ஆனால் இம் முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆண்டாளின் கல்யாணப் பேச்சு மறுபடியும் ஆரம்பமாகியது.

உயர்தரமான லன்ஸ்...பாஸ்ட் ஷட்டர் விலை ரூ.160/-மட்டுமே!

புது ஸிக்ஸ்-20 "கோடக்" மாடல் A காமரா





அருமையான படங்கள் —எப்பகலிலும்.

மங்கிய ஒளி படம் பிடிப்பதிலிருந்து உங்களை தடுக்க வேண்டாம்! பாஸ்ட் லென்ஸ் f4.5 வரை விரிகிறது. அதிப்ரகாசமான ஒளிகளிலும், நிழல் சூழ்ந்த வராண்டாக்களிலும் ஒரே போல. அதிகாலையிலிருந்து, நேரம் சென்ற மாலை வரை, ஸ்னாப் ஷாட்கள் எடுத்துக்கொள்ளலாம்.



இரவிலும் கூட.

சூரியன் மறைந்த பிறகோ அல்லது உள், பகலொளி இல்லாத கூடத்திற்குள்ளோ படம் பிடிக்க வேண்டுமா? ஒரு "கோடக்" ப்ளாஷ் ஹோல்டரை சேர்த்துக்கொள்ளுங்கள், ப்ளாஷ் மிக எளிதானது — ப்ளாஷ் பல்புகளுக்கு வேண்டும் பணம் அவைகள் வீண் போகாமல் செய்துத்தரும் பிம்பங்களிலிருந்தே உங்களுக்கு கிடைத்து விடும்.



ப்ரயோஜனமுள்ள வேறிய ஷட்டர் ஸ்பீடுகள்.

ஈஸி ஆட்டோமாடிக் செட்டிங்ஸ் 1/25 லிருந்து பாஸ்ட் 1/150 செகண்டு வரை, பல்ப் இன்னும் டைம் எக்ஸ்போஷர்களுடன். எந்த காமராக்களிலும் மிக ஒத்தாசையளிக்கும் ஸ்பீடுகள் இவைதான்—துரிதமான ஆக்ஷன் (செயல்) படங்களுக்கும் சாவகாசமாக எடுக்கும் ஸ்னாப் ஷாட்களுக்கும் ஒரே போல உத்தமமானது.



மிகப் பெரிய படங்கள்

உங்களுக்கு பிரியமான 2¼ x 3¼ அங்குலம் சைஸ், ஒரே ரோலிலிருந்து எட்டு ஸ்னாப்ஸ் உங்கள் போட்டோ ஆல்பத்தில் அவை எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கும்.

அழகான நேசக்காட்சிகளிலிருந்து— சித்திரங்கள்

எதையும் படம்பிடியுங்கள். 3½ அடியிலிருந்து, அடி வானம் வரை எந்த தூரத்திலிருக்கும் கவர்ச்சியான போஸ்களில். நீங்கள் பிடிக்கும், மெய்த்தோற்றம் கொடுக்கும் க்ளோஸ்-அப் படங்களைப்பார்த்து உங்கள் நண்பர்களும் குடும்பத்தினரும் பெருமைப்படுவார்கள்.



நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த காமரா நீங்கள் குறிப்பதற்கு தயாராக இருந்த விலைக்கு

"கோடக்" டைப் K A ப்ளாஷ் ஹோல்டர்—	ரூ. 22/12/-
பதியிட்ட அசல் தோல் கேஸ்	ரூ. 22/-

மேல் தந்திருக்கும் விலைகளில் செயில்ஸ் டாக்ஸ் சேராது

உங்கள் "கோடக்" வியாபாரியை இன்றே பாருங்கள்.

கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)
பம்பாய் – கல்கத்தா – டில்லி – மதறாஸ்

இன்னும் ஏராளமானவை! வெவ்வேறு போட்டோக்ராபர்களுக்கும் விதவிதமான காமராக்கள் "கோடக்" இடம் இருக்கிறது—ஏராளமான வகைகள். ரூ. 17/8/-லிருந்து மேல். உங்கள் "கோடக்" வியாபாரியிடம் சென்று இன்றே உங்களுக்கு பிரியமான காமராவை பொறுக்கிக்கொள்ளுங்கள்!

K. 9014

இம்முறை நாலைந்து கிராமங்களுக்கு அப்பாலிருந்த ஊர்க்காரனாகிய பட்டாளத்துக்காரன் மேஜர் அம்பலவாணன் தன் பெற்றோர்களுடன் ஆண்டாளைப் பெண் கேட்கத் தம்புசாமி வீட்டைத் தேடி வந்து விட்டான்.

மேஜர் அம்பலவாணன் அங்கு வருவதற்கு முன்பே, அவனைப் பற்றிய விவரங்கள் ஆண்டாள் உள்படத் தம்புசாமியின் குடும்பத்தாருக்குத் தெரிந்தே யிருந்தன.

மேஜர் அம்பலவாணன் சாதாரண எஸ். எஸ். எல். ஸி. படிப்போடு, வேலை ஏதும் கிடைக்காது, பட்டாளத்துக்கு ஆள் எடுக்கும் காரியாலயத்தின் மூலம் ஹவில்தார் குமாஸ்தாவாகி, கடல்தாண்டித் தாண்டிப் பலஊர்களில் விசுவாசமாக யுத்தசேவை செய்து, தீரச் செயல்கள் புரிந்து மேஜர் பட்டமும் பெற்றிருந்தான். யுத்தம் முடிந்து அவன் ஊர் திரும்பியே மூன்று மாசங்கள் தானாகி யிருந்தன. அவன் யுத்த சேவைக்குப் பின், சர்க்கார் மனமுவந்து தன் பாராட்டைத் தெரிவிப்பது போன்று அவனை சப் ரிஜிஸ்டிராராக நியமனம் செய்திருந்தது. அவன் வேலைக்குப் போகுமுன் தான் இப்படிக் கல்யாண ஏற்பாடு. மேஜர் அம்பலவாணன் நல்ல குணசாலி. சாதுவான தோற்றம். நேர்மையான போக்கு.

இப்பொழுது அந்த அம்பலவாணனே ஆண்டாளைப் பெண் கேட்க வந்திருக்கிறான். தம்புசாமிக்கும் ராஜாங்கத்துக்கும் மனசில் மகிழ்வு.

பெண் பிடித்தது. கல்யாணத்துக்கு நிச்சயித்துத் தேதி குறிக்க வேண்டியதுதான் பாக்கி.

இந்த சம்பந்தத்துக்கு அறிகுறியாகத் தம்புசாமி வீட்டில் நல்ல விருந்தும் நடந்தது.

மாலை வேளை நெருங்கி வந்தது.

மேஜர் அம்பலவாணன் காற்றாட ஆற்றங் கரையில் நடந்து கொண்டிருந்தான். அப்போது அங்கே அவனைத் தேடிக் கொண்டு வந்தவன் போல் செல்லப்பன் வந்து சேர்ந்தான்.

செல்லப்பனே பேச ஆரம்பித்தான்:

"ஐயா! உங்களுக்குத் தம்புசாமியின் மகளைப் பேசி நிச்சயித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் எனக்குத் தெரிந்த விஷயம் ஒன்றையும் உங்களிடம் சொல்ல வேண்டும். நாளைக்கு மண வாழ்க்கை கசந்து போகாமல் இருப்பதற்கு இது அவசியம். ஆண்டாளின் நடத்தை போதாது. அவள் ஏற்கெனவே கசக்கி எறிந்த மலர். அவள் வாழ்வில் நஞ்சைக் கலந்தவன் தியாகராஜன் என்ற ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர். அவர்கள் ஒன்றாகப் போவதும் வருவதும் இந்த ஊர் அறிந்த ரகசியம். நீங்கள் யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பார்க்கலாம். அவள் வஞ்சிக்கப்பட்டவள். இவ்வளவுதான் நடந்த சமாசாரம். யோசித்து முடிவு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு" என்றான் அவன். இதற்காக அவன் எத்தனை நாட்கள் காத்திருந்தானோ!

"ஐயா, நான் யாரையும் போய்க் கேட்க வேண்டியதில்லை. உண்மை எது, பொய் எது என்று ஆராயவும் வேண்டியதில்லை. கல்யாணத்துக்கு முன் ஒரு ஆணும் பெண்ணும் பேசிப் பழகுவதில் குற்றமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கோள் சொல்லிப் பகை மூட்டும் உங்கள் நடத்தைதான் எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் புத்திமதி எனக்குத் தேவையில்லை. நன்றி" என்று செல்லப்பன் முகத்திலடித்தாற்போல் பேசிவிட்டு அப்பால் நகர்ந்தான் மேஜர் அம்பலவாணன்.

அம்பலவாணன் வீடு திரும்பியபோது ஆண்டாள்தான் வீட்டில் இருந்தாள். வேறு யாரையும் அங்கே காணோம். மற்றவர்கள் வேண்டுமென்றே அப்பால் போய் விட்டார்களோ என்னவோ!

அவன் திண்ணையில் உட்கார்ந்ததும், ஆண்டாள் கதவோரம் வந்து நின்று கொண்டாள்.

"உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும். கல்யாணத்துக்கு முன் இது அவசியம் என்று கருதுகிறேன். பேசலாமா!" என்றாள்.

"எதையும் தாராளமாகச் சொல்லலாம். அறுத்துப் பேசிக் கொள்வது எப்போதுமே நல்லது" என்றான் அம்பலவாணன்.

"உங்களைப் பற்றி நிறைய நிறைய கேள்விப் பட்டு விட்டேன். உங்களிடத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிறது என்னைத்தான் நீங்கள் நம்ப வேண்டும். ஊரில் பலர் பல மாதிரி பேசிக் கொள்வார்கள். அதற்குச் செவி சாய்ப்பதாக இருந்தால் என்னை மணக்க வேண்டாம். தியாகராஜன் என்பவரை நான் மணப்பதாக இருந்தது. கூடி வருவதாக யிருந்த கல்யாணம் நிச்சயமாகாமலே போய் விட்டது. நானும் அவரும் சகஜமாகப் பழகினோம். ஆனால் வரம்பு முறை தவறவில்லை; எல்லைக் கோட்டைத் தாண்டவில்லை. படிதாண்டிப் படிக்கப் போன எனக்கு இது தவறாகவும் படவில்லை. நான் நடத்தை கெட்டவள் என்று இன்றில்லா விட்டாலும், நாளை எவனாவது உங்களுக்குச் சொல்ல வருவான். இன்று வரை பண்பை இழக்கக் கூடாது என்ற திடசித்தத்தை இழக்கவில்லை; குலைய விடவில்லை. மாசு பூண்டவளாக யிருந்தால், எப்போதோ நொப்பும் நுரையுமாகப் போகும் இந்த ஆற்று வெள்ளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன். 'நேர்மையோடு இருக்கும் வரை எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை.' இது கல்வியறிவு தந்த போதனை. கல்யாண மில்லாமலே தூய்மை நெறியில் என்னால் வாழ முடியும். என்னை நம்புவதாக இருந்தால் மணந்து கொள்ளுங்கள்" என்று கூறி முடித்த போது கண்ணீர் வெள்ளம் அவளைக் கரைக்க முயன்றது. பண்பில் தோய்ந்த பெண்மைதான் அவள் பேச்சிலிருந்தது.

"அடடா! நான் அவ்வளவு முட்டாள் அல்ல. எதையும் சீர் தூக்கிப் பார்க்கும் திறன் உண்டு. உன்னைப் பற்றி நிறைய நிறைய விசாரித்து நான் தெரிந்து கொண்டு விட்டேன். வேறு விதமாகக் கேள்விப்பட்டிருந்தால் நான் ஏன் இங்கே வருகிறேன்! பிறர் வாழ்க்கையைக் கண்டு பொறாமைப் படும் இந்த ஜனங்களுக்கு என்ன தெரியும்! கல்யாணமானாலும் சரி, ஆகா விட்டாலும் சரி, ஒரு ஆணும் பெண்ணும் தனித்துப் பேசினாலும் இந்த ஜனங்களுக்குக் குற்றம். தவறான நினைவு தான் தோன்றும். அறிமுகமில்லாத இடத்தில் அண்ணனும் தங்கையும் சேர்ந்து பேசி, சிரித்துக் கொண்டு போனாலும் மாசு கற்பித்து விட இவர்கள் துணிந்து விடுவார்கள். நான் உலகம் சுற்றியவன். எல்லாம் தெரிந்தவன். உன்னை நான் சந்தேகிக்கவில்லை. மனப் பூர்வமாகவே மணக்க வந்திருக்கிறேன். இருண்ட வாழ்வுக்கு ஒளி தேடி வந்தவனிடம் எதை எதையோ பேசுகிறாய். கவலை வேண்டாம்! கட்டிக் காத்துக் காப்பாற்றுவேன். இது சத்தியம்" என்று மேஜர் அம்பலவாணன் உணர்ச்சியோடு பேசினான்.

அவனுடைய பரந்த நோக்கின் முன்பும் கடல் போன்ற விசாலமான அறிவின் முன்பும் எந்தத் துளி விஷமும் வேலை செய்யவில்லை.

கிரகணம் நீங்கிய முழு நிலாவைப் போல ஆண்டாளின் முகமும் அப்போதே மலர்ச்சியினால் மலர்ந்து மேலும் பொலிவு பெற்று விளங்கியது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10.



உங்கள் எல்லோரா

ஜடைச் சிங்காரத்தின் அழகைப் பூர்த்திசெய்ய

கலிபோர்னியன் பாப்பி

(ரெஜிஸ்டேர்ட் டிரேட் மார்க்)

கூந்தல் தைலம்
உபயோகியுங்கள்

இனம்!

இந்த ஜடைச் சிங்காரத்தைப் பற்றிய தகவல்களைத் தரும் ஆண்டுப் பிரசுரம் நெ. 7க்கு ஒரு அணா தபால்தலையுடன் விளம்பர இலாகா, தபால் பெட்டி நெ. 822, பம்பாய் 1க்கு எழுதுங்கள். இந்த ஆண்டுப்பிரசுரம் தனித்தனியாக தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது.



இராஸ்மீக் கம். லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது. CPH. 15-50 TM

REGISTERED No. M. 4392


Registered as a news paper in Ceylon

"வெண்மையான, சுத்தமான லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார் எம். வி. ராஜம்மா



இந்தியாவில் தயாரித்தது.



இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யௌவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"... அதனால்தான் என் வதனத்தை அழகாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 420-50 TM